# நெய்தல்
# Neithal

இழைத்தல், இணைத்தல், ஆக்கம் ஜனவரி – ஜீன் 2024 தொகுதி 15 எண் 01

கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka

# நெய்தல்

இழைத்தல், இணைத்தல், ஆக்கம்

தொகுதி:15 எண்:01

வெளியீடு:

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

2025

# Neithal

A bi – annual peer reviewed journal of the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka Vol:15 No:01

**Editorial Boad**

Chief Editor : Dr.N.Vaman

Administrative Editor : Mrs. G.Luxmykanthan

Editorial Board Members : Mrs. M.Sivakumaran

Mrs. V.Dilaxshan

Copy Right © : Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka

Publishing Year : January – June 2024

ISSN : 20126513

## நெய்தல்

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தினால் நெய்தல் என்னும் பெயரில் வருடம் இரண்டு தடவைகள் வெளியிடப்படும் ஆய்வு இதழ் – தொகுதி 15, எண் 01

பிரதம ஆசிரியர் : கலாநிதி நா.வாமன்

நிருவாக ஆசிரியர் : திருமதி கௌரி லக்சுமிகாந்தன்

ஆசிரியர் குழு : திருமதி மேகலா சிவகுமாரன்

திருமதி விதுக்ஷனா டிலக்ஷன்

பதிப்புரிமை : கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பதிப்பு ஆண்டு : ஜனவரி – ஜீன் 2024

நெய்தல் தொகுதி 15, எண் 01 இல் வெளிவந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் ஆசிரியர்களுக்குரியதாகும். இவைகளுக்கு கலை கலாசார பீடமோ, கட்டுரை ஆசிரியர்களின் துறையோ, ஆசிரியர் குழுவோ எவ்வகையிலும் பொறுப்பல்ல.

# ஆசிரியர் குறிப்பு

ஆய்வு என்பது அறிவுப் பரம்பலில் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றது. ஆய்வுகளின் மூலமாக வெளிப்படும் புதிய அறிவுத் தேட்டம் சமூகத்தினை காலத்திற்குக் காலம் வலுப்படுத்துகின்றது; வளப்படுத்துகின்றது. அவ்வகையில், இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடமானது சமூகத்திற்குப் பயன்படும் வகையில் "நெய்தல்" ஆய்வுச் சஞ்சிகையினை வெளியிடுகின்றது. ஆண்டிற்கு இரு இதழ்கள் என்ற அடிப்படையில் இவ்வாய்விதழ் வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வரிசையில் இதழ் பதினைந்தின் முதற்தொகுதி, ஒன்பது ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியதாக வெளிவருகின்றது. இலக்கியம், கல்வி, சமயம், தத்துவம் எனும் பொருண்மைகளை வெளிப்படுத்துபவையாக அவை அமைந்துள்ளன. கிழக்குப் பல்கலைக்கழக புலமையாளர்களின் பங்களிப்போடும் பிற பல்கலைக்கழக புலமையாளர்களின் பங்களிப்போடும் மலர்ந்துள்ள இவ்விதழ் ஆய்வுப் புலத்தை அணிசெய்யும் என்பது நிச்சயம்.

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட அவை, 2024ஆம் ஆண்டுக்கான இதழ் பதினைந்தின் இரு தொகுதிகளை வெளியிடும் பொறுப்பினை அவ்வருட இறுதிப் பகுதியிலேயே எமக்கு வழங்கியிருந்தது. முற்பட்ட சில இதழ்களின் காலதாமதமே இதற்குக் காரணமாகும். மூன்று மாத காலப்பகுதிக்குள் இவ்விதழை எம்மால் வெளிக்கொணர முடிந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் உரிய காலப்பகுதிக்குள் இதழை வெளியிடுவதற்கு இச்செயற்பாடு முன்னுதாரணமாக அமையும் என்று நம்புகின்றோம்.

அந்த வகையில், இவ்விதழ் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய துணைவேந்தர், கலை கலாசார பீட பீடாதிபதி, கட்டுரை ஆசிரியர்கள், மீளாய்வாளர்கள், ஆசிரியர் குழுவினர், தகவல் தொழில்நுட்பத் துறை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பிரதம ஆசிரியர்**

**கலாநிதி நா.வாமன்**

# பீடாதிபதியின் செய்தி

"கல்வி என்பது தகவல்களை சேகரிப்பதல்ல, அது சிந்திப்பதற்காக மூளையைப் பயிற்றுவிப்பதாகும்" என்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் கூற்றுக்கிணங்க ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் களமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின், கலை கலாசார பீடத்தினால் வருடா வருடம் வெளியிடப்படும் "நெய்தல்" சஞ்சிகை அமைந்துள்ளது. அதற்கு வாழ்த்துரையை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அறிவைக் கடத்துவது மாத்திரம் ஆசிரியர்களின் கடமையல்ல. நிகழ்கால உலக மாற்றத்தில் நிகழும் சவால்களுக்கேற்ப மாணவ சமுதாயத்தை உருவாக்குவதோடு, தன்னையும் இற்றைப்படுத்திக் கொள்ளும் பொறுப்பும் ஆசிரிய சமூகத்தையே சாரும். இதற்குத் துணை புரிவதே "ஆய்வு" ஆகும். இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி, பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு 2024ஆம் ஆண்டுக்கான சஞ்சிகையாக நெய்தல் சஞ்சிகை வெளிவருவதையிட்டு பேருவகை அடைகின்றேன். இச்சஞ்சிகை உங்களுக்கு மட்டுமல்லாது சமூகத்திற்கும் பயனுடையதாக அமையும் என எண்ணுகின்றேன்.

இதன் பொருட்டு தமது பல்வேறு கடமைகளுக்கும், பொறுப்புகளுக்கும் மத்தியில் அர்ப்பணிப்புடன் கருமமாற்றிய பிரதம பதிப்பாசிரியர் கலாநிதி நா. வாமன் அவர்களுக்கும், அவருடைய ஆசிரிய குழுவினர்களுக்கும் மற்றும் கட்டுரை ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதோடு தொடர்ந்தும் பீடத்தின் சகல முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

**கலாநிதி வ. குணபாலசிங்கம்**

**பீடாதிபதி,**

**கலை கலாசார பீடம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

# பொருளடக்கம்

1. வாய்மொழி வரலாற்று முறையியலும் அதன் பிரயோகமும் 1

2. Assistive mechanisms for Students with Disabilities (SWDs) in Sri Lankan State University System 14

3. இடைக்கால இலங்கையில் இந்துக்கோயில் மற்றும் பௌத்த விகாரை நிர்வாகம் 24

4. திரைப்படம் பற்றிய பெஞ்சமினின் சிந்தனைகள் – ஒரு பின் நவீனத்துவ நோக்கு 35

5. The Enduring Influence of Stoicism: From Enlightenment Philosophy to Twentieth-Century Psychological Practices 47

6. வாசுதேவன் கவிதைகளின் படைப்பாக்க உத்திகள் குறித்த உசாவல் 67

7. கீரிமலை – கூவில் பிரதேச அண்ணமார் கோயில் வழிபாடு: வரலாறும் பண்பாட்டு மாற்றமும் 83

8. பல்லின சமூகச் சூழலில் சமயக் கலந்துரையாடலும் இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் அதன் நடைமுறையும் : ஓர் இஸ்லாமிய நோக்கு 98

9. இலங்கையில் தமிழாராய்ச்சியின் வளர்ச்சி : 1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகள் குறித்த மதிப்பீடு 118

# வாய்மொழி வரலாற்று முறையியலும் அதன் பிரயோகமும்
# Methodology of oral history and its application

Prof. S.Santhirasegaram

Professor in Tamil

Department of Tamil Studies

Eastern University, Sri Lanka

***Abstract***

*The history has been constantly constructed around the stories and lifestyles of the ruling classes. However, in recent times, there has been a shift toward documenting the social histories that focusing on the experiences of ordinary people. As result of this, this shift has encouraged efforts to construct social histories using folk traditions as evidence. Nevertheless, since these traditions originate and are transmitted within specific regional communities, they often reflect strong influences of caste, religion, region and professional biases. Therefore, certain methodologies have been proposed to be followed while using such oral traditions as historical evidence. Based on this, this study examines the historical narratives associated with an oral story about the Murugan Temple in Mandur, a village in Batticaloa, through the lens of oral historical methodology. Written records, temple worship traditions, caste and social customs, and collective memories are compared in this process. A major issue in social history writing is the tendency of historians to either disregard oral traditions as valid historical evidence or, conversely, to accept them as definitive history without critique. This study is based on finding a solution to this. The study aims to introduce the methodologies required for using oral traditions as historical evidence and to demonstrate how these methodologies can be applied to validate oral traditions as historical sources. Using oral history as a framework, the study compares oral traditions with other forms of evidence, such as written records and collective memories. The outcome of this research is the reconstruction of the history of a community, illustrating how oral traditions, when critically evaluated and supplemented by other sources, contribute to the creation of a more inclusive historical narrative.*

***Key words:*** *Oral traditions, customs, methodology, collective memory, reconstruction*

## அறிமுகம்

வரலாறு என்பது கடந்த காலத்தை மீட்டுருவாக்கம் செய்வதையும் அக்காலத்தைப் புரிந்துகொள்வதையும் உள்ளடக்கியது. ஆனால், வரலாறு என்பது அதிகார வர்க்கத்தினரின் வரலாற்றையும் வாழ்வியலையும் முதன்மைப்படுத்திய ஒன்றாகவே தொடர்ந்து கட்டமைக்கப்பட்டு வந்திருக்கின்றது. வரலாற்று ஆய்வாளர்கள் பயன்படுத்தும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியங்கள், நாணயங்கள் முதலான வரலாற்று ஆவணங்கள் அதிகாரம் மிக்கவர்களுக்குச் சார்பானவையாக இருந்தமையால் அவை சாதாரண மக்களின் வரலாற்றையோ வாழ்வியலையோ பெரிதுபடுத்தவில்லை. ஆனால், அண்மைக்காலமாக இந்தப் போக்கில் இருந்து விடுபட்டு சாதாரண மக்களை மையப்படுத்திய சமூக வரலாற்றை எழுதுகின்ற போக்கொன்று வளர்ந்துகொண்டு வருகின்றது. இத்தகைய வரலாற்று எழுதியலுக்கான முதன்மைச் சான்றுகளில் நாட்டார் வழக்காறுகள் பிரதானப்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஆய்வுப் பிரச்சினை

வாய்மொழிச் சமூகம் தம் வரலாற்றை வழக்காறுகளின் வழியாகச் சேமித்து வைத்திருக்கின்றது. ஆனால், வரலாற்று ஆய்வாளர்கள் அவற்றை வரலாற்று ஆதாரங்களாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து வந்துள்ளமையால் அந்த வரலாறு உண்மையான சமூக வரலாறாக அமையவில்லை. இது வரலாற்று எழுதுகையில் பெரும் குறையாக இருந்து வருகின்றது.

## ஆய்வு நோக்கம்

வாய்மொழி வழக்காறுகளை வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுத்தும் போது எத்தகைய முறையியல்களைப் பின்பற்றவேண்டும் என்பதை அறிமுகப்படுத்துவதும் வாய்மொழிக் கதையொன்றில் அந்த முறையியல்களைப் பிரயோகித்துப் பார்த்து வரலாற்று உண்மையை நிறுவிக் காட்டுவதும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

## இலக்கிய மீளாய்வு

நாட்டார் வழக்காறுகளை வரலாற்று ஆதாரங்களாகப் பார்க்கும் சில ஆய்வுகள் தமிழகத்திலே வெளிவந்திருக்கின்றன. இதில் ஆ.சிவசுப்பிரமணியத்தின் 'வரலாறும் வழக்காறும்' என்ற நூல் வழக்காறுகளின் துணையுடன் தமிழ்நாட்டின் சமூக வரலாற்றை எழுதமுடியும் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அவரது மற்றொரு நூலான 'அடித்தள மக்கள் வரலாறு' என்ற நூல் மாற்று வரலாற்றுக்கான தரவுகளாக வாய்மொழி வழக்காறுகள் அமையுமாற்றை எழுத்தாவணங்களையும் வாய்மொழி வழக்காறுகளையும் இணைத்து நோக்கி நிறுவுவதாக அமைந்துள்ளது. மேலும், ஞா.ஸ்டீபனின் 'தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள்' என்ற நூல் குமரி மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட இரு பழமரபுக் கதைகள் எவ்வகையில் வரலாற்றைப் பதிவுசெய்துள்ளன என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இலங்கைத் தமிழர்கள் மத்தியில் வழங்கும் வழக்காறுகள் பற்றி இத்தகைய நோக்கிலமைந்த ஆய்வுகள் என்ற வகையில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை 2004 ஆம் ஆண்டு வெளியிட்ட "வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக" என்ற ஆய்வரங்கக் கட்டுரைத் தொகுப்பு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நூலாகும். அந்நூல் வாய்மொழி மரபுகளை வரலாற்றுடன் இணைத்து நோக்குவதும் மட்டக்களப்பின் சமூக அரசியல், பண்பாட்டு வரலாற்றை விளங்கிக் கொள்வதில் அவை வகிக்கக் கூடிய பங்கினைப் பரிசீலிப்பதுமாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும்

இந்நூல் வாய்மொழி வரலாற்று முறையியலின் நியமங்களை முற்றிலும் தழுவியதாக அமையவில்லை.

**ஆய்வு இடைவெளி**

இலங்கைத் தமிழ்ச் சூழலில் நாட்டார் வழக்காறுகளை வாய்மொழி வரலாற்று முறையியலுக்கூடாக அணுகுவதாகவோ, கிழக்கிலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் முக்கியம் பெறும் கோயிலை மையப்படுத்தியதும் சாதி ஒழுங்கமைவை உட்கொண்டதுமான குடியேற்ற மரபை நாட்டார் வழக்காறுகளை ஆதாரங்களாகக் கொண்டு நோக்குவதாகவோ ஆய்வுகள் இடம்பெறாத நிலையில் இந்த இடைவெளியை நிரப்புவதாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வு வாய்மொழி வரலாற்று முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வில் கள ஆய்வின் மூலம் திரட்டப்பட்ட குறித்த வரலாற்று நிகழ்வு தொடர்பான வாய்மொழிக் கதை, அதன் மாற்று வடிவங்கள், சமூக நினைவுகள், தகவல்கள் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டு பிரதான மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுக் கருத்துரை**

**வாய்மொழி வரலாற்று முறையியல்**

இந்தியாவைப் பொறுத்தவரை 1980 களின் தொடக்கத்தில் அடித்தள மக்களின் வரலாற்றாய்வு என்ற புதிய கருத்தாக்கம் உருவானது. இதன் பயனாக நாட்டார் வழக்காறுகளை சான்றுகளாகக் கொண்ட சமூக வரலாற்றை உருவாக்கும் பணிகள் முனைப்புற்றன. ஏனெனில், சாதாரண மக்களை மையமாகக் கொள்ளும் வரலாற்று எழுதியலுக்கான அடிப்படைச் சான்றுகளில் நாட்டார் வழக்காறுகள் இன்றியமையாதவையாக அமைந்தன. வாய்மொழிச் சமூகம் வரலாற்றை வழக்காறுகளின் வழியாகச் சேமித்து வைத்திருப்பது இயல்பானது. இத்தகைய சூழலில் நாட்டார் வழக்கியல் கூறுகளை வரலாற்று ஆதாரங்களாகப் பயன்படுத்தும் முறை ஒரு கோட்பாடாகவும் முறையியலாகவும் வளர்ந்தது. நாட்டார் வழக்கியல் ஊடான வரலாறு என்பது வரலாற்றை உருவாக்கப் பயன்படும் ஒரு முறையியலாக அமைந்தது. வாய்மொழி வரலாறு என்பது அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு, பொருளாதார வரலாறு போன்று வரலாற்றின் ஒரு பிரிவன்று. இது ஒரு வரலாற்று முறையியல் (Methodology) ஆகும் என்பார் லுமிஸ் (Lummis) (மேற்கோள்: சிவசுப்பிரமணியன்,ஆ., 2016:5). அதேவேளை, இது வரலாற்று ஆவணப்படுத்தலின் நவீன யுக்தியாகவும் அமைந்தது. ஜார்ச் லாரன்ஸ் கொம்மே என்பவர் 1908 இல் எழுதிய **"Folklore as an Historical Science"** என்ற நூலில் நாட்டார் வழக்காற்றியல் ஒரு வரலாற்று அறிவியல் என்பதை நிறுவியுள்ளமை இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

ஆயினும், இந்த வழக்காறுகள் குறிப்பிட்ட பிரதேச மக்களிடம் உருவாகி வழங்கி வருவதன் காரணமாக அவற்றில் சாதி, சமயம், வட்டாரம், தொழில் சார்புகள் அழுத்தம் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆகவே, இத்தகைய ஆவணத்தை வரலாற்று ஆவணமாகப் பயன்படுத்துமிடத்துப் பின்பற்றவேண்டிய சில முறையியல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றாசிரியன் ஆவணத்தை ஆராய்ந்து அதன் பொருளைக் கண்டுபிடிக்கும்வரை ஆவணத்துக்கு அர்த்தம் கிடையாது என்று வரலாற்றறிஞர் ஈ.எச்.கார் கூறுவது

வாய்மொழி வரலாற்றாய்வுக்கும் பொருத்தமானதாகும். எனவே, வாய்மொழி வரலாற்றாவணங்களில் இருந்து உண்மையைக் கண்டறிந்த பின்பே அவ்வாவணத்தைச் சான்றாகப் பயன்படுத்த முடியும். முக்கியமாக மரபுவழி வரலாற்றாய்வில் ஆவணங்களை ஏனைய தரவுகளுடன் ஒப்பீடு செய்து ஒரு முடிவுக்கு வருவது போன்று இந்த ஆவணங்களையும் பயன்படுத்தி உண்மையைக் காண வேண்டும். அதாவது, ஆவணத்தை விமர்சனத்தோடு ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

Oral Tradition – A Study in Historical Methodology என்ற நூலை எழுதிய ஜான் வன்சினா இது பற்றிப் பின்வருமாறு கூறுவார்: "வாய்மொழி மரபிலிருந்து பெறக்கூடுமாக இருக்கின்ற தகவல்களுக்கு ஓர் எல்லையுண்டு. அதனை வரலாற்று ஆசிரியன் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அதாவது, வாய்மொழி மரபுகளை மட்டும் கொண்டு வரலாற்றை எழுதாமல் எழுத்துமூல ஆவணங்கள், தொல்லியல் ஆய்வு, பண்பாட்டு வரலாறு, மொழியியல், உடல்கூற்று மானிடவியல் முதலான ஏனைய வரலாற்றுப் புலங்கள் சார்ந்த தகவல்களின் துணைகொண்டு அதனை எழுதவேண்டும்" (1961:182).

அதேவேளை, எழுத்து வடிவிலான ஆவணங்களுடன் மட்டுமின்றி நாட்டார் வழக்காற்றியலின் பல்வேறு வகைமைகளுடனும் அவற்றைப் பொருத்தியும் ஒப்பிட்டும் பார்த்து முடிவுகளுக்கு வருதல் வேண்டும். எனவே, கள ஆய்வில் வாய்மொழி வழக்காறுகளைச் சேகரிக்கும்போது குறித்த விடயம் தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட வழக்காறுகளைச் சேகரித்தல் அவசியம். அதேவேளை அவற்றைக் கூறுவோரின் சமூகச்சார்பு நிலையைக் கண்டறிவது அவசியம். ஏனெனில், அவரது சமூகச் சார்பு அவர் கூறும் வழக்காற்றில் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

ஒரு வாய்மொழி ஆவணத்தின் சமூக வரலாற்று உண்மையை ஆதாரப்படுத்துவதற்கு வேறு எழுத்தாவணங்களோ, தொல்லியல் சான்றுகளோ இல்லாத சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். அந்நிலையில் குறித்த நிகழ்வு பற்றிப் பேசும் வேறு வாய்மொழி ஆவணங்களையும் சமூக நினைவுகளையும் ஒப்பியல் நோக்கில் பார்த்து உண்மையை நிறுவுவது அவசியமாகும். இது வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாட்டுடன் தொடர்புபட்டது. அதாவது, சரியான வேறுவகை ஆதாரங்கள் கிடைக்காத காலகட்டங்களின் வரலாற்றை நாட்டார் வழக்காறுகளையும் நாட்டார் வாழ்வியல் சார்ந்த பொருட்களையும் அடிப்படைச் சான்றுகளாகக் கொண்டு மீண்டும் வரலாற்றை உருவாக்க முனைவது வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு எனப்படும். **ஜார்ச் லாரன்ஸ் கொம்மே** இக்கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு நிலப்பகுதியில் வந்து குடியேறியும் வென்று குடியேறிக் கலந்து வாழும் பல்வேறு இன மக்களின் பரம்பரை வழக்காற்று மரபுகளை படிவம் படிவமாகத் தனித்தனியாகப் பிரித்தெக்க முடியும் என்பதை நிறுவினார். இங்கிலாந்தில் கிராமிய நாட்டார் வழக்காறுகளில் கலந்து காணப்படும் ஆரியப் பழக்கங்களையும் ஆரியருக்கு முந்திய பழக்கங்களையும் அவர் பிரித்தறிய முடியும் என்று கண்டு முந்தைய பண்பாட்டு நிறுவனங்களை மீட்டுருவாக்கம் செய்தார் (லூர்து, தெ., 2000: 31–32).

வாய்மொழி ஆவணங்களில் துணையுடன் சமூக வரலாற்றை எழுதுகின்றபோது அதில் சமூக நினைவுகளுக்கும் முக்கிய பங்குண்டு. பீட்டர் பர்க் என்பவர் History as Social Memory என்ற நூலில் இதனை நிறுவியுள்ளார். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வரலாறு அச்சமூகத்தின் நினைவுகளில் எவ்வாறு வாழ்கின்றது என்பதை அவர் எடுத்துக்காட்டுகின்றார். வரலாறு என்பதுகூட நினைவுகளைப் பற்றி சுருக்கமாகவோ, சூக்குமமாகவோ பேசுகின்ற முறைதான் என்பார் அஸ்றிட் எர்ல் (Astrid Arll,2008). வாய்மொழி

ஆவணத்தின் வரலாற்றியல் அம்சங்களை உறுதிப்படுத்துவதற்கு அது முக்கிய தரவாக அமைகின்றது. ஆகவே, சாதாரண மக்களின் சமூக வரலாற்றை எழுதுவதற்கான தரவுகளில் ஒன்றாக சமூக நினைவுகளையும் கொள்ளுதல் வேண்டும்.

மேலும், நாட்டார் வழக்காறுகளை வரலாற்றுத் தகவல்களாகப் பயன்படுத்தும்போது அவற்றின் குறியீட்டு மொழியில் கவனம் செலுத்துவது அவசியம். அவற்றின் சங்கேத மொழிக்குள் உட்பொதிந்திருக்கும் பொருண்மையைக் கட்டவிழ்த்து உண்மையைக் காணவேண்டும். அமைப்பியல் கோட்பாட்டாளர் லேவி – ஸ்ட்டாஸ் கூறும் தொன்மங்களின் சங்கேத மொழி, அதன் எதிர்மறைச் சொல்லாடல்கள் என்பன பற்றிய கருத்துக்கள் இதற்குப் பெரிதும் பயன்படும்.

**வாய்மொழி ஆவணத்தை வரலாற்று ஆவணமாகப் பயன்படுத்தல்**

வரலாற்று அம்சங்களைத் தருகின்ற வாய்மொழி வழக்காறுகளிலே வாய்மொழி இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதிலும் வாய்மொழிக் கதைகளுக்கும் வரலாற்றுக்கும் குறிப்பாக சமுதாய வரலாற்றுக்கும் மிக நெருக்கமான தொடர்புண்டு. அந்த அடிப்படையில் மட்டக்களப்பில் மண்டூர் என்ற கிராமத்தில் அமைந்துள்ள தேசத்துக் கோயிலாகக் கொள்ளப்படும் முருகன் ஆலயத்தின் வரலாற்றுடன் தொடர்புபட்ட வாய்மொழிக் கதையொன்றின் வரலாற்றுக் கூறுகளின் உண்மைத் தன்மையினை எவ்வாறு நிறுவுவது எனபது பற்றி இங்கு நோக்கப்படுகின்றது. இதனை நிறுவுவதற்கு எழுத்தாவணங்கள், கோயில் வழிபாட்டு மரபுகள், சமகால சாதி, சமூக மரபுகள், சமூக நினைவு ஆகியன ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

**வாய்மொழிக் கதை**

"சூரனைக் கொல்ல முருகனால் ஏவப்பட்ட வேலின் ஒரு பகுதி மண்டூரிலுள்ள தில்லை மரத்தில் வந்து தங்கியது. பின் அதனை அப்பகுதியில் வாழ்ந்த வேடுவர்கள் கண்டு அதற்குக் கொத்துப்பந்தல் அமைத்து வணங்கிவந்தனர். அவ்வாறு வணங்கிவரும் போது கோயிலுக்கு முன்னால் உள்ள மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிப்பதங்காக வந்த துறைநீலாவணை சீர்பாதக்காரர் ஆற்றங்கரையில் இளைப்பாறியபோது அப்பகுதியில் சில வேடுவர்கள் கொத்துப்பந்தல் கட்டி வேலை வணங்குவதைக் கண்டு தாம் கொண்டுவந்த தோணி, வலை ஆகியவற்றை நிலத்திலே குழிதோண்டிப் புதைத்துவிட்டு அவர்களோடு சேர்ந்து வழிபட்டுவந்தனர். அவர்கள் பின் முருகனின் வேல் மேலே எழுந்து சென்றுவிடாமல் அதனைச் சுற்றி தேனும் சுண்ணாம்பும் சேர்த்துக் கோயிலாகக் கட்டிப் பூசை செய்து வந்தனர். அவர்களின் சந்ததியாரே மண்டூர் சீர்பாத குலத்தினர். இவர்களில் சிந்தாத்திர குடியைச் சேர்ந்தவர்களே முதலாம் கப்புகனாக வரலாம்.

பின்னர் அந்தக் கோயிலைச் சிறப்பாக நடத்துவதற்கு வேளாளர்களைக் கொண்டுவர விரும்பினார்கள். அவர்கள் வன்னிமையோடு வேளாளர்கள் வாழும் களுவாஞ்சிகுடிக்குப் போய் வேளாளர்கள் சிலரை அனுப்புமாறு கேட்க அதற்குத் தாங்கள் ஏற்கனவே கொக்கட்டிச்சோலை, போரதீவு ஆகிய இடங்களுக்குப் போய்விட்டதால் அனுப்ப ஆட்கள் இல்லை என்று கூறினார்கள். பிறகு திருக்கோயில் கோரைக்களப்புக்கு சென்று சில வேளாளர்களை அனுப்பக் கேட்கவும் ஒரு கவுத்தன்குடிக் குடும்பத்தை அனுப்பினார்கள். இவர்களை மண்டூரில் குடியேற்றி நாற்பது ஏக்கர் காணியும் கொடுத்தார்கள். அவர்களின் மூத்த மகள் மண்டூரிலும் இளைய மகள் பளுகாமத்திலும் களியாணம் செய்து வாழ்ந்துவந்தார்கள். பின் அக்காவின்

மரபில் வந்தவர்கள் மண்டூர் கவுத்தன்குடி என்றும் தங்கையின் வழி வந்தவர்கள் பழுகாமத்துக் கவுத்தன்குடி என்றும் கூறப்பட்டார்கள். இவர்களே வண்ணக்கர் பதவிக்கும் சுவாமி தூக்குவதற்கும் பொறுப்பானவர்கள்".

இந்த வாய்மொழிக் கதையின் தொடக்கம் புனைவுநிலைப்பட்டதாக இருப்பினும் மண்டூர் முருகன் ஆலயத்தினது ஆரம்ப, இடைக்கால வரலாறு பற்றியதும் சமூக வரலாறு பற்றியதுமான பின்வரும் தகவல்களைத் தருகின்றது.

1. ஆலயத்தின் புராதன வழிபாடு
2. சீர்பாத சாதியினரின் வருகை
3. சீர்பாதர் போயிலைக் கற்கோயிலாகக் கட்டுவதும் வேளாளர் குடியேற்றமும்
4. அக்கால சமூக, சமய மரபுகள்

**ஆலயத்தின் புராதன வழிபாடு: வேடர் வழிபாடு**

மேற்படி வாய்மொழிக் கதையின் தொடக்கம் மட்டக்களப்புப் பூர்வ குடிகளின் வரலாற்றை உள்ளீடாகக் கொண்டது. குறிப்பாக புராதன மக்களாகிய வேடர்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்தார்கள் என்பதையும் அவர்களின் வேல்வழிபாடே அவ்வாலயத்தின் உருவாக்க மூலமாக அமைந்தது என்பதையும் அது சுட்டி நிற்கின்றது. இதனை வேறுபல தகவல்கள், மரபுகள் ஊடாக உறுதிப்படுத்த முடியும்.

1. மண்டூர் பகுதியில் கூனன் முதலான வேடுவத் தலைவர்கள் வாழ்ந்து வந்தமை பற்றிய சமூக நினைவுகள் வழங்கி வருகின்றன.

2. மண்டூர் முருகன் ஆலய பூர்வ வழிபாட்டுடன் தொடர்புடைய வேடுவர்களின் சந்ததியினராகக் கருதப்படுபவர்கள் இன்றும் "வேடக்குடி" என்ற தனிச் சாதிப் பிரிவினராக இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

3. வேடக்குடியினர் ஆலய ஒன்பதாம் நாள் திருவிழாவை நடாத்துவது, சுவாமி பவனியின்போது சுவாமிக்கு முன்னே அச்சாதிப் பிரதிநிதி ஒருவர் வில், அம்பு ஏந்திச் செல்லுதல், கொடியேற்றத்தின்போது கொத்துப் பந்தல் இடுவது ஆகிய ஆலய மரபுகள்.

4. திருவிழா முடிந்து மூன்றாம் நாள் வேடர்களின் குலதெய்வமான குமார தம்பிரானுக்கு நடத்தப்படும் சடங்கு மட்டக்களப்பில் வாழும் வேட சமூகத்தவர் மத்தியிலுள்ள குமாரதெய்வச் சடங்கைப் பிரதிபலித்து நிற்கின்றது.

5. மட்டக்களப்பிலுள்ள பழமைமிக்க ஆலயங்கள் பலவற்றின் ஆரம்பம் வேடர்கள் கொத்துப்பந்தல் அமைத்து வழிபட்டமை பற்றிய வாய்மொழிக் கதைகளுடன் தொடர்புபட்டது.

6. மட்டக்களப்பின் ஒல்லாந்த மாகாண அதிகாரியாக இருந்த ஜேக்கப் பேர்ணாண்ட் அவர்களின் 1794 September 27 ஆம் திகதிய Sri Lanka National Archives Dutch Records குறிப்பின்படி "போத்துக்கீசர் மட்டக்களப்பில் பேரழிவுகளை ஏற்படுத்தியதால் சனத்தொகை குன்றி இங்கு வேடுவர்களும் சில தாழ்த்தப்பட்ட சாதிகளுமே மிஞ்சியதாகவும் இந்நிலையில் பிரதேசத்தை ஆண்டுவந்த வன்னியனுக்கு எதிராக வேடர்கள் கலகம் செய்ததாகவும் கூறுகிறார்.

7. ஏலவே கிழக்கிலங்கையில் ஆதியில் வேடர்கள் வாழ்ந்தமையை Chandra Richard De Silva,

பேராசிரியர் குகபாலன் முதலான ஆய்வாளர்கள் ஆதாரங்களோடு நிறுவியுள்ளனர்.

ஆகவே, இந்த விடயங்கள் ஆரம்பத்தில் இவ்வாலயத்தில் வேடர்களின் வணக்கமுறை நிலவியதையும் அது பின்னாளில் உப சடங்குகளில் ஒன்றாக மாறியுள்ளதையும் சுட்டிநிற்கின்றன.

### 1. சீர்பாத சாதியினரின் வருகை

மண்டூர் முருகன் ஆலயத்தில் முன்னீட்டுக்கு உரியவர்களாக விளங்குகின்ற உயர்சாதியினர் சீர்பாதர், வேளாளர் ஆகியோராவர். அவர்களே இக்கிராமத்தில் செறிந்து வாழ்கின்றனர். இவர்களுள் சீர்பாதரை மண்டூர் முருகன் ஆலய ஆரம்பகால வரலாற்றிலே தொடர்புபட்வர்களாக வாய்மொழிக்கதை குறிப்பிடுகின்றது. வேடரின் வேல் வழிபாடு நிலவிய சூழலில் சீர்பாதக்காரரின் தன்னிச்சையான சனவேற்றம் இப்பிரதேசத்தில் நிகழ்ந்தமையை அக்கதை கூறுகின்றது. துறைநீலாவணைக்கும் மண்டூருக்கும் இடையிலான தொடர்பு, ஆலய பூசை மரபு, சீர்பாத செப்பேடு என்பவற்றின் அடிப்படையில் இந்த வரலாற்றுத் தகவலை உறுதிப்படுத்த முடியும்.

சோழ நாட்டிலிருந்து வந்த சோழ மன்னனின் மகள் சீர்பாததேவியும் அவளது கணவன் வாலசிங்க மன்னனும் வீரமுனை என்ற இடத்தில் விநாயகருக்கு ஆலயம் எடுத்து அக்கோயில் வழிபாட்டின் பொருட்டு தன்னோடு வந்த சோழ நாட்டு மக்களை இங்கு குடியேற்றி அவர்களுக்கு நெற்காணிகளையும் வழங்கி அவர்களைச் சீர்பாத குலமென வகுத்தனர் என்று சீர்பாத குலச் செப்பேடுகள் கூறுகின்றன. பின்னர் இக்குடியேற்றத்திலே இருந்து துறைநீலாவணை, குறுமண்வெளி, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கு சீர்பாதரின் குடிப்பெயர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன.

சீர்பாதரின் ஆரம்ப குடியேற்ற மையமாக வீரமுனை இருந்தபோதும் அவர்களின் மண்டூருக்கான வருகை துறை நீலாவணையில் இருந்து இடம்பெற்றதாகவே வாய்மொழிக் கதை கூறுகின்றது. மண்டூர் முருகன் கோயிலுக்கு முன்பாக உள்ள மட்டக்களப்பு வாவியின் தென்கிழக்குப் பக்க மறுகரையில் சுமார் முக்கால் மைல் தொலைவில் துறைநீலாவணை அமைந்துள்ளமை மட்டுமன்றி இரு ஊர்களுக்குமிடையிலான ஆற்றுவழிப் பயணங்கள் நீண்டகாலமாக இருந்துவந்தமையும் இதற்கு வாய்ப்பாக இருந்துள்ளன (பார்க்க: பின்னிணைப்பு – பிரதேச வரைபடம்). புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை 'உள்ளதும் நல்லதும்' என்ற நூலில் தன் இளவயதில் தோணி மூலம் துறைநீலாவணைக்கு சென்று வந்த அனுபவத்தைக் கூறுவது இதை உறுதிப்படுத்துகின்றது.

மேலும், "மீன்பிடிப்பதற்காக வந்த சீர்பாதக்காரர்" என்று சுட்டப்படுவதும் அவர்கள் துறைநீலாவணையில் இருந்து வந்ததை ஆதாரப்படுத்துகின்றது. மட்டக்களப்பு அரச அதிபராக இருந்த கியூம் துறைநீலாவணை சீர்பாதக்காரரின் பிரதான தொழில் மீன்பிடித்தலே என்று 1873 இல் குறிப்பிட்டுள்ளமை அவர்கள் முன்பு மீன்பிடியைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஆனால், மண்டூர் முருகன் ஆலயத்துடன் அவர்கள் இணைந்தபோது தம் தொழில் முறையை மாற்றிக்கொண்டு தம்மை இறைபணிக்காக புனிதப்படுத்திக் கொண்டனர் என்பதன் அடையாளமாகவே 'தோணி, வலை என்பவற்றைக் குழிதோண்டிப் புதைத்தனர்' என்ற தொடர் சுட்டுகின்றது.

சீர்பாத குலத்தவர் (சிந்தாத்திரகுடி) இக்கோயிலின் முதன்மைக் கப்புகர் பதவிக்கு உரித்துடையவர்களாகத் திட்டம் செய்யப்பட்டுள்ளமை அவர்களின் ஆரம்பகால ஆலயத் தொடர்பை உறுதி செய்கின்றது. முன்பு

மீன்பிடியை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தபோதும் அவர்களை தேசத்துக் கோயிற் கப்புகராக பணிபுரியத் திட்டம் செய்துள்ளமை மட்டக்களப்பில் தொழில்ரீதியான சாதிய இறுக்கம் பேணப்படாமையை மட்டுமன்றி சீர்பாதரின் சாதிய மேலாதிக்கத்தின் பிரதிபலிப்பையும் காட்டுகின்றது.

எழுத்தாவணம் என்ற வகையில் சீர்பாத சாதியினரின் வரலாறு கூறும் செப்பேடுகளில் ஒன்றான துறைநீலாவணைச் செப்பேடு சீர்பாதர் வீரமுனையில் இருந்து மண்டூருக்கு வந்ததாகக் கூறுகின்றது. சீர்பாதகுலத் தலைவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் சிந்தன் என்பவன் சீர்பாததேவி கொடுத்த தங்கவேலினை எடுத்துக்கொண்டு வந்து தில்லை மரமொன்றில் சொருகி வைத்துக் கொத்துப் பந்தலிட்டு தில்லைக்கந்தன் எனப் பெயரிட்டான் என்று அச்செப்பேடு பின்வருமாறு கூறுகின்றது:

வரமுறு நால்வரும் வாதிட்டு வெருவ
தங்க வேலதனை தண்ணளி யுடனே
மங்காச் சிந்தன் வலுவுடன் எடுத்து
வடக்கை நோக்கி வந்தோ ரிடத்தில்
திடமுடன் தில்லை மரத்தில் வைத்து
அங்குள பதியின் அமர்ந்தோர்க் குரைத்து

துங்கமுட னவர்களை துணைவராய்க் கொண்டு
கனகவேற் பனியை களிப்புட னெடுத்து
மனமுடன் கொத்து மண்டப மமைத்து
தில்லைக் கந்தனென திருநாம மிட்டு.. (அருள் செல்வநாயகம், (பதி.),1982: 64)

துறைநீலாவணைச் செப்பேடு எழுத்தாவணம் என்றபோதும் அது ஒரு சாதியச் செப்பேடு என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். சீர்பாதகுலச் செப்பேடுகள் சீர்பாத குலத்தவரை அரச குலத்தினராகவும் பூனூல் அணிபவர்களாகவும், அந்தணர்களாகவும் கூறுகின்றன. அதேவேளை இச்செப்பேடுகள் அக்குலத் தலைவரில் முதன்மையானவனாக சிந்தனையும் சீர்பாதக் குடிகளில் முதன்மைக் குடியாக சிந்தன் வழி வந்த சிந்தாத்திர குடியினரையும் கருதுகின்றன. இவ்வாறிருக்க கருத்து வேறுபாடு ஏற்பட்டவிடத்து அதிகாரத்தில் இருந்த சிந்தன் தம் குலக்கோயிலையும் குடியினரையும் விட்டு வெளியேறியதாகக் கூறுவதும் அரச – அந்தண மரபினனான சிந்தன் மரத்தில் வேலை வைத்து கொத்துப் பந்தலிட்டு வணங்கும் புராதன வழிபாட்டை மேற்கொண்டான் என்று கூறுவதும் தர்க்கரீதியற்ற தன்மையைக் காட்டுகின்றன.

## 2. சீர்பாதர் போயிலைக் கற்கோயிலாகக் கட்டுவதும் வேளாளர் குடியேற்றமும்

மண்டூர் முருகன் ஆலய வழிபாட்டில் சீர்பாதக்காரர் ஆதிக்கம் பெற்ற சூழலில் அவர்கள் கோயிலைக் கற்கோயிலாகக் கட்டுவதும் அதனைத் தேசத்துக் கோயிலாக மாற்றும் முனைப்பின் பிரதான அம்சமான வேளாளரைக் கொண்டுவந்து குடியேற்றுவதுமான இடைக்கால வரலாற்றினை வாய்மொழிக் கதை மிகச் சுட்டிப்பாகக் கூறுகின்றது. இந்த இடைக்கால வரலாற்றின் உண்மைத் தன்மைகளை நிறுவுவதற்கு சமூக நினைவுகளை அடிப்படையாகக் கொண்ட எழுத்தாவணம் ஒன்று துணைபுரிகின்றது. மண்டூர் முருகன் ஆலயத்திலே வண்ணக்கராக இருந்த ஏகாம்பரம்பிள்ளை வண்ணக்கரின் மகன் சிதம்பரப்பிள்ளை என்பவர்

தனது முன்னோர்களிடம் சமூக நினைவுகளாகப் பேணப்பட்டுவந்த விபரங்களை 24.09.1932 இல் தனது கைப்பட எழுதி வைத்துள்ளார். அந்த ஆவணம் பின்வருமாறு கூறுகின்றது:

"மண்டூர் கந்தசுவாமி கோயில் விஷயமாய், காலஞ்சென்ற எனது மாமனார் சிதம்பரப்பிள்ளை வண்ணக்கு, தம்பிமுத்து விதானை அவர்களிடம் நான் கேட்டறிந்த சில சம்பவங்கள்.

"மேற்படி கோயிலைக் கட்டுவிப்பதற்கு முயற்சி பண்ணிப் பல பகுதிகளுக்கும் சென்று பணம்சம்பாதித்து வந்து கோயிலை உண்டாக்கியவர் தற்போது இக்கோயில் பெரிய கப்புக வம்சத்தவர். இந்தக் காலத்தில் இக்கிராமம் காடடர்ந்த பகுதியாகவும் ஒரு சில வேடுவர்களுக்கு உறைவிடமாகவுமே இருந்ததாம். அக்காலம் இப்பகுதி நாதனைப் பகுதி என்னும் பேருடன் வேலப்பு வன்னிமை என்பவரினதும் முக்குவச் சாதியாரதும் ஆதிக்கத்தில் இருந்தது.

கப்புக வம்சத்தவர் கோயிலைக் கட்டி முடித்ததும் வழிபடு தெய்வம் கதிர்காமத் தெய்வம்போல் காட்சியளிக்கத் தொடங்கியதும் ஏராளமானோர் வழிபாட்டுக்கு வரத்தொடங்கினர். இதுகண்ட கப்புகனார் இக்கோயிலை கொக்கட்டிச் சோலை, கோயில்போரதீவு, களுவாஞ்சிகுடி முதலிய கிராமங்களிலுள்ள கோயில்களைப்போல் கவுத்தன்குடி வேளாளரை முன்னவராய் வைத்து நடத்த வேண்டுமென நினைத்து, வேலப்பு வன்னிமையிடம் ஆலோசித்தார். அவர் உடனே சிலரை அழைத்து ஆலோசித்தார். அப்போ களுவாஞ்சிகுடியில்தான் கவுத்தன்குடி வேளாளர் இருக்கிறார்கள் அவர்களைக் கேட்போமெனத் தீர்ந்து போய்க்கேட்டபோது அவர்கள் மேற்காட்டிய ஊர்களிலுள்ள தான்தோன்றியீசுரர் கோயில், சித்திரவேலாயுத கோயில் முதலியவற்றுக்கே பணியாற்ற ஆட்கள் போதாதிருப்பதால் இக்கோயில் பொறுப்பையும் ஏற்கமுடியாதெனக் கூறினர்.

இதன்பின் வன்னிமையவர்களும் முக்குவப் போடிமாரும் யோசித்து திருக்கோயிலுக்குப் பக்கலாய் கோரைக்களப்பு என்னும் ஊரில் கவுத்தன்குடி வேளாளர் இருப்பதாயறிந்து அப்பகுதியிலுள்ள முக்குவப் போடிமாருக்கு ஒரு கடிதம் எழுதி, சில வேளாளக் குடும்பத்தை மண்டூர்க் கோயில் பொறுப்பேற்று நடத்துவதற்கு அனுப்பக்கூடுமோவெனக் கேட்டார்கள்.

அக்கடிதத்துக்கு அப்பகுதியிலுள்ள ஏழு முக்குவப் போடிமார் சேர்ந்து எழுதிய பதில் எப்படியெனில், நாதனையிலிருக்கும் வேலப்பு வன்னிமையவர்கட்கும் அப்பகுதி முக்குவப் போடிமார்களுக்கும் அறியத் தருவது நீங்கள் கேட்டுக்கொண்டபடி மண்டூர்க் கோயிலுக்காக ஒரு வேளாளக் குடும்பத்தை மாத்திரமே அனுப்பலாம். அவர்களுக்குப் பல வசதிகளெல்லாம் செய்துகொடுத்து, வீடு வாசல், காணிபூமிகள் யாவும் கொடுத்து கோயில் கருமங்களை நடத்தும்படி ஒழுங்கு செய்யவும் எழுதப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் அனுப்பப்பட்ட குடும்பத்துக்கு முற்குகப் போடிமாரே தங்களுக்குரிய புங்கடிவெளி என்னும் நாற்பது ஏக்கர் விசாலமான காணியையும் வேளாளர் குடியிருப்பு வளவு எனத் தற்போது பெயர் விளங்கும் வளவையும் கொடுத்து நிலைப்படுத்தி வைத்தார்கள்.

1. கோரைக்களப்பால் வந்த மனுஷியின் பெயர் குஞ்சிநாச்சி.
2. இவவின் புருஷன் ஒரு செட்டி வேளாளன் (பெயர் தெரியாது).
3. இவர்களுக்குப் பிள்ளைகள் ஆண் 3, பெண் 3 ஆண்கள் 1. கந்தப்போடி, 2. கதிராமப்போடி, 3. பாலிப்போடி. பெண்கள் 1. கண்ணாத்தை, 2.உமையாத்தை, 3.பாலாத்தை.

4. கண்ணாத்தையை விவாகம் செய்தவர் களுவாஞ்சிகுடியிலுள்ள சிங்களக் குடி வேளாளன் பரசிராமன் என்பவர். 2ம் பிள்ளை உமையாத்தையை விவாகம் செய்தவர் பழுகாமத்திலுள்ள வைத்தினாகுடி வேளாளன் தம்பிப்போடி நொத்தாரிஸ்.

5. பரசிராமருக்குப் பிறந்த பிள்ளைகள் நாலு ஆண், நாலு பெண் (8), நொத்தாரிஸ் தம்பிப்போடியின் பிள்ளைகள் ஐந்து பெண், இரண்டு ஆண் (7). இந்த ஐந்து பெண்களில் ஒரு பெண் சின்னாத்தை என்பவவின் மகளின் மகன் ஏகாம்பரப்பிள்ளை வண்ணக்கர். கண்ணாத்தையின் மகன் – ஆறுமுக வண்ணக்கர், சிதம்பரப்பிள்ளை வண்ணக்கர். இவர்களின் மருமகன் வீரக்குட்டி வண்ணக்கர்.

அக்காலம்தொட்டு புங்கடிவெளி, செம்பர்பள்ளம் என்னும் காணிகளில் வரும் ஊதியத்தை 5ம் திருவிழாச் செலவு நீக்கி மிகுதியை கண்ணத்தையின் மக்கள் எட்டுப்பேரும் உமையாத்தையின் மக்கள் ஏழு பேரும் பதினைந்து பங்காயப் பிரித்துக் கொள்வது. பாலாத்தை என்பவ சந்தானமில்லாமல் இறந்துபோனா".

இதனை எழுதிய சிதம்பரப்பிள்ளை வேளாள வம்சத்தில் முக்கிய பிரதிநிதியாவார். அவர் தம் முன்னோரின் இடப்பெயர்ச்சி தொடர்பாக மூத்த உறவினர்களிடம் வாய்மொழியாக வழங்கிவந்த மரபுச்செய்தியை எழுத்தாவணமாக்கியுள்ளார். இது எழுத்து வடிவிலான வரலாற்றுத் தரவாக அமைந்து மேற்கூறிய சமூக நினைவினதும் வாழ்மொழிக் கதையினதும் நம்பகத் தன்மைக்குச் சான்று பகர்கின்றது.

இந்த ஆவணம் சீர்பாதர் 'தேனும் சுண்ணாம்பும் சேர்த்துக் கோயிலாகக் கட்டிப் பூசை செய்து வந்தனர்' என்ற வாய்மொழிக் கதையின் தகவலை உறுதிப்படுத்துகின்றது. இதற்கும் மேலாக, வேளாளரின் குடியேற்றம் பற்றிய வாய்மொழிக் கதையின் தகவல்களோடு ஒன்றுபட்டும் அத்தகவல்களை மேலும் ஆதாரப்படுத்தும் வகையில் மேலதிக தகவல்களைத் தருவதாகவும் அமைந்துள்ளது. முக்கியமாக இந்தக்குடியேற்றம் நடந்த காலப்பகுதி, அதனோடு அரச பிரதிநிதிகளின் தலையீடு, குடியேறிய வேளாள குடும்பத்தினதும் அக்குடும்ப தலைமுறையினரதும் பெயர் விபரங்கள் முதலான விடயங்களை விரிவாகத் தந்திருக்கின்றது.

சீர்பாதத்தினர் வேடுவரைப் பின்தள்ளி இவ்வாலய பரிபாலனத்தில் முன்னுரிமை பெற்றிருந்த சூழலில் சிறு கோயில் நிலையில் இருந்து பெருங்கோயிலாக வளர்ச்சி அடைந்தமையை இவ்விரு ஆவணங்களும் சுட்டுகின்றன. இவ்வாறு பெருங் கற்கோயிலாக அது உருவாக்கப்பட்டதை அடுத்து அதன் நிர்வாகம், பூசை முறைகளிலே பெரும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியதையும் அவை காட்டுகின்றன. மிக முக்கியமாக அரனூழியப் பகுப்புப் பற்றிய தீர்க்கமான திட்டங்கள் இக்காலத்திலிருந்தே முனைப்புறுத்தப்பட்டுள்ளன. அதற்கான முதன்மையான முன்னெடுப்பாகவே வேளாளரின் குடியேற்றம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஏனெனில் வேளாளரை முன்னவராய் வைத்து கோயில் பணிகளை நடத்துவது பெருங்கோயில்களின் மரபாக இருந்துவந்திருக்கின்றது என்பதை இது உணர்த்துகின்றது. 13ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பை ஆட்சி புரிந்த கலிங்க மாகோன் வேளாளரை ஏழு குடிகளாக வகுத்து அவர்களை இறைபணி புரியும்படி அரனூழியம் வகுத்ததாக மட்டக்களப்பு பூர்வசரித்திர குளிக்கல்வெட்டு கூறுவது (1998:78–79) இதனை ஆதாரப்படுத்துகின்றது. அந்த மரபுக்கிணங்கவே இக்குடியேற்றம் அப்போதய ஆட்சியாளர்களின் அனுசரணையோடு இடம்பெற்றுள்ளது என்ற மேலதிக உண்மையை எழுத்தாவணம் பதிவுசெய்துள்ளது. இக்குடியேற்றம் மட்டக்களப்பில் இடம்பெற்ற சோழர்களின் குடியேற்ற வடிவத்துடன் தொடர்புபட்டது.

அதாவது, மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கோணேசர் கல்வெட்டு ஆகிய எழுத்தாவணங்கள் திருகோணமலை, பொலநறுவை, கொக்கட்டிச்சோலை, திருக்கோயில் ஆகிய இடங்களில் இடம்பெற்ற சோழர்களின் கோயிலை மையப்படுத்தியதும் சாதியப் படிமுறை அமைப்பைக் கொண்டதுமான விவசாயக் குடியேற்ற வடிவத்தை முதன்மைப்படுத்தியுள்ளன. குறிப்பாக திருக்கோயில் குடியேற்றம் பற்றி மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் பின்வருமாறு கூறும்:

> திருச்சோழனின் மருமகன் திருக்கோயில் பகுதியில் களனிகள் திருத்தி குடி, படை, சிறைகள் வைத்து அந்தணர் புத்தியின்படி தமிழ் மதம் ஓங்க அந்த ஆலயத்தைப் புனரமைத்து, அதன் திருப்பணிக்கு ஆதாரமாக குளங்களையும் நெல் வயல்களையும் உண்டாக்கினான் (நடராசா,எவ்.எக்ஸ்.சி., (பதி.),1998:19–25).

ஆகவே, இக்குடியேற்றத்துக்கு உட்பட்ட கோரைக்களப்பில் இருந்து அரசின் பிரதிநிதியான வன்னிமையின் ஏற்பாட்டோடு வேளாளர் மண்டூருக்குக் கொண்டுவரப்பட்டு கோயில் பணியின் பொருட்டு வயற்காணிகளும் வழங்கப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளனர். நாதனைப் பகுதி முக்குவ வன்னிமையின் ஆட்சியின் கீழ் இருந்தபோது இக்குடியேற்றம் இடம்பெற்றிருப்பதையும் இந்த ஆவணம் காட்டுகின்றது. கண்டி இராட்சியத்தின் கீழ் மட்டக்களப்பு உட்பட்டதன் பின்னரே முக்குவ வன்னிமைகள் நியமிக்கப்பட்டன. குகன்முறை அகவல் மட்டக்களப்பு கண்டி அரசனே முக்குவருக்கு வன்னிமைப்பட்டம் வழங்கியதாகக் கூறுகின்றது. 1582 ஆம் ஆண்டிற்குப் பின்னரே மட்டக்களப்பு கண்டியரசின் கீழ் வந்ததாகக் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் கூறுகின்றது.

ஆகவே, கண்டி ராச்சியத்தின் கீழ் மட்டக்களப்பு இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட கோயிலை மையப்படுத்தியதும் சாதி ஒழுங்கமைவை உட்கொண்டதுமான இந்தக் குடியேற்ற மரபானது முன்பு கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சோழரின் நீர்ப்பாசனக் குடியேற்றமானது தொடர்ச்சியாகவே அமைகின்றது.

குஞ்சிநாச்சியின் மூத்தமகள் கண்ணத்தையின் பிள்ளைகள் எட்டுப்பேருக்கும் இளையமகள் உமையாத்தையின் பிள்ளைகள் ஏழு பேருக்கும் பதினைந்து பங்குகளாகப் பிரித்துக் கொடுக்கப்பட்ட வயற்காணிகள் அவர்களின் வம்சவழியினரால் சுழற்சி முறையில் இன்றும் செய்கை பண்ணப்பட்டு வருவது இக்குடியேற்றத்தின் உண்மைத் தன்மையை மேலும் ஆதாரப்படுத்துகின்றது.

## முடிவுரை

முடிவாக, மேற்படி வாய்மொழிக் கதையின்படி மண்டூர் கிராமத்தின் சமூக வரலாறு அல்லது முருகன் ஆலய வரலாறு தொடர்பாக பின்வரும் விடயங்களை மீளுருவாக்கம் செய்ய முடிகின்றது:

1. மண்டூரில் பூர்வீக குடிகளாக வேடர்கள் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் கொத்துப்பந்தலிட்டு வேல்வழிபாடு அல்லது குமாரதம்பிரான் வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர்.

2. சீர்பாதரின் மண்டூருக்கான இடப்பெயர்வு துறைநீலாவணையில் இருந்து கோயிலை மையப்படுத்திய விவசாய இடப்பெயர்வாக அமைந்தது.

3. சீர்பாத உயர்சாதியினரின் இணைவின் பின் அவர்களது மேலாதிக்கம் காரணமாக வேடரின் வழிபாடு

பின்தள்ளப்பட்டு பெருந்தெய்வ வழிபாடாக மாற்றமடைந்த நிலையில் சீர்பாதக்காரரால் கற்கோயில் எழுப்பப்பட்டுள்ளது.

4. சீர்பாதர் முன்பு மீன்பிடியை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தபோதும் தேசத்துக் கோயிலின் கப்புகராகப் பணிபுரிவது மட்டக்களப்பில் தொழில்ரீதியான சாதிவேற்றுமை இறுக்கமாகப் பேணப்படாமையைக் காட்டுகின்றது.

5. வேளாளரை முன்னவராய் வைத்து கோயில் நிர்வாகத்தை நடத்துவது பெருங்கோயில்களின் மரபாக இருந்துவந்திருக்கின்றது.

6. மண்டூர் வேளாளரின் குடியேற்றம் கிழக்கிலங்கையில் 12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் இடம்பெற்ற சோழர்களின் கோயிலை மையப்படுத்தியதும் சாதியப் படிமுறை அமைப்பைக் கொண்டதுமான விவசாயக் குடியேற்ற வடிவத்தைப் பின்பற்றியதாகும்.

7. சாதிக்குள் கத்தறைகள் உருவாகும் மரபு வழக்கில் இருந்தமை.

8. சாதிக்குள் திருமண உறவை வைக்கும் அதேவேளை குடிக்குள் திருமணம் செய்வதைத் தவிர்க்கும் வழமையைப் பின்பற்றியமை.

குறித்த வாய்மொழி ஆவணத்தினூடாக மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ள இந்த சமூக வரலாற்று அம்சங்களை சமூகநினைவு, எழுத்தாவணங்கள், சமூக, சமய மரபுகள் முதலானவையும் ஆதாரப்படுத்தி நிற்பதன் காரணமாக மேற்படி வாய்மொழிக் கதை ஒரு வரலாற்று ஆவணம் என்ற தகுதியைப் பெறுகின்றது. ஆகவே, சமூக வரலாற்றை எழுதும் பணியில் வாய்மொழி வழக்காறுகளையும் சான்றுகளாகக் கொள்வதென்பது அந்த வரலாற்றை முழுமைப்படுத்தவும் செழுமைப்படுத்தவும் பேருதவி புரியும்.

**உசாத்துணை:**


கந்தையா,வி.சீ (2002). மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, யாழ்ப்பாணம்.

குகபாலம், கா (2000). இலங்கையில் பழங்குடிகள், சமூக விஞ்ஞானத் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, ஒலுவில்.

சிதம்பரப்பிள்ளை,ஏ (1932). “மண்டூர் கந்தசுவாமி கோயில் விஷயமாய், காலஞ்சென்ற எனது மாமனார் சிதம்பரப்பிள்ளை வண்ணக்கு தம்பிமுத்து விதானை அவர்களிடம் நான் கேட்டறிந்த சில சம்பவங்கள்”, தந்துதவியவர்: கலாநிதி கோ. கோணேசபிள்ளை.

சிவசுப்பிரமணியன்,ஆ (2016). அடித்தள மக்கள் வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர் – சென்னை.

சிவசுப்பிரமணியன்,ஆ (2008). வரலாறும் வழக்காறும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

சிவராம்,டி (2004). மட்டக்களப்பு குடியேற்ற மரபுகள், சித்திரலேகா மௌனகுரு (பதி), வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக, மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை.

செல்வநாயகம், அருள் (பதி), (1982). சீர்பாதகுல வரலாறு, திருவருள் நிலையம், குருமண்வெளி, இலங்கை.

நடராசா, எவ்.எக்ஸ்.சி (பதி), (1998). மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை, மட்டக்களப்பு.

பிலவேந்திரன், ச (2004). சனங்களும் வரலாறும் – சொல்மரபின் மடக்குகளில் உறையும் வரலாறுகள், வல்லினம், புதுவை.

லூர்து, தே (2000). நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், பாளையங்கோட்டை

Astrid Erll et.al (eds) (2008), Cultural Memory Studies: An International and Interdisciplinary Handbook, New York.

Peter Burkk, (2003). *History as Social Memory- Varieties of Cultural History*, Polity Press.

Vansina, Jan (1961) (1965 Translation), *Oral Tradition: A Study in Historical Methodology*, Wright, H. M (Trans), Routledge & Kegan Paul, London

**பின்னிணைப்பு**




**பிரதேச வரைபடம்**

# Assistive mechanisms for Students with Disabilities (SWDs) in Sri Lankan State University System

## A Case of Eastern University, Sri Lanka

G. Vickneswaran

Senior Lecturer in Sociology and Anthropology

Department of Social Sciences, Eastern University, Sri Lanka.

***Abstract***

*This paper evaluates the effectiveness of those mechanisms in meeting the needs of students with disabilities to investigate the research problem of whether there are effective and established mechanisms in state universities in Sri Lanka to address the need of inclusive education. It focuses on specific areas of teaching and learning, academic administrative structures, staff development, financial allocation and monitoring and evaluation. The overall objective of this study is to investigate the effectiveness of existing academic and welfare mechanisms in state university education for students with learning disabilities, and to identify the gaps in policy orientations and the practicalities in the available mechanisms. The study was a cross-sectional study based on case study method and the study is also based on explanatory type in its nature using qualitative methods. The study is confined its case location in a state university: Eastern University of Sri Lanka. In the university, the study universe is confined to students of arts, humanities, and social sciences. Eastern University, Sri Lanka as one of the state universities have well-established mechanisms for teaching and learning and welfare and administrative systems which are commonly established in all state universities of Sri Lanka and available facilities to cater the needs of students with disabilities in state universities. However, this paper postulates inefficient operations and functional deficits of those mechanisms to effectively serve educational requirements and special needs of students with disabilities in the university.*

***Key Words:*** *Students with Disabilities, Assistive facilities, State University System, Eastern University, Case Study*

## Introduction

Notion of Diversity, Equality, and Inclusion (DEI) are not new attributes to Sri Lankan cultures. Those aspects are the prime values of cultures practices by the Sri Lankan communities irrespective of their ethnicity, religion or gender. However, Sri Lankans like other South Asian nations failed to sustain those traditionally attributed values due to the socio-economic changes taken placed specially during last four decades. Thus, diversity, equality and inclusion became as the western concepts, introduced to Sri Lankans through the international conventions and other mechanisms. In this point of view, Sri Lanka recorded a remarkable and historically significant achievements in ensuring legal provisions related with equality and inclusion to its people from the British colonial rule onwards. Universal Franchise of the 1931 Donoughmore constitution and the section 29 (II) of the 1947 Soulbury constitution are the internationally recognizable provisions ensuring DEI under the British rule. Considering DEI policy and legal frameworks in education, Sri Lankan policies and related constitutional laws were largely influenced and shaped by international conventions. Sri Lanka became a state party in the 1989 convention on the rights of child. Sri Lanka rectified the 2006 UN convention on Persons with Disabilities in 2016.

When looking into the post-independent policy developments, Article 12.2 of the 1978 Constitution, which was amended in 2015, promotes education for all citizens and prohibits discrimination based on race, religion, language, caste, sex, political opinion, and place of birth, But it does not explicitly articulate non-discrimination in education on the ground of disability (Government of Sri Lanka, 2015). Nonetheless, Sri Lanka enforced the Protection of Rights of Persons with Disabilities Act No. 28 in 1996, laying the foundation for non-discrimination in education and guaranteeing compulsory and free education for all through the Compulsory Education Ordinance 1997 (Government of Sri Lanka, 1996). In pursuit of greater disability inclusion, the 2003 National Policy on Disability for Sri Lanka provides a comprehensive framework for persons with disabilities to be included in all aspects of society. Inclusive education was explicitly defined in the policy, demonstrating the country's commitment to include children with disabilities in general education through learner-centered teaching approaches (Ministry of Education, 2009). This paper evaluates the effectiveness of those mechanisms in serving SWDs to meet their needs in universities.

## Problem Statement of the Research

The policies and procedures have not been implemented up to a satisfactory level to meet the needs and aspirations of the Students with Disabilities (SWDs) specially in the state universities in Sri Lanka.

Even though there are notable developments in policy formation and establishments

of legal frameworks in ensuring equality and inclusion in primary and secondary education, there has been not any national policies and mechanisms introduced in tertiary educational sector in Sri Lanka. A policy to safeguard the rights of SWDs is yet to be created for the Higher Educational Institutions (HEI) in Sri Lanka. However, there are certain mechanisms under the institutional academic and administrative systems, common to all state universities that could facilitate to satisfy the requirements of SWDs in the universities despite of the absence of a national policy for SWDs for universities.

The present study has investigated an important subject of inclusive education from a dimension of diversity, equity, and inclusion in higher education. It has looked at several thematic areas which are directly relevant to the subject matter such as teaching and learning, academic administrative structures, curricular and evaluation, staff development, financial allocation.

**Objectives of the study**

The overall objective of the study is to investigate the effectiveness of existing academic, administrative and welfare mechanisms for students with disabilities in Sri Lanka, based on the case study of Eastern University, Sri Lanka, and to illustrate practicalities of the available mechanisms.

Accordingly, specific objectives of this study are:

a). To identify mechanisms and policies that are currently available to facilitate special needs and inclusive educational requirements at Eastern University, Sri Lanka.

b). To investigate the drawbacks and potentialities of the existing academic and administrative arrangements of Eastern University, Sri Lanka in assisting teaching, learning and welfare provisions to SWDs.

c). To make recommendations to improve the existing inclusive mechanisms and assistive facilities and to implement new policy decisions in order to improve inclusive education in Sri Lankan higher educational instituions.

**Research Methodology**

The study was a cross-sectional study based on a case study method and explanatory type in its nature using qualitative methods. The study is confined its case location in a state university, namely the Eastern University of Sri Lanka. In this university, the study universe is confined to students of arts, humanities, and social sciences. Thus, the study focused on the situations of students from Faculty of Arts and Culture at Eastern University of Sri Lanka. Purposive sampling method was used to select students with disabilities, 10 academics and 04 administrative officers were included in the sample. Two types of interviews were employed to gather qualitative information from students

and staff: Key informant Interviews (KII) and In-depth interviews. KIIs were conducted among the staff of both academic and administrative positions mainly dealing with SWDs and those who have long working experience in the university staff positions in the university.

In-depth interviews were used to collect partly the case histories of the respondents (students) as well as hands-on experiences of staff engaged in service deliveries and facilitation for SWDs. The primary data were verified and analyzed using secondary sources where necessary. During the data verification process, key thematic areas were identified, and the data analysis were done using the thematic analysis method.

**Inclusive Policy Mechanisms in Sri Lanka**

Inclusive education has been globally accepted as one of the best methods in special need education or in other words educating people with disabilities. As the Salamanca Statement and Framework for Action on Special Needs Education specify, inclusion in the context of education is based on the idea that all children should learn together, regardless of differences or disability (UNESCO, 1994). Scholars such as Abeywickrama et al., (2013), Alwis (2005), Ellepola (2016), and Nunan et al., (2020) have emphasized that the experience, knowledge, and attitude of teachers and other professionals are beneficial and crucial for the implementation of inclusive education.

Dhanapala (2006) has highlighted that there should be strategies and action plans to encourage and increase diversity and equality for staff and students, regardless of ethnicity, religion, ability, sexual orientation, or gender.

In 2013, the education first policy reaffirmed the inclusion of children with disabilities in education, and, to the extent possible, should be taught in regular classrooms. The Education Sector Development Plan (ESDP) 2018–2025 promotes inclusive education in parallel with strengthening special education. It specifically focuses on strengthening special education, inclusive education, and non-formal education (Abeywickrama et al., 2017).

Sri Lanka has adopted the Disabled Persons (Accessibility) Regulations, No. 1 of 2006 which clearly indicates, "all existing public buildings, public places and places where common services are available, shall within a period of three years from the coming into operation of these regulations, be made accessible to persons with disabilities incompliance with the provisions of these regulations" (The Protection of the Rights of Persons with Disabilities Act, 1996).

As Khasnabis et al., (2015) highlighted assistive technologies are deemed as mechanisms

to promote individual functioning and independence and to impact on the wellbeing of the persons with disabilities. In the meantime, resource centers are the perfect mechanism to accommodate learning requirements of SWDs with various special needs (Affleck et al., 1988).

**Physical infrastructure facilities**

The physical structure of the lecture halls and other facilities of the universities are expected to be easily accessible for different types of SWDs. The study observed that the infrastructure facilities of the Eastern University of Sri Lanka is somewhat conducive for SWDs mainly due to the geographical location of the university. The physical structure of the buildings has assessable facilities to almost all types of disabled persons. New buildings of the university were constructed with assessable ramps, lifts, handrails and grab bars and the lecture halls are also facilitated with accessible seating arrangements. Even in old buildings, it is observable that renovations were made to incorporate accessible facilities for the disabled persons.

It was found that in the university, classrooms are not equipped with assistive facilities to support learning activities of SWDs in the universities. Although assistive technologies facilitate and promote individual functioning and independence of SWDs, there is obviously a deficit in assistive technologies in lecture halls and libraries to enable SWDs actively engage in learning activities. It is indeed the reality that state universities in Sri Lanka have neither pullout lecture halls to deliver special care to SWDs in teaching nor full inclusion lecture halls or laboratories where SWDs can have assistive technologies to equally engage in leaning activities like other students. Except a very few cases, where some technologies have been in placed with outside funding (e.g. European Union funded IncEdu project). Most of the state universities are unable to technologically modify the lecture halls with modern assistive technologies. Therefore, it is understandable that SWDs in lecture halls and other common places without assistive technologies struggle for their individual functioning and independent learning.

**Learning support systems**

Under the learning support systems for SWDs in state universities, the study first, concentrates on peer tutoring support services for SWDs in the undergraduate programmes. It mainly scrutinized whether the handbooks of degree programs in the state universities selected for the study include specific evaluation methods for SWDs. Based on Sri Lanka Qualification Framework (SLQF), Eastern university adopted several new modes of Continues Assessment Tests (CAT) based on principles of Knowledge, Skills, Attitude and Mindset paradigm (KSAM). The university have moderately shifted from traditional mode of interim assessment methods and

submissions of reports. However, it was found that much less concern has been given to the consistency of the modes with special needs of SWDs. It was identified that there is a lack of mechanisms used to identify the suitable methods of the evaluation for different types of SWDs and their different abilities to comply with those methods. Secondly, the study considers the learning accommodations available for the SWDs in the university. Eastern university established Disability Resource Centers (DRC). Despite the deficiency of other accessible academic arrangements, DRCs equipped with modern accessible technologies could facilitate learning activities of SWDs in the university. In addition to the academic facilitation, DRC is the establishments to contribute policy decisions and administrative implementations related with welfare of SWDs to promote their inclusive and equal engagement in learning. Nonetheless, DRC has not developed integrated coordination parallel with lecture hall activities. However, both the student and academic representatives of the sample mentioned that the DRC has not adequately integrated to the normal teaching- learning and evaluation systems of the university, except that some students of this university mentioned that they use DRC for their general academic activities since they were provided computer and seating facilities at the DRC.

**Course Structure and the Curriculum Design**

SWDs in the study reflected their opinion that not all course structures of the undergraduate degree programs offered by their faculty are suitable for them. They indicated that students in some other universities entertain their own liberty to select suitable courses based on their preferences since their faculties (Humanities/ Arts/ Social Sciences) have introduced a new curricular and degree programmes which allow students to enroll for four-year honours degree programmes as per the will of the students. It is evident that the flexible course structure enables SWDs to select courses suitable to their abilities. Even though a wide range of subjects across different fields were offered by Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka, considering number of students, the faculty had limited the choice of students in selecting subjects. Introducing “basket system” in the course selection which allows students to select certain subjects that are grouped into a category, faculty had restricted students’ freedom in selecting subjects which they prefer. SWDs perceive this system incompatible to their interests that selecting courses suitable to their abilities and specific needs.

The SLQF indicates that course structure of every degree program in undergraduate level should have fallback options. The system benefits students who are unable to pass examinations throughout the entire academic year to gain a certification for their engagement during study. It explicitly benefits SWDs who have more difficulties in succeeding examinations due to the lack of accessible facilities, assistive technologies,

and specific modes of evaluations. It was observed that Faculty of Arts and Culture, Eastern University has introduced fallback options in the undergraduate course structure. However, during the interviews of the sample students, most of them were not very clear whether to get the fallback options. Only 03 out of 16 students interviewed mentioned that they would interest to obtain the fallback options and complete the education as soon as they can.

A major drawback observed in the curriculum design and course structure is that the university has no credit transfer system. The credit transfer system enables students to follow some semesters in one university and follow further semesters in another university. When enquired about this aspect from the students who interviewed, majority of them of the views that they prefer universities close proximity to them, but have not given that opportunity to them due to the current system followed by the University Grant Commission to select students to the universities. The system is preferable for SWDs to follow courses in a degree program in a university and transfer it to the same nature of the degree in other university. It enables them to continue studies in their accessible universities. However, despite many changes in the course designs, the system has not been implemented in any state universities too.

**Academic-administrative structures**

Considering the policy decisions and implementations, universities as semi-governmental institutions are independent to establish centers or sub-administrative bodies and to form By-Laws and operational procedures. Universities can establish policies to ensure equality, inclusion, and diversity. There are several policies related to diversity of other types, but very few universities have formed a policy for SWDs. Notably, Eastern University of Sri Lanka have recently established SWD policy for their universities because of its partnership in EU funded IncEdu project. The policy is instrumental to enforce further academic and welfare administrative facilitation to SWDs in the university.

There are administrative units commonly established in all state universities under the ordinance of University Grants Commission in Sri Lanka to look after the student welfare requirements.  There is a generally approved structures of student welfare system in all state universities; notably, Office of the Deputy Vice Chancellor, Office for Student Support Service and Student Welfare, Office of the Senior Student Counsellor and Student Affairs department generally known as student welfare offices. All these academic administrative bodies are responsible to cater the welfare needs of students including SWDs. Nevertheless, the effectiveness of delivering welfare services in coordination to cater the special needs of SWDs is in question. Except for a few disciplinary inquiry processes, each unit engages separately in attending welfare issues

of students.

There are no formal coordinating arrangements among these units to respond to the welfare affairs of the students. It doesn't mean that each unit is ineffective to attend welfare issues of students without coordination among them, but it is evident from the data collected from both the students and staff that there are issues taken up by one of these units left incomplete due to lack of coordination.

There are approved bodies of student representations and committees for various purposes under this student welfare system. Student unions are independent entities which play pivotal role in addressing issues of students, particularly welfare issues. There are committees established to respond to the needs and issues of students in general. However, it was observed that there is no committee has been formed for SWDs as an approved entity within the student welfare system in the university. It leads to the perception that SWDs have no room to address their specific needs and let alone SWDs with the sense of being marginalized.

**Capacity Development of Staff**

Almost all state universities established their own Staff Development Center (SDC) for the purpose of training academic, administrative and non-academic staff to enhance their qualities as to efficiently serve the system. It's an innovative avenue to offer training programs and short courses on DEI.

SDCs in universities specifically conduct induction courses on teaching methodology; a compulsory course to train newly recruited academics in teaching methods, namely the Certificate Course on Professional Development in Higher Education (CCPDHE). All permanent academics in all state universities must complete this course as it is mandatory for them to get confirmed in their position. The study found that though the course is specifically aimed to train academic staff in teaching methods for university students, the course curriculum poorly incorporates concerns about SWDs. In Eastern University, Sri Lanka, the induction course on CCPDHE does not consist course contents to train candidates on specific methods in teaching SWDs and to disseminate knowledge about the special needs of SWDs. When inquired about this from the sample respondents of the staff, they mentioned that only the available course modules are being thought of in the SDC courses. It is also identified that there is no general curriculum developed in common for all universities for the course. Although there is a suggested manual with course modules, each university designed their own curriculum for the CCPDHE course. Considering the drawback, a policy guideline is thus necessitated to streamline the course contents to incorporate teaching methods for SWDs.

**Financial allocation**

There are certain financial provisions being extended to the universities by the Ministry of Higher Education through UGC. Universities are given financial allocations based on the number of students in a single intake. Diversity doesn't matter here, but only the numbers consider. Even though universities receive financial allocations based on students' number, no financial allocations are made for SWDs from UGC; SWDs are enumerated as normal intakes in financial allocations and no special financial provisions for welfare of the SWDs are set to be allocated yet. Even though some faculties related with arts, humanities and social sciences enroll SWDs under the disabled students' category, there is no special financial allocation from the government to accommodate those students. Therefore, it is quite difficult for state universities to provide special facilities for SWDs to cater their special needs. This non allocation of financial resources was identified as one of the main barriers when addressing specific teaching- learning needs of SWDs at Eastern University, Sri Lanka.

**Conclusions**

Sri Lankan state universities have centrally directed policy mechanisms for teaching and learning and well-established mechanisms of student welfare systems. Even though the universities have sufficient academic and administrative structural arrangements, functions of those arrangements are ineffective due to various reasons to serve the special needs of SWDs. Beyond the reality that certain policy mechanisms are to be newly implemented to sustain technological and financial resources, existing mechanisms can be operated effectively with the available resources to meet the academic and welfare needs of SWDs.

It is the responsibility of all university stakeholders to foster a culture that offers an adaptable and equitable environment. Additionally, it is professional, cordial, and polite while abstaining from harassment and prejudice. The university needs to foster an accepting environment for DEI. They cherish and respect the power that comes from difference, and they take delight in it.

It is essential that DRCs should integrate its activities with normal teaching and learning activities of the universities to cater to special requirements of SWDs who face the difficulties. The DRCs should also work in connection with examination centers to enable SWDs to access supportive technologies to respond to the evaluations. Otherwise, the difficulties remain intact.

The study concluded that although some policies are available, they have not been implemented or practiced to the level of requirements. To facilitate such processes and mechanisms, there should be clearly defined policies and procedures directed to the

universities from the national level. Policy decisions are required to facilitate additional financial allocations to the universities to accommodate the needs of SWDs.

## References

Abeywickrama, S.P., Jayasinghe, I.K. and Sumanasena, S.P. (2013) Excluded in inclusive schools: Experiences of children with disabilities, their families, and teachers in Sri Lanka. Disability, CBR & Inclusive Development, 24(1), pp.115-129.

Affleck, J., Madge, S.,Adams,A., & Lowenbraun, S. (1988). Integrated classroom versus resource model: Academic viability and effectiveness. Exceptional Children, 54, 339–348.

Alwis. K.A.C. (2005) Children with Hearing Impairment in the Regular Classroom. Sri Lankan Journal of Educational Research. 9(1), pp. 45-69.

Ellepola, Y. (2016) Sri Lanka's Invisible Children: The Need for Inclusive Education for Children with Special Needs. Retrieved from: <https://www.ips.lk/talkingeconomics/2016/04/25/sri-lankas-invisible-children-the-need-for-inclusive-education-for-children-with-special-needs/>.

Dhanapala, T. (2006). Success of Inclusion in Sri Lanka. ICEVI.

Government of Sri Lanka ( 1996). Protection of the Rights of Persons with Disabilities Act, No. 28 of 1996.

Government of Sri Lanka (1978). Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka.

Khasnabis, C., Mirza, Z., & MacLachlan, M. (2015). Opening the GATE to inclusion for people with disabilities. Lancet (London, England), 386(10010), 2229–2230. https://doi.org/10.1016/S0140-6736(15)01093-4.

Ministry of Education (2009). Framework of Action for Inclusive Education in Sri Lanka.

Nunan, T., George, R., McCausland, H. (2000). Inclusive Education in Universities: Why it is important and how it might be achieved. International Journal of Inclusive Education. 4. 63-88. 10.1080/136031100284920.

The Protection of the Rights of Persons with Disabilities Act, No. 28 of 1996, The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka, No. 1,467/15, 17th OCTOBER 2006.

UNESCO. (1994). The Salamanca Statement and Framework for Action on Special Needs Education. Salamanca, Spain, 7- 10 June 1994.

# இடைக்கால இலங்கையில் இந்துக்கோயில் மற்றும் பௌத்த விகாரை நிர்வாகம்

# Administration of Hindu Temple and Buddhist Vihara in medieval Sri Lanka

Dr.M.M.Jayaseelan

Senior Lecturer

Department of Tamil

University of Peradeniya

jseelan@arts.pdn.ac.lk

## *Abstract*

*Temple administration became necessary when the temple evolved into a social institution and a prosperous organization. Various reasons such as the expansion of the state, increased production, and commercial developments, led to an increase in donations to Temples. The government has granted tax-free lands and villages to temples. Against this backdrop, a staff team was created to carry out temple work and maintain temple property. Inscriptions and other historical evidence found in South India and Sri Lanka confirm that temple administration was well-organized during the medieval period. K. Indrabala (1968), S. Gunasingham (1979), S. Pathmanathan (2006), and C.K. Chitrambalam (1996) have examined Hindu temple administration in medieval Sri Lanka through their studies of inscriptions and the development of Hinduism in the region. While studying the individual inscriptions, the epigraphist has highlighted the messages regarding temple administration. In the studies on the development of Hinduism in Sri Lanka, the messages related to temple administration in the inscriptions have been highlighted in general. Few attempts have been made to integrate all the accounts of temple administration in Sri Lankan Tamil inscriptions and examine them in their historical context. Also, in the studies conducted on the administration of Buddhist temples in Sri Lanka, the messages in the Tamil inscriptions have not been given much attention. Therefore, this study aims to examine the administrative system of Hindu temples and Buddhist monasteries in medieval Sri Lanka, based on Tamil inscriptions. This study employed Content analyze method and socio-historical approache to address the research problem.*

***Key Words****: Administration, Donations, Medieval Sri Lanka, Social institution, Temple*

## அறிமுகம்

கோயில் சமூக நிறுவனமாகவும் சொத்துடைய அமைப்பாகவும் வளர்ச்சிபெற்றபோது முறையான கோயில் நிர்வாகம் என்ற ஒழுங்கு அவசியப்பட்டுள்ளது. சமூக பொருளியலில் ஆதிக்கம் செலுத்தும் மையமாகவும் தனிமனிதனதும் சமூகத்தினதும் வாழ்வை ஒழுங்குபடுத்தும் நிறுவனமாகவும் கோயில்கள் உருப்பெற்றபோது கோயில் நிர்வாகப் பொறிமுறை நன்கு வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. அரச அதிகார விரிவாக்கம், உற்பத்திப் பெருக்கம், வணிக விருத்தி முதலான பல காரணங்களால் கோயில்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள் பெருகியுள்ளன. அரசு வரிநீக்கி (இறையிலி) நிலங்களையும் கிராமங்களையும் கோயில்களுக்கு மானியமாக வழங்கியுள்ளது. இந்தப் பின்னணியில் கோயில் காரியங்களை மேற்கொள்ளவும் கோயில் சொத்துக்களைப் பராமரிக்கவும் பணியாளர் குழுவினர் உருவாக்கம் பெற்றதுடன் அப்பணியாளர்களை நிர்வகிக்கும் நிர்வாகப் பொறிமுறையும் மேற்கிளம்பியுள்ளது.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கிடைக்கின்ற கல்வெட்டு மற்றும் ஏனைய சான்றுகளை அவதானிக்கின்றபோது இடைக்காலத்தில் கோயில் நிர்வாகம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வளர்ச்சியைப் பெற்றிருந்துள்ளமையைக் கண்டுகொள்ள முடிகிறது. தென்னிந்தியாவில் கிடைக்கப்பெற்றுள்ள தமிழ்க் கல்வெட்டுகளின் எண்ணிக்கை, அவற்றில் இடம்பெறும் கோயில் நிர்வாகம் பற்றிய செய்திகள் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது இலங்கையில் எண்ணிக்கையளவில் குறைவான கல்வெட்டுகள் கிடைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் கோயில் நிர்வாகம் பற்றிய செய்திகள் குறைந்தளவிலே இடம்பெற்றுள்ளன. இருப்பினும் இலங்கையின் கோயிற் பண்பாட்டு வளர்ச்சியையும் அவ்வளர்ச்சியின் ஓர் அங்கமான கோயில் நிர்வாகத்தின் இயங்குமுறையையும் வரலாற்றுப் பின்புலத்தில் அறிந்துகொள்வதற்கான அடிப்படை ஆவணங்களாக அவை விளங்குகின்றன.

கா.இந்திரபாலா (1968), செ.குணசிங்கம் (1979), சி.க.சிற்றம்பலம் (1996), சி.பத்மநாதன் (2000, 2006) முதலானோர் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள், இலங்கையில் இந்து சமய வளர்ச்சி ஆகியன பற்றிய ஆய்வுகளில் இலங்கையில் நிலவிய இந்துக்கோயில் நிர்வாகம் பற்றிய தகவல்களை எடுத்துரைத்துள்ளனர். இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றிய ஆய்வுகளில் தமிழ்க் கல்வெட்டுகளில் இடம்பெறும் கோயில் நிர்வாகம் சார்ந்த செய்திகள் பெரிதும் பொதுநிலையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வுகளில், தனித்தனியான கல்வெட்டுகள் குறித்த ஆய்வுகளின்போதே, அக்கல்வெட்டுகளில் இடம்பெறும் கோயில் நிர்வாகம் தொடர்புடைய செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளில் இடம்பெறும் கோயில் நிர்வாகம் பற்றிய செய்திகளை எல்லாம் ஒருங்கிணைத்து, அவற்றை வரலாற்றுப் பின்புலத்தில் ஆராயும் முயற்சிகள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. அத்துடன் இலங்கையின் பௌத்த விகாரை நிர்வாகம் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளில் தமிழ்க் கல்வெட்டுகளில் இடம்பெறும் செய்திகள் பெரிதும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அதனால் இக்கட்டுரையானது மேற்படி ஆய்வுகளின் வழிநின்று அவற்றின் விரிவாக்கமாக இடைக்கால இலங்கையில் இந்து மற்றும் பௌத்த விகாரைகளின் நிர்வாக முறைமை தொழிற்பட்டவாற்றைத் தமிழ்க் கல்வெட்டுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாக அமைந்துள்ளது. உள்ளடக்கப் பகுப்பாய்வாக அமைந்துள்ள இந்த ஆய்வு, சமூக வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்நிலை ஆதாரங்களான கல்வெட்டுகள் யாவும் ஏலவே வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டுத் தொகுதிகளிலிருந்தும்

உதிரியான கட்டுரைகளிலிருந்தும் திரட்டப்பட்டன.

**இந்துக் கோயில் மற்றும் பௌத்த விகாரை நிர்வாகம்**

இலங்கையில் பௌத்த விகாரைகளின் நிர்வாகமும் இந்துக் கோயில்களின் நிர்வாகமும் தத்தம்மளவில் வேறுபட்ட கூறுகளைக் கொண்டிருந்துள்ளன. பௌத்த மரபில் மடாலயங்கள் முதன்மையான இடத்தினைப் பெறுவதால்பௌத்தசங்கத்தாரையும்மடாலயங்களையும்நிர்வகித்தலும்மடாலயங்களுக்கானபணியாளர்கள், அவற்றின் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகித்தலும் முதன்மையானவையாக இருந்திருக்கின்றன. இந்து மரபில் கோயிலின் உள் இயக்கத்தையும் அதன் சொத்துக்களையும் பணியாளர்களையும் நிர்வகித்தல் முதன்மையானதாக இருந்திருக்கிறது. இலங்கையின் எல்லா இந்துக்கோயில்களும் பிரம்மதேயங்களைக் கொண்டவையாக அமையவில்லை. அதனால் பிரம்மதேயங்கள் இருந்த இடங்களில் உள்ள கோயில்களுக்கும் பிரம்மதேய நிர்வாகத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இதற்கு மாறாக பௌத்த விகாரைகள் துறவிகள் தங்குகின்ற மடாலயங்களுடன் இணைந்திருந்துள்ளதுடன் அவ்விகாரைகள் மகாவிகாரை, அபயகிரி, ஜேத்தவனராம முதலான நிகாயங்களின் ஒன்றினைச் சார்ந்து இயங்கியுள்ளன. இத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் இரு மதங்களினது நிர்வாக அதிகாரிகளின் கடமைகள் பெரிதும் ஒத்திருந்துள்ளதுடன் அரசும், ஏனைய நிர்வாக அமைப்புகளும் அவற்றின் நிர்வாகத்தில் தொடர்புபட்டிருந்துள்ளன.

இலங்கையில் கிடைக்கப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டுகளில் பௌத்த விகாரை நிர்வாகத்தைவிட இந்துக்கோயில் நிர்வாகம் பற்றிய விடயங்கள் விரிவாக இடம்பெற்றுள்ளன. அப்பதிவுகள் இடைக்கால இலங்கையின் இந்துக்கோயில் நிர்வாகத்தின் அடிப்படைகளைப் புரிந்துகொள்வதற்குத் துணையாக அமைந்துள்ளன.

**இந்துக்கோயில் நிர்வாகம்**

தென்னிந்தியாவில் எழுச்சிபெற்ற பக்தி இயக்கத்தின் செயற்பாடுகளால் கோயிற் பண்பாடு மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்தது. சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் யாத்திரைகள், பக்திப் பாடல்கள், அற்புதங்கள் முதலானவற்றின் மூலமும் சமண, பௌத்த மதங்களுக்கு எதிரான கண்டனங்கள் மூலமும் கோயிற் பண்பாட்டை மக்களுக்கு நெருக்கமாக்கியுள்ளனர் கோயில்களைச் சமுதாய மையங்களாகக் கட்டியெழுப்பத் துணைநின்றுள்ளனர். இப்போக்குச் சோழர் காலத்தில் உச்ச வளர்ச்சி அடைந்துள்ளது.

பாடல்பெற்ற தலங்கள் சோழர் காலத்தில் பெருங் கற்கோயில்களாக அமைக்கப்பட்டன. சமயஞ்சார்ந்த நடவடிக்கைகளுக்கு அப்பால் சமூக, அரசியல் சார்ந்த செயற்பாடுகளும் கோயில்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டன. சோழ அரசின் நிர்வாகச் செயன்முறையில் கோயில்களும் முக்கியமான பங்கினை வகித்துள்ளன. வணிகப் பெருக்கம் கோயில் கொடைகளைப் பெருக்கியுள்ளது. அரசர்களும் அரச குடும்பத்தவர்களும் மட்டுமன்றி தனியுடைமை பெற்ற அரச பிரதிநிதிகள், படையினர், வணிகர், பிராமணர், தேவரடியார் முதலானவர்களும் கோயில்களுக்குக் கொடைகளை வழங்கியுள்ளனர். இப்போக்கினால் கோயிற் கட்டுமானம் விரிவடைந்ததுடன் கோயிற் பணியாளர்களின் எண்ணிக்கையும் பெருகத்தொடங்கியுள்ளது. "தஞ்சைப் பெரிய கோயிலில் மாத்திரம் 600இற்கு மேற்பட்ட பணியாளர்கள் தினமும் பணியிலிருந்துள்ளதைக் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது" (குணசிங்கம், 1976: 45). அதனால் கோயில் நிர்வாகப் பொறிமுறை

மிகுந்த வளர்ச்சியடைந்த நிலையில் இருந்துள்ளது.

இடைக்காலத் தென்னிந்தியக் கோயில் நிர்வாகத்துடன் தொடர்புடைய ஆட்சிக்குழுக்களாக, "அரசன் அல்லது அரசனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சபை, ஊர், நகரம் எனும் கிராம ஆட்சிக் குழுக்கள், பதி, பாதமூலம், பட்டுடைப் பஞ்சாசாரியார் என்ற அந்தணர் குழுக்கள், கோயில் ஆட்சிப் பொறுப்பில் நேரடியாக ஈடுபட்ட தேவகன்மிகள், வாரியங்கள், கணம் முதலான குழுக்கள் ஆகியன விளங்கியுள்ளன" (கிருட்டினன், 1991: 202). இக்குழுக்களுள் அந்தணர்கள், தேவகன்மிகள் முதலானோர் கோயில் என்ற நிறுவனத்தை உள்நின்று இயக்கும் சக்திகளாகத் தொழிற்பட, அரசும் சபை, ஊர், நகரம் முதலான நிர்வாக அமைப்புகளும் புறத்தே இருந்து கோயிலை இயக்கியுள்ளன. அவ்விரு நிலையில் இயங்கிய குழுவினருக்கு இடையே நேரடியான தொடர்புகள் இருந்துள்ளதுடன் அரசும் ஏனைய நிர்வாக அமைப்புகளும் அதிகாரமிக்கச் சக்திகளாகத் தொழிற்பட்டுள்ளன.

இலங்கையில் அனுராதபுர காலத்துக்குரியதாகக் கிடைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளுள் இரண்டில் கோயிலுக்கு வழங்கிய கொடையைக் குமாரகணத்துப் பேரூரார் பெற்றுக்கொண்டுள்ளதால், அவர்களைக் கோயில் நிர்வாகத்தினர் எனக்கொள்ளலாம். கல்வெட்டுகளில் இடம்பெறும் 'பேரூரார்' என்ற சொல், வெள்ளாள ஊர் மன்றத்தைக் குறிக்கிறது (சுப்பராயலு, 2003: 456). அதன்படி, இக்கல்வெட்டில் இடம்பெறும் பேரூரார் என்பது ஓர் ஊரினுடைய ஆளுங்குழுவைக் குறிக்கிறது எனலாம். அது எந்த ஊர் என்பது குறித்து அறியமுடியவில்லை. குமாரகணத்துப் பேரூர் என்பதைக் கிருஸ்ணசாஸ்திரி ஓர் ஊராகக் கருதியுள்ளார் (1913: 103). பேரூர் என்பது ஊர்ச்சபையாரைக் குறிப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அக்கருத்தை மறுக்கும் கா.இந்திரபாலா, குமாரகணம் குறித்த கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியாரின் "தனிக் கோயில்களைக் கவனித்துவந்த குழுக்கள்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, "குமாரகணம் என்ற சொல் தென்னிந்தியத் தமிழ்ச் சாசனங்களில் காணப்படுகிறது. அதன் பொருள் தனிக் கோயில்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக உள்ள வணிககணம் அல்லது நிர்வாகக் குழு என்பதாகும். ஆகவே, இக்கல்வெட்டுகளில் வரும் குமாரகணத்துப் பேரூரோம் என்ற சொற்றொடர் கோயிலின் குமாரகணத்திலே இருந்த ஊர்ச்சபையாரை அல்லது சபையாரைக் குறிக்கும்" (இந்திரபாலா, 1968: 21) என்கிறார்.

இந்திரபாலாவின் மேற்படி கருத்தை மறுக்கும் சி.பத்மநாதன், "குமாரகணத்துப் பேரூரோம்" என்ற தொடரிலே காணப்படும் பேரூரோம் என்ற சொல் குமாரகணம் என்பதைச் சேர்ந்தவொரு குழுவினரைக் குறிப்பதாகும். ஊரார், சபையார் ஆகியோரைக் குறிப்பிடுமிடத்து அவர்களின் நிலைக்களமாய் அமைந்த ஊரின் பெயரைக் குறிப்பிடுவது வழமை. அந்த வழமையின் அடிப்படையில் குமாரகணம் என்பது ஓரிடத்தின் பெயராதல் வேண்டும். குமாரகணம் என்பது மணிக்கிராமம் போல ஒரு வணிகர் கணத்தின் பேராதலுங்கூடும். அவர்கள் அதிகாரம் பெற்றிருந்த ஊர் அவர்களின் கணப்பெயரால் வழங்கியதென்றுங் கருதலாம்" (பத்மநாதன்: 2006: 51) என்பார்.

சுப்பராயலு அவர்கள் தொகுத்துள்ள தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதியில் குமாரகணம் என்ற சொல் இடம்பெறவில்லை. ஆனால், "சாத்த கணத்தார்" (2003: 237), "காளி கணத்தார்" (2003: 178) முதலானவை இடம்பெறுகின்றன. இவை முறையே சாத்தன் கோயிலையும் காளி கோயிலையும் நிர்வகிக்கும் குழுவினரைக் குறிக்கின்றன. அதேவேளை, பேரூராரை அவர்களது ஊரை அடிப்படையாகக் கொண்டு சுட்டும் வழமையும்

நிலவியுள்ளது. அதனால், இவ்வேறுபட்ட கருத்துக்களில் எது சரியானது என்பதை நிரூபிக்க முடியாதுள்ளது. இருப்பினும் கோயிலுக்கு வழங்கிய கொடையைக் குமாரகணத்துப் பேரூரார் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் கல்வெட்டும் அவர்களாலேயே வெட்டப்பட்டுள்ளதால் அக்கோயில் அக்குழுவினரால் நிர்வகிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்படும் முன்னரே கோயில்கள் நிறுவனமயப்பட்ட வகையில் நிர்வகிக்கப்பட்டுள்ளன என்பதற்கு இக்கல்வெட்டுகள் சான்றாக உள்ளன.

இலங்கையில் சோழர் அமைத்த கோயில்களையும் அக்கோயில்களில் கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளையும் அவதானிக்கின்றபோது அக்காலத்தில் இலங்கையில் இந்துக்கோயிற் பண்பாடு மிகுந்த வளர்ச்சி அடைந்திருந்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. கோயில்களின் வளர்ச்சியினால் கோயிற் பணியாளர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளதுடன் கோயிற் சொத்துக்களும் அதிகரித்துள்ளன. சோழர் தமிழ்நாட்டில் பின்பற்றிய கோயில் நிர்வாகப் பொறிமுறைகளை இங்கும் நடைமுறைப்படுத்தியுள்ளனர். இதற்கு மிகச் சிறந்த சான்றாக வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் உள்ள அதிராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டு அமைகிறது. அதிராஜேந்திரனது மூன்றாம் ஆட்சிக்குரிய அக்கல்வெட்டில் சோழப் பல்லவரையன் என்பவனால் நந்தா விளக்குக்குத் தினமும் எண்ணை வழங்க ஐந்து காசும் தாராநிலை விளக்கொன்றும் கொடையாக வழங்கப்பட்ட செய்தி இடம்பெறுகிறது. வழங்கப்பட்ட கொடையை ஏற்று நடத்துபவர்களாகப் பதிபாதமூலப் பட்டுடைப் பஞ்சாசாரியத் தேவகன்மி, பரிசாரகர், உவச்சன், ஆசாரியன், நாடாழ்வான், தேவரடியார் முதலானோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் வானவன் மாதேவி ஈஸ்வரத்தின் கோயில் நிர்வாகத்தில் அங்கம் வகித்தவர்களாக இருக்க வேண்டும். தென்னிந்தியக் கோயில் நிர்வாகத்தில் மேற்படி நபர்கள் அங்கம் வகித்துள்ளமைக்கு ஏராளமான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

பதிபாதமூலப் பட்டுடைப் பஞ்சாசாரியத் தேவகன்மி என்பதில் பதிபாதமூலம், பட்டுடையார், பாஞ்சாச்சாரியர், தேவகன்மி எனும் நான்கு சொற்கள் இணைந்துள்ளன. இச்சொற்கள் தென்னிந்தியக் கல்வெட்டுகளில் கோயில் நிர்வாகத்துடன் தொடர்புடைய தனித்தனிக் குழுவினரைக் குறிக்கப் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதியில் அவற்றுக்கான விளக்கங்கள் பின்வருமாறு இடம்பெற்றுள்ளன:

- பதிபாதமூலத்தார் – சிவன் கோயிலில் பூசை செய்வோர்
- தேவகன்மி – கோயிலில் பணிபுரிபவர்
- பட்டுடையார் – சிவன் கோயிலில் பூசை செய்வோரில் ஒரு வகை
- பஞ்சாச்சாரியார் – சிவன் கோயிலில் பூசை செய்வோர் (மேலது:397, 332, 387, 384).

மேற்படி பெயர்கள் தனித்தனியாக இடம்பெறுவதுடன் சில கல்வெட்டுகளில் அப்பெயர்கள் ஒன்றோடு ஒன்று இணைந்தும் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக, பட்டுடைத் தேவகன்மிகள், பதிபாதமூலப் பட்டுடைப் பஞ்சாசாரியத் தேவகன்மிகள் (SII. 01 - No.442) என்பனவற்றைக் குறிப்பிடலாம். ஆகவே, இக்குழுவினர் தனிப்பட்ட குழுவினராகவும் ஒன்றோடு ஒன்று இணைந்த குழுவினராகவும் காணப்பட்டுள்ளனர். அவ்வகையில் வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் அக்குழுவினர் எல்லோரும் ஒன்றாக இணைந்த அமைப்பாகத் தொழிற்பட்டுள்ளனர்.

பரிசாரகர் – பணியாளர், உவச்சன் – இசைக்கலைஞர், ஆசாரியன் – குரு, நாடாழ்வான், தேவரடியார்

முதலானவர்களும் கோயில் நிர்வாகத்துடன் தொடர்புபட்டிருந்துள்ளனர். இத்தொடர்பு சோழர்களின் தென்னிந்தியக் கோயில்களை ஒத்த வகையில் இலங்கையில் அவர்கள் காலத்துக் கோயில்கள் நிர்வகிக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகின்றன.

சோழருக்குப் பிற்பட்ட காலக் கோயில் நிர்வாகத்தில் வேளைக்காரர் முதலான படைகள் முக்கியமான இடத்தினை வகித்துள்ளன. கோயில்களுக்கு வழங்கப்பட்ட கொடைகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பு வேளைக்காரப் படைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனால் கோயில் நிர்வாகத்திலும் கோயில் பாதுகாப்பிலும் அப்படையினர் பிரதான பாத்திரத்தை வகித்துள்ளனர் எனலாம். உதாரணமாக, பளமோட்டையில் கிடைத்த முதலாம் விஜயபாகுவின் கல்வெட்டில் விஜயராஜ ஈஸ்வரத்துக்கு நங்கைசானி என்ற பிராமணப் பெண், இறந்த தன் கணவனுக்காக வழங்கிய கொடைகள் இடம்பெற்றுள்ளன. அக்கொடைகளுக்கு அழிவு வராமல் காக்கின்ற பொறுப்பு, 'ஶ்ரீ விக்கிரமசலா மேகத் தெரிந்த வலங்கை வேளைக்காறரிடம்' ஒப்படைக்கப்பட்டுள்ளது (EZ. 04 : 191–196, வரி – 22–24). வவுனியா பெரியமடுவைச் சேர்ந்த கோடலிபறிச்சானில் கிடைத்த கல்வெட்டில் 'வடகரைநாட்டு மூன்றுகை திருவேளைக்காறர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சறன்தெரிந்த வில்லிகள்' என்ற படைப்பிரிவு வீரர்கள் கோயிலின் அம்பலம், சிறுகுளம், கிணறு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுள்ளனர் (புஷ்பரட்ணம்: 2022).

இடைக்காலத்தில் நிலவிய கோயில் நிர்வாக முறைமை யாழ்ப்பாணத்தரசர் காலத்திலும் அதற்குப் பின்பான காலத்திலும் தொடர்ந்து நிலவிவந்துள்ளன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்காதபோதிலும் இலக்கிய மற்றும் ஏனைய சான்றுகளின்வழி அந்நிர்வாக முறைமை தொடர்ந்தும் நிலவியுள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது.

**பௌத்த விகாரை நிர்வாகம்**

பௌத்தத் துறவிகளையும் துறவிகளின் தங்குமிடமான மடாலயத்தையும் உள்ளடக்கிய அமைப்பு விகாரை எனப்படுகிறது. அதனால் துறவிகளுக்கான ஒழுக்க விதிகள், மடங்களின் நடைமுறைகள் முதலானவற்றைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாக விகாரை இயக்கம்பெற்றுள்ளது. துறவிகள் அரசுடனும் சமூகத்துடனும் கொண்ட தொடர்பினாலும் மடாலயங்களின் உடைமைகளினாலும் விகாரைகளின் நிர்வாகப் பொறிமுறை நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

"முழு தெற்காசியாவிலும் துறவற வாழ்வின் பொருளாதார அம்சங்கள், பௌத்த மடாலயங்களின் நிர்வாக அமைப்புகள் ஆகியன பற்றிய விரிவான சான்றுகள் இலங்கையில் மட்டுமே உள்ளதென்பர்" (Gunawardana, 1979: 135). இலங்கையில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் காணப்படுகின்ற தகவல்களும் விகாரைகளையொட்டி எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்கள், அவற்றுக்கு எழுதப்பட்ட உரைகள் முதலானவற்றில் இடம்பெறுகின்ற தகவல்களும் பௌத்த விகாரைகளின் நிர்வாக முறைமை குறித்து அறிந்துகொள்வதற்கான பெருங்களஞ்சியமாக விளங்குகின்றன.

தொடக்க காலத்தில் தன்னார்வ கொடைகளில் துறவிகள் தங்கி வாழ்ந்ததால் அவர்கள் தங்கியிருந்த மடாலயங்களின் பராமரிப்பு வேலைகளுக்குச் சிறுதொகையினர் நியமிக்கப்பட்டிருந்துள்ளனர். பிற்பட்ட காலத்தில் துறவிகள் தன்னார்வ கொடைகளில் மட்டும் தங்கியிருத்தல் சாத்தியமற்றதாகியபோது

மடாலயங்கள் சொத்துள்ள நிறுவனங்களாக வளர்ச்சிபெற்றன. அதன்போது "மடாலயங்களின் நிர்வாகத்திற்கு வழக்கமான அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவைச் சங்கம் பயன்படுத்துவது அவசியமாகியது. மடங்களின் உடைமைகளாக நிலம், நீர்ப்பாசனப் பணிகள், உப்பளங்கள் மற்றும் கால்நடைகள் உட்பட பரந்தளவில் இருந்தன. சில நிலமானியங்கள் மிகவும் விரிவானவையாக இருந்துள்ளன. அவற்றுள் பல, மடங்களிலிருந்து கணிசமானளவு தொலைவில் இருந்துள்ளன" (மேலது: 96). அதனால் அவற்றை நிர்வகிப்பதில் மடங்கள் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. இந்நிலையால் மடத்தின் சொத்துக்களை நிர்வகிக்கவும் மடங்களில் கடமையாற்றும் பணியாளர்களை நிர்வகிக்கவும் நிர்வாக முறைமையொன்று வளர்ச்சி பெற்றுள்ளது.

கல்வெட்டுகள் மற்றும் பாளி வரலாற்று நூல்களிலிருந்து 'ஆராமிகா', 'காப்பியக்காரக' ஆகியோர் மடாலயப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளமையை அறிந்துகொள்ள முடிகிறது. ஆராமிகா என்பது மடத்தில் இணைக்கப்பட்ட பலதரப்பட்ட தொழிலாளர்களைக் குறிக்கவும் காப்பியக்காரக என்பது மடத்தின் செல்வத்துக்குப் பொறுப்பான அதிகாரியைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் அக்கபோதி 100 ஆராமிகாஸ்களைக் கந்த விகாரைக்கும் நாலாம் அக்கபோதியின் மனைவியான ஜெட்ஹா 100 ஆராமிகாஸ்களை ஜெட்ஹாராமைக்கும் வழங்கியதாகக் கூறப்படுகிறது (மேலது: 95–110).

இலங்கையின் மடாலயங்கள் மகாவிகாரை, அபயகிரி விகாரை, ஜேத்தவனராம விகாரை எனும் மூன்று பெரும் நிகாயங்களின்கீழ் இயங்கியுள்ளன. முதலில் மகாவிகாரை மட்டும் தனி முதன்மையான அமைப்பாக விளங்கியுள்ளது. பின்னர் அபயகிரி நிகாயம், ஜேத்தவனராம நிகாயம் ஆகியன தோற்றம் பெற்றுள்ளன. இம்மூன்று நிகாயங்களும் தமக்கான விதிகளையும் வரன்முறைகளையும் கொண்டு இயங்கியுள்ளன. நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்த மடாலயங்கள் மேற்படி மூன்று நிகாயங்களுள் ஒன்றினைச் சேர்ந்தனவாக இருந்ததால் அவை சார்ந்துள்ள நிகாயத்தின் விதிமுறைகளைப் பின்பற்றியுள்ளன. "பொ.ஆ.05 ஆம் நூற்றாண்டிலிருந்து நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள மடாலயங்கள் மேற்படி மூன்று நிகாயங்களுள் ஒன்றினைச் சேர்ந்ததாகக் கல்வெட்டுகள் மற்றும் இலக்கியச் சான்றுகளில் விபரிக்கப்பட்டுள்ளன. பொ.ஆ. 09,10 ஆம் நூற்றாண்டுகளில் நிகாயங்களின் ஆதிக்கமும் நிறுவன வலுவும் உயர்ந்த எல்லையை அடைந்துள்ளன" ( மேலது:07).

சிங்களக் கல்வெட்டுகளிலும் பாளி நூல்களிலும் மடாலயங்களின் நிர்வாகம் குறித்த விரிவான தகவல்கள் இடம்பெற, தமிழ்க் கல்வெட்டுகளில் அது குறித்த பதிவுகள் அரிதாகவே உள்ளன. அனுராதபுரக் காலத்துக்குரியனவாக அபயகிரி, றுவான்வெலிசாய, பங்குளிய முதலான விகாரைகளில் கிடைக்கப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டுகளில் விகாரை நிர்வாகம் குறித்த எந்தப் பதிவும் இடம்பெறவில்லை. மாக்கோதைப் பள்ளி பற்றிய கல்வெட்டிலிருந்து அவ்விகாரையின் நிர்வாகத்தில் பங்கெடுத்த குழுவினருள் ஒருசாராரை வரையறுத்துக்கொள்ள முடிகிறது. அக்கல்வெட்டில் இடம்பெறும், "நான்கு நாட்டாராலு மமைக்கப்பட்ட நால்வரும் மாக்கோதைப் பள்ளியில் கம்மியருங் கூடி இத்தர்மம் கொண்டு செலுத்துவதாக வமைத்துக் கல்வெட்டுவித்தோம்" (SII. vol. 4. - No.1399) என்ற குறிப்பிலிருந்து நான்குநாட்டார் எனும் வணிகக் குழுவின் உறுப்பினர்களும் கம்மியரைச் சேர்ந்தோரும் விகாரையின் நிர்வாகத்தில் அங்கம் வகித்திருந்துள்ளனர் என்பதை ஊகித்துக்கொள்ள முடிகிறது.

சோழர் காலக் கல்வெட்டுகளிலும் பௌத்த விகாரையின் நிர்வாகம் பற்றிய நேரடியான எந்தக் குறிப்புகளும்

இடம்பெறவில்லை. வெல்கம் விகாரையில் கிடைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளுள் ஒரு கல்வெட்டில் சங்கத்தார் விளக்கு எரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர். மற்றொரு கல்வெட்டில் சங்கத்தாருக்குக் கொடை வழங்கப்பட்டுள்ளது. அதனால் வெல்கம் விகாரையின் நிர்வாகத்தில் பௌத்தச் சங்கத்தார் நேரடியாக ஈடுபட்டிருப்பர் என்பதற்கு அவற்றைச் சான்றாகக் கொள்ளலாம். அவ்வாறே சோழருக்குப் பிந்திய காலத்து றுவான்வெலிசாய விகாரையின் தமிழ்க் கல்வெட்டொன்றில் உபாசகருக்கு நிலம் ஒதுக்கப்பட்ட செய்தி இடம்பெற்றுள்ளது. இம்மூன்று பதிவுகள் தவிர வேறு எங்கும் சங்கத்தார் பற்றிய பதிவுகள் தமிழ்க் கல்வெட்டுகளில் இடம்பெறவில்லை. மடாலயங்களின் நிர்வாகத்தில் முதன்மையான இடத்தைப் பெற்றவர்களாகப் பௌத்தத் துறவிகள் காணப்பட்டுள்ளதுடன் அவர்கள் மூன்று நிகாயங்களுள் யாதாயினும் ஒன்றுக்குக்கீழ் வருபவர்களாகவும் அங்குள்ள தலைமைத் துறவிக்குக் கட்டுப்பட்டு நிர்வாக ஒழுங்குகளை முன்னெடுப்பவர்களாகவும் இருந்துள்ளனர். தமிழ்க் கல்வெட்டுகள் எவற்றிலும் அத்தகைய பதிவுகள் இடம்பெறவில்லை.

பொலநறுவையிலுள்ள வேளைக்காரர் சாசனம் பௌத்த விகாரையின் நிர்வாகம் பற்றிய புரிதலை விரிவாக்கிக் கொள்ளும் வகையிலான தகவல்களைக் கொண்டுள்ளது. கல்வெட்டில் தலதா மாளிகையைப் பாதுகாக்கும் உடன்படிக்கை மேற்கொண்ட பின்னணி "ஸகல சாஸ்ராகம ஸீலாசார ஸம்பந்நரான ராஜகுரு உதுருள்மூளையில் வ்யாரிணி முகலந் மஹாஸ்தவிரர் ரஜாமாத்யரோடும் கூட எழுந்தருளியிருந்து எங்களை அழைத்து அருளிச் செய்தமையில்...." (SII. vol. 4. - No.1396) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, விகாரையின் தலைமை நிர்வாகப் பொறுப்பு அவ்விகாரையின் பிரதம குருவிடம் காணப்பட்டுள்ளது. பொலநறுவை தலதா மாளிகையில் இவ்வுடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட காலத்தில் வியாரிணி முகலன் மகாஸ்தவிரர் என்பவர் ராஜகுருவாக இருந்து நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பை வகித்துள்ளார். அத்துடன் விகாரையின் நிர்வாகமானது தனித்து இயங்கியதாக இல்லாமல் அரசுடன் தொடர்புபட்டதாக இருந்துள்ளது. பிரதமகுரு அமைச்சர்களுடன் இணைந்தே முடிவு எடுத்துள்ளார். தலதா மாளிகையும் அதன் சின்னங்களும் எப்பொழுதும் அரசால் பாதுகாக்கப்படுவதாக விளங்கியுள்ளமையால் தலதா மாளிகையின் நிர்வாகத்தில் அரசு நேரடியாகத் தொடர்புபட்டிருந்துள்ளது எனலாம். அவ்வாறே பிரதான பெரும் விகாரைகளினதும் மடாலயங்களினதும் நிர்வாகத்தில் அரசு ஈடுபட்டுள்ளது.

தலதா மாளிகையின் பாதுகாப்புப் பொறுப்பை வேளைக்காரர் படை ஏற்றுக்கொண்டது போல வேறு பௌத்த விகாரைகளின் பாதுகாப்புக்கும் அவ்வாறான படையினர் பொறுப்பாக இருந்துள்ளனர். உதாரணமாக, திரியாய மயிலன் குளம் கல்வெட்டில் "விக்கிரமசலா மேகன் பெரும்பள்ளி வேளைக்காறர் அபையம்" (Gunasingam, 1980: 31) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டுவஸ்நுவர கல்வெட்டில் விகாரை, முனிவராலயம், சாலை, சயித்தியம், பிரிவெனா ஆகிய நிறுவனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன (UCR – 18, p. 157). முனிவராலயம் என்பது மடாலயத்தைக் குறிக்கிறது. பிரிவெனா கல்வி நிலையத்தைக் குறிக்கிறது. மிகவிரிவான அமைப்புகளைக் கொண்ட நிறுவனமாக இக்கல்வெட்டு குறிப்பிடும் விகாரை இயங்கிவந்துள்ளதாலும் அவ்விகாரைக்கென மடாலயம், பிரிவெனா முதலானவை இருந்தபடியாலும் சங்கத்தார் அதன் நிர்வாக விடயங்களில் நேரடியாக ஈடுபட்டிருப்பர் எனலாம்.

எறிவீரப்பட்டினங்கள் பற்றிய கல்வெட்டுகளிலும் பௌத்த விகாரையின் நிர்வாகம் குறித்த சில

தகவல்களை அறிந்துகொள்ள முடிகிறது. எறிவீர்களுக்குக் குறிப்பிட்ட பட்டனத்தில் பெருமக்கள் – ஆளும் நிர்வாகக் குழு – சிறப்பு செய்துள்ளதுடன் அதன்போது அப்படையினர் தமது சிறப்புரிமைகள் சிலவற்றை விட்டுக்கொடுத்துள்ளனர். அத்தகைய கல்வெட்டுகள் விகாரைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. அதனால் நகரின் ஆளும் கணமாகிய பெருமக்கள் விகாரைகளின் நிர்வாகத்துடன் நேரடியாகத் தொடர்பு பட்டிருந்துள்ளனர் எனலாம். உதாரணமாக, விஹாரஹின்ன கல்வெட்டு பட்டினத்துப் பெருமக்களுக்கும் எறிவீரர்களுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்பாட்டை விகாரை வளாகத்தில் பொறித்துள்ளது. இது விகாரைக்கும் பட்டினத்துப் பெருமக்கள் எனப்படும் ஆளும் கணத்தாருக்கும் இடையிலான தொடர்பைக் காட்டுகிறது.

**முடிவுரை**

இடைக்கால இலங்கையின் சமூக வாழ்வு சமயங்களின் தாக்கம் மிக்கதாக விளங்கியுள்ளது. சமயங்கள் கட்டமைத்த கருத்துருவங்களும் பின்பற்றிய நடைமுறைகளும் சமூகத்தின் மொத்த அசைவையும் நிர்ணயித்துள்ளன. அரசு முதலான ஆதிக்கச் சக்திகள் சமய நிறுவனங்களுடன் கூட்டுசேர்ந்து சமூக இயக்கத்தைத் தம் கட்டுக்குள் வைத்திருந்துள்ளன. சமய நிறுவனங்கள் பெற்ற பண்பாட்டு மதிப்பும் பொருளாதார வளமும் கருத்தியல் தளத்திலும் சமூக நடைமுறையிலும் அவற்றை வலுவான சக்திகளாக நிலைநிறுத்தின. அதன்விளைவால் அரச நிர்வாகம், கிராம நிர்வாகம், நீர் மேலாண்மை, உற்பத்தி நடவடிக்கைகள், கலை, கல்வி, மருத்துவம், வணிகம் என யாவும் கோயில்களுடன் நெருக்கமாகப் பிணைந்திருந்தன. அவற்றினால் கோயில் நிர்வாகப் பொறிமுறை நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாக விளங்கியுள்ளது.

இலங்கையைச் சோழர் கைப்பற்றுவதற்கு முன்னரே இந்துக்கோயில் நிர்வாக முறைமை வளர்ச்சியடைந்த நிலையில் இருந்திருக்கிறது என்பதை அனுராதபுர காலத்திற்குரிய குமாரகணத்துச் சாசனங்கள் மூலம் அறிய முடிகிறது. அவ்வளர்ச்சி நீண்ட காலமாக இலங்கையில் நிலவிவரும் கோயிற்பண்பாட்டின் தொடர்ச்சியினால் விளைந்தது எனலாம். பொ.ஆ. ஏழாம் நூற்றாண்டிலே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய கோயில்கள் மிகுந்த பிரசித்தம் பெற்றிருந்துள்ளன என்பதற்குச் சம்பந்தரும் சுந்தரரும் அக்கோயில்கள்மீது பாடிய தேவாரப் பதிகங்கள் சான்றுபகர்கின்றன. அக்கோயில்கள் தவிர இன்னும் பல கோயில்கள் இருந்துள்ளன என்பதை மகாவம்சம் முதலான பாளி நூல்களின் வழி அறிய முடிகிறது. அக்கோயிற் பண்பாடானது சோழரின் ஆட்சிக் காலத்தில் மிகுந்த செழுமை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் தாம் பின்பற்றிய கோயிற் பண்பாட்டு நடைமுறைகளைச் சோழர் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தியுள்ளனர். அதன்விளைவாகவே அக்கால இலங்கையின் கோயில் நிர்வாகம் தமிழ்நாட்டுக் கோயில்களின் நிர்வாகத்தை ஒத்திருந்துள்ளது. சோழருக்குப் பின்னரும் சோழர் நடைமுறைப்படுத்திய கோயில் நிர்வாக முறைமை தொடர்ந்து நிலவியிருக்கிறது. சோழரை வென்ற விஜயபாகுவும் அவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர்களும் இந்து சமயத்தை வெறுத்து ஒதுக்கவில்லை. சோழர் காலத்து இராஜராஜ சதுர்வேதி மங்கலம், அங்கிருந்த சிவாலயம் என்பன விஜயராஜ சதுர்வேதி மங்கலம், விஜயராஜ ஈஸ்வரம் என விஜயபாகுவின் பெயரைப் பெற்றமை அதற்கு நல்ல சான்றாகும். இலங்கையில் நிலைபெற்றிருந்த வணிகக் கணங்களும் வணிகப் படைகளும் தமிழ்நாட்டில் போல இங்கும் கோயில் நிர்வாகத்தில் பங்கெடுத்துள்ளனர். சோழர் காலத்தில் நிலவிய கோயில் நிர்வாக முறைமை தொடர்ந்தும் நீடித்துள்ளது என்பதற்குக் கோணேசர் கல்வெட்டு முதலான யாழ்ப்பாணத்தரசர் காலத்து நூல்கள் சாட்சியாக உள்ளன.

பௌத்த விகாரை நிர்வாகத்துடன் தொடர்புடைய செய்திகள் தமிழ்க் கல்வெட்டுகளில் பரவலாக இடம்பெறாத போதிலும் பௌத்த விகாரை நிர்வாகம் குறித்த அடிப்படையான செய்திகளையும், தமிழ் வணிகக் குழுவினரும் வணிகப் படையினரும் விகாரை நிர்வாத்தில் அங்கம் வகித்துள்ள தகவலையும் அவற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இலங்கையின் பௌத்தப் பண்பாட்டு வளர்ச்சியிலும் பேணுகையிலும் தமிழர்களும் பங்கெடுத்துள்ளனர் என்பதற்கு அவை சான்றுகளாக உள்ளன.

இடைக்கால இலங்கையில் கோயிலுக்கும் அரசுக்கும் இடையிலும் கோயிலுக்கும் சமூகத்துக்கும் இடையிலும் நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. அவற்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கோயில் நிர்வாக முறைமை நன்கு வளர்ச்சியடைந்த நிலையிலிருந்துள்ளமையையும் அந்நிர்வாக முறைமை கூட்டுப்பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டதாக விளங்கியுள்ளமையையும் தமிழ்க் கல்வெட்டுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

**English Books**

Codrington, H.W & Paranavitana, S (1934). **Epigraphia Zeylanica Voll.4,** London: Oxford University press.

Gunasingam, S (1980). **A Tamil Inscription from Mayilawewa (Mayilankulam) Trincomalee District,** Trincomalee Inscriptions, Series No.3, Peradeniya.

Gunawardana, R.A.L.H (1979). **Robe and Plough,** The University of Arizona Press, London.

Kanapathipillai, K (1960). **"A Tamil Inscription from Panduvasnuwara",** UCR, Vol.XVIII – 3&4, pp. 157-162.

Krishna Sastri, H (1923). **South Indian Inscriptions Vol. IV,** Government Press, Madras.

**Tamil Books**

*Indrapala, K (1968).* ***"Anurathapuratilulla Kumarakanatup Peeruurar kalvettukal",*** Chintanai 2-1, pp. 19-23.

*Kiruttinan, A (1991).* ***Kalvettil Vaalviyal,*** Manivasagar pathippagam, Chidamparam.

*Gunasingam, S (1976). "****Maththiyakaalath Tamilnaattu Hindu Kovilgal – Tholil Niruvanaggal",*** Chintanai 1-3.

*…………………., (1979).* ***"Polannaruvai Vaanavanmaathevi Esvarak Kovil Athirajendran kaalak kalvettu",*** Ilankathir – 23, Tamil Sangam, University of Peradeniya.

*Chitrampalam, C.K (1996).* ***Iilatu Hindu samaya varalaru – A.D. 500 Varai,*** *Jaffna University, Thirunelvely.*

*Subbarayalu, Y (2003).* ***Tamil Kalvettuch Chollagarathi I & II,*** Shanthi Shathana, Chennai.

*Pathmanathan, S (2006).* ***Ilangai Tamil Sasanaggal,*** Department of Hindu Religious and Cultural Affairs, Colombo.

*Pusparatnam, P (08.12.2022)* ***"Vannip Perunilapparappil Meendum Ariyathoru Tamilk Kalvettu Kandupidippu",*** Valampuri.

# திரைப்படம் பற்றிய பெஞ்சமினின் சிந்தனைகள் – ஒரு பின் நவீனத்துவ நோக்கு

# Thoughts of Benjamin on Film Art – A Post Modern View

கலாநிதி இரத்தினசபாபதி பிரேம்குமார்

சிரேஷ்ட விரிவுரையாளர்

தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

premkumarr@esn.ac.lk

***Abstract***

*Film as one of the forms of art has emerged after 19th century in the history of art. However, film itself undergoes severe debate whether it is art or not among the aesthetic scholars. Some Classical, Modern and Marxist aestheticians(Adorno and Roger Scruton) evaluate film as imperfect form of art. Adorno, Modern and Marxist aesthetician refuse to accept film as a genuine form of art for following reasons: purposefulness, commodifying nature, amusement, profit oriented in the capitalistic society. In this back ground, Benjamin's view on film as form of art is getting momentum. Benjamin views on film by analyzing history of art from the beginning and makes positive observations on film as a form of art. Benjamin assesses film as a revolutionary form of art from socio -cultural perspective. Besides, Benjamin never fails to identify art inseparably associated with aura of religion and rituals in the past and he celebrates film art for which it was successfully separated from religion and rituals. He also identifies unique characteristics of film art which substantially separates it from other forms of art: mechanical reproducible, exhibitive nature, role of artistes and spectators, role of camera, etc. This study tries to evaluate Benjamin's view on film art from the point of view of Post modernism. For this purpose, original and secondary works of Benjamin on film , Modern and Marxist works on cinema have been studied. Philosophical research methods: analytical and synthetic methods, conceptual analysis, holistic methods have been used in this research.*

***Key words**: film, mechanical reproducible, aura, Post Modernism*

## அறிமுகம்

19ஆம் நூற்றாண்டின் பின்னர் நன்கு வளர்ச்சி பெற்ற கலை வடிவமாக திரைப்படக்கலை விளங்கி வருகின்றது. இக்கலையின் வளர்ச்சிக்கு நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்தின் பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகிறது. கலைப் பற்றிய வரலாற்றுரீதியான நோக்கில் திரைப்படக்கலை பற்றிய மதிப்பீடு உடன்பாடான, எதிர்மறையான பரிமாணங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. காலத்துக்குக் காலம் கலை பற்றிய கொள்கைகளும் விதிகளும் உருவாக்கப்பட்டு வந்துள்ளன. கட்டடக்கலை, சிற்பக்கலை முதலான நுண்கலைகளும் மதங்கள் மற்றும் சடங்குகளுடன் தொடர்புபட்ட கலைகளும் 19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டன. இத்தகைய பின்புலத்தில் திரைப்படக்கலையின் வருகை முக்கியத்துவம் பெறுகின்றது. திரைப்படக்கலை ஒரு கலையா? இல்லையா? போன்ற வினாக்கள் வினவப்பட்டு அவற்றுக்கான விடைகளைத் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரம்பரிய கலைக்கு முக்கியத்துவம் வழங்கும் அழகியல் அறிஞர்கள் திரைப்படக் கலையினை ஒரு நிறைவுபெற்ற கலையாக கருத்தில் கொள்ள மறுக்கின்றனர். இன்னொரு வகையில் கூறின், இதனை வெகுசனக் கலைவடிவமாகவும் குறைவுபட்ட கலை வடிவமாகவும் கருதுவது குறிப்பிடத்தக்கது. திரைப்படக்கலையில் இரண்டு வகைப்பட்ட நோக்குடைய திரைப்படங்களைக் காண முடிகிறது.

1. வர்த்தக நோக்கிலான திரைப்படங்கள்
2. கலைத்துவ நோக்கிலான திரைப்படங்கள்

மேற்குறிப்பிட்ட இரண்டு வகைப்பட்ட திரைப்படங்களும் 19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இருந்து தற்காலம் வரை உருவாக்கப்பட்டு வந்தே காணப்படுகின்றன. அடோர்னோ போன்ற செந்நெறிசார்ந்த அழகியல் அறிஞர்கள் முதலாளித்துவ சமூகத்தில் வர்த்தக நோக்கிலான திரைப்படங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை பகுப்பாய்வு செய்கின்றனர். இவ்வாறான பகுப்பாய்வினை நிகழ்த்தும்போது பாரம்பரியமான கலைகள் கொண்டிருக்கக் கூடிய பண்புகளில் இருந்து திரைப்படக் கலையை நோக்கவும் விமர்சிக்கவும் முயற்சிக்கின்றனர். இத்தகைய பின்புலத்தில் அடோர்னோவின் நோக்கில் திரைப்படக் கலையானது கலைக்குரிய முக்கிய பண்புகளை இழந்து காணப்படுகின்றது. நோக்கத்தன்மை, இலாபம் ஈட்டுதலை முக்கிய நோக்கமாகக் கொள்ளுதல், சுயாதீன தன்மையை இழந்து காணப்படுதல் , நுகர்வுப் பொருளாகக் காணப்படுதல் மற்றும் பொழுது போக்குத் தன்மை போன்ற காரணங்களின் மூலம் உயர்ந்த கலைக்குரிய தன்மையினை திரைப்படம் இழந்து காணப்படுவதாக அடோர்னோ குறிப்பிடுகின்றார். ஆயினும் கலைத்துவ திரைப்படத்தின் பண்புகளைக் கருத்தில் கொள்ளாமல் வர்த்தக நோக்கிலான திரைப்படங்களைக் கருத்தில் கொண்டே அடோர்னோ திரைப்படம் தொடர்பாக தனது கருத்துக்களை முன்வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெஞ்சமின் வர்த்தக நோக்கிலான திரைப்படங்கள், கலைத்துவ நோக்கிலான திரைப்படங்கள் என்ற வேறுபாடின்றி திரைப்படங்கள் தொடர்பாக பல உடன்பாடான கருத்துக்களை முன்வைக்கின்றார். இத்தகைய கருத்துக்களை எடுத்துரைப்பதும் அவற்றை மதிப்பிடுவதும் இவ்வாய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கங்களாக இருக்கின்றன.

## ஆய்வுப் பிரச்சினை

கலையின் பரிணாம வளர்ச்சியில் திரைப்படம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆயினும் திரைப்படம் உயர்ந்த

கலை வடிவமா? இல்லையா? என்ற வாத விவாதங்கள் அழகியலறிஞர்கள் மத்தியில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. வோல்டர் பெஞ்சமின் திரைப்படம் ஒரு ஏற்றுக் கொள்ளப்படத்தக்க கலை வடிவம் தான் என்று வாதிடுவதுடன், ஏனைய கலை வடிவங்களில் காண முடியாத பல பண்புகளை திரைப்படக் கலையில் அடையாளங் காண்கின்றார். தத்துவ வரலாற்றில் பின் நவீனத்துவம் முக்கியத்துவம் பெறும் ஒரு தத்துவமாகக் காணப்படுகின்றது. இத்தகைய பின்புலத்தில் திரைப்படக் கலை தொடர்பான பெஞ்சமினின் வாதங்களை பின் நவீனத்துவ நோக்கில் பரீசீலனை செய்வதே இங்கு ஆய்வுப்பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வினாக்கள்**

1. திரைப்படக் கலை ஒரு கலை வடிவமா? அதற்கு எதிரான வாதங்கள் யாவை?
2. திரைப்படக் கலைக்கு ஆதாரவான பெஞ்சமினின் வாதங்கள் யாவை?
3. பின் நவீனத்துவ நோக்கில் பெஞ்சமினின் திரைப்படம் தொடர்பான வாதங்களின் தன்மைகள் யாவை ?

**ஆய்வின் நோக்கம்**

பின் நவீனத்துவ நோக்கில் பெஞ்சமினின் திரைப்படம் தொடர்பான வாதங்களை பரிசீலனை செய்வதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். திரைப்படக் கலைக்கு எதிரான வாதங்களை கண்டறிதல் மற்றும் திரைப்படக் கலைக்கு ஆதரவான பெஞ்சமினின் வாதங்களை கண்டறிந்து வெளிக்கொணர்தல் என்பன இவ்வாய்வின் உப நோக்கங்களாக இருக்கின்றன.

**இலக்கிய மீளாய்வு**

இலக்கிய மீளாய்வு ஆய்வு இடைவெளியினை கண்டறிந்து ஒரு புதிய ஆய்வினை நிகழ்த்துவதற்கு உதவுகின்றது. இவ்வகையில் “திரைப்படம் பற்றிய பெஞ்சமினின் சிந்தனைகள் – ஒரு பின் நவீனத்துவ நோக்கு” என்ற ஆய்வுக்கு பின்வரும் இலக்கிய மூலங்கள் உதவியுள்ளன.

அடோர்னோ மற்றும் மக்ஸ் ஹொர்கைமர் என்பவர்களினால் எழுதப்பட்ட ‘அறிவொளியின் தர்க்கம்’ (*Dialectic of Enlightenment* -2002) என்ற நூலில் இடம்பெறும் கலாசாரத் தொழில்துறை(*Cultural Industry* )எனும் அத்தியாயம் மார்க்ஸிச நோக்கில் முதலாளித்துவ சமூகத்தில் கலை எவ்வாறு ஒரு பண்டமாக மாற்றப்படுகிறது என்பதை விரிவாக ஆராய்கிறது. மேலும், இந்தப்பகுதி பாரம்பரிய கலைக்குரிய பண்புகளை எவ்வாறு திரைப்பட கலை இழந்து காணப்படுகிறது என்ற விடயத்தையும் வெளிக்கொண்டு வருகிறது. பெஞ்சமினால் எழுதப்பட்ட ‘இயந்திரமயமாக்க மீளுருவாக்க யுகத்தில் கலைப்படைப்பு’ (*The work of Art in the Age of Mechanical Reproduction*-1969) என்ற படைப்பு திரைப்படக் கலையினை ஏனைய கலைகளுடன் ஒப்பிட்டு திரைப்பட கலையின் தனித்துவமான பண்புகளை விரிவாக ஆராய்கின்றது. அடோர்னோவினால் எழுதப்பட்ட ‘திரைப்படம் தொடர்பான வெளிப்படைத் தன்மைகள்’ (*Transparancies on Film* -1982) என்ற படைப்பானது திரைப்படம் தொடர்பான அடோர்னோவின் பிந்திய நிலைப்பாட்டினையும் எவ்வாறு திரைப்படம் கலையாக இருக்கமுடியும் என்ற சாத்தியப்பாடுகளையும் ஆய்வு செய்வதாக உள்ளது. ஒலிம்பியோ லோராவினால் எழுதப்பட்ட ‘திரைப்படம் தொடர்பான சிந்தனைகள்: அடோர்னோ மற்றும் பெஞ்சமினை விமர்சன ரீதியாக நோக்குதல்’ (*Thoughts on Film : Crtically Engaging with both Adorno and Benjamin*) என்ற ஆய்வுக்கட்டுரை அடோர்னோ மற்றும் பெஞ்சமினின் திரைப்படம்

தொடர்பான சிந்தனைகளை ஒப்பிட்டு ஆராய்கின்றது. கோடன் கிரஹகம் என்பவரினால் எழுதப்பட்ட 'கலை பற்றிய மாக்ஸிசக் கோட்பாடு'(*The Marxist Theory of Art* -1997) என்ற கட்டுரை கலை பற்றிய மாக்ஸிசக கொள்கையினை விமர்சன ரீதியாக ஆய்வு செய்கின்றது. பிரான்சிஸ்கோ பியாங்கோ என்பவரினால் எழுதப்பட்ட ' தியோடர் அடோர்னோவின் அழகியல் கோட்பாட்டில் கலையும் சமூகமும்' (*Art and Society in Theodor Adorno's Aesthetic Theory* -2020) என்ற ஆய்வுக் கட்டுரை அடோர்னோவின் அழகியல் கோட்பாட்டில் கலைக்கும் சமூகத்திற்கும் இடையே காணப்படுகின்ற உறவு நிலைகளை ஆய்வு செய்கின்றது. ஆர். டபிள்யு. அலனினால் எழுதப்பட்ட ' நவீனத்தில் அழகியல் அனுபவம் : புதிய ஜேர்மானிய விமர்சனத்தில் பெஞ்சமின், அடோர்னோ மற்றும் தற்காலத் திரைப்படக்கோட்பாடு' (*The Aesthetic Experience of Modernity: Benjamin, Adorno, and contemporary Flim Theory in New German Critique* -1987) என்ற படைப்பில் தற்கால திரைப்படக் கோட்பாட்டுடன் ஒப்பிட்ட வகையில் பெஞ்சமின் மற்றும் அடோர்னோவின் சிந்தனைகளை மதிப்பீடு செய்வதாக உள்ளது. ஜெ. ஏ. பிஷரினால் எழுதப்பட்ட ' தாழ்ந்த கலைக்கு எதிரான உயர்ந்த கலை'(*High Art versus Low Art*- 2001) என்ற ஆய்வுக் கட்டுரை திரைப்படக் கலையினை ஒரு பொது மக்கள் கலையாக அடையாளப்படுத்துகின்றது. முரே சிமித்தினால் எழுதப்பட்ட ' திரைப்படம்' (*Film*-2001) என்ற ஆய்வுக் கட்டுரை பொது மக்கள் கலைக்கு எதிரான பாரம்பரிய அழகியல் சிந்தனைகளில் காணப்படுகின்ற குறைகளை எடுத்துரைக்கின்றது. டேவிட் நொவிஸினால் எழுதப்பட்ட ' பின் நவீனத்துவம், பார்த் மற்றும் டெரிடா'( *Post Modernism, Barthes and Derrida* -2001) என்ற படைப்பு பின் நவீனத்துவ நோக்கில் கலையின் வரைவிலக்கணம் மற்றும் பண்புகளை ஆய்வு செய்கின்றது.

**ஆய்வு முறையியல்**

திரைப்படங்கள் தொடர்பாக வெளிவந்துள்ள ஆய்வு நூல்கள், மாநாட்டு ஆய்வுக்கட்டுரைகள், ஆய்விதழ்கள், இணையத்தள மூலங்கள், திரைப்படம் தொடர்பான பெஞ்சமினின் மூலநூல்கள் , அடோர்னோவின் மூல நூல்கள், பெஞ்சமினின் திரைப்படம் தொடர்பாக வெளிவந்துள்ள ஆய்வுக்கட்டுரைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மெய்யியல் ஆய்வு முறைகளான பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை, முழுமை முறை, எண்ணக்கரு பகுப்பாய்வு முறை போன்ற ஆய்வு முறைகள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

**பெஞ்சமின் நோக்கில் திரைப்படக் கலையின் படைப்பாளன் மற்றும் கலைஞனின் வகிபாகம்**

'செத்துப்போன தண்ணீருடன் வாழ்க்கை நடத்துகிறோம்' என்ற வரிகள் எழுப்புகின்ற விரக்தி தனியொருவருக்கானதல்ல பொதுமைப்பாடுடையது. இத்தகைய பாங்கில் தனித்துவமாகத் தனது கவிதைகளைப் படைத்திருப்பது வாசுதேவனின் முக்கிய கவிதாளுமையென்றே கூறலாம்.

## முரண் உத்தி

புதுக்கவிதை உத்திகளுள் 'முரண் உத்தி' முக்கியமானதாகும். எதிர்மாறான கருத்துகள், உணர்வுகள், சித்தாந்தங்களை ஒன்றுடன் ஒன்று மோதவைத்து கவிதையின் நோக்கத்தை அடையச்செய்வதற்கு இது சிறந்ததொரு முறையாகும். குறிப்பாக எதிர்மறை எண்ணங்களையும் காட்சிகளையும் இணைத்துக் காட்டுவதன் மூலம் சிக்கல்களையும் அழுத்தங்களையும் வெளிப்படுத்தமுடியும். இவ்விதத்தில் கவிதையில் ஆழமான சிந்தனையை உண்டுபண்ணுவதற்கும் வாசகர்களைச் சிந்திக்க வைப்பதற்கும் முரண்பாடுகளையும் மனித வாழ்வின் உண்மை நிலைமைகளையும் உணர்ச்சி பேதங்களையும் ஏற்படுத்துவதற்கும் முரண் உத்தியைப் பயன்படுத்துகின்றனர். வாசுதேவனின் கவிதைகள் சில இத்தகு முறைக்கு அமையக் காணப்படுகின்றன.

'இனி நீயே அறிவாய் / நட்பின் இரண்டாவது ஆட்டம் / பகைதான் என்று (2021:35)'

நட்பின் இரண்டாவது ஆட்டம் காதல்தான் என்று சினிமாப் பாணியில் சிந்திக்கும் ஒருவருக்கு இல்லை, பகைதான் என்ற முரண் கருத்தினை இங்கு இணைப்புச் செய்திருக்கிறார் வாசுதேவன். இதேவேளை உண்டு, இல்லை என்ற எதிர்மறைச் சொற்களைக் கையாண்டு ஆழமான சிந்தனையை ஏற்படுத்துகின்ற வகையிலும்

முரண் உத்தி கையாளப்படுகின்றது. அத்தகைய தன்மையிலும் இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

எழுதிய கடிதத்தையே வாசிக்கமுடியும். ஆனாலும் எழுதாத கடிதத்தையும் வாசிக்கலாம் என்ற முரண் தன்மையை தருகிறார் கவிஞர்:

நீ / அந்தக் கடிதத்தை / எழுதாமலேயே விட்டிருக்கலாம்

எழுதிய கடிதம்தான் / வாசித்தால் முடிந்துவிடும்

எழுதாமல் விட்டிருந்தால் / முடிக்காமல்

வாசித்துக்கொண்டே இருந்திருப்பேன் (2022:26)

எழுதிய கடிதம் வாசிக்க முடிந்துவிடும். எழுதாத கடிதம் வாசித்து முடிக்க இயலாதது என்கிறார். மாறுபட்ட சொற்களால் அர்த்தம் கனதிபெறுவதை இக்கவிதை வரிகளில் அவதானிக்கலாம்.

**கவிதையின் இறுதிப் பகுதி முத்தாய்ப்பாகும் பாங்கு**

கவிதையின் இறுதி முக்கியமானது. கவிஞன் தனது குரலை இறுதியாக கவிதையில் விட்டுப்போகுமுன் அறிவார்த்தமாக யோசிக்கவே செய்கிறான். சமூக உணர்வும் ஓங்கிய குரலும் கொண்ட கவிஞர்களாக ஆனாலும், அதனை மறுதலித்து உள்முகமாகப் பேசுவதாகப் புனைவு செய்து கொள்ளுகிற கவிஞர்களானாலும் தம் கவிதையை விட்டுப் போகுமுன் முத்தாய்ப்பாக, ஏதாவது வைத்துவிட்டுப் போகவே நினைக்கிறார்கள் (நடராசன்,தி.சு., 2008:71) எதிர்பாராத முடிவொன்றைத் தந்து. வாசகருக்குத் தித்திப்பை, சிந்தனைத் தந்தளிப்பைத் தருவது சிறுகதையின் பண்பென்பர். ஒரு சிறுகதையில் அதன் முடிவு முக்கியம்பெறுவதுபோன்று கவிதையிலும் அதன் முடிவுறு பகுதிக்கு முக்கியத்துவம்கொடுத்து கவிதையாக்குவது சிலரது தனித்துவமாகும். அத்தகையோருள் வாசுதேவனும் ஒருவர். வாசுதேவனின் பெரும்பாலான கவிதைகள் இத்தன்மையுடையனவாகவே எழுதப்பட்டுள்ளன.

ஏவி விடப்பட்ட அம்பென / மேகத்துள் இருந்து வந்து

மீன் கொத்திச் செல்கிறது / பருந்து

கூர்திறன் பார்வை / மீனுடை மினுக்கம்

நீரிடை மங்குமுன் / வந்துவிடும் வேகம்

நழுவாது கௌவும் லாவகம் /விமானம் போல்

சுமை தூக்கி / வானேகும் வலிமை

பருந்துக்கு / உண்டென்றா சொல்கிறாய்?

இல்லை நண்பா / பசிக்கு உண்டு! (2021: 40)

மேலுள்ள கவிதையில் பருந்து நிகழ்த்தும் அசாத்தியப்பாடுகளுக்குக் காரணம் அப்பருந்து அல்ல. அப்பருந்தினிடத்தே தோன்றும் பசிதான் என்பதை மிகச்சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். இத்தன்மையால்

இக்கவிதை பொருட்செறிவும் அழகும் பெற்றிருக்கிறது.

**தொன்ம உத்தி**

கடவுளர்கள், புராண, இதிகாசக் கதை மாந்தர்கள், அதிசய மனிதர்கள், வீரர்கள் முதலானோரையும் புராண, இதிகாசக் கருத்துகள், அதிசய நிகழ்வுகள், ஐதிகங்கள், பழைய மரபுகள், வரலாறுகள், கருத்தியல்கள் முதலானவற்றையும் தற்காலச் சூழலுடன் அல்லது புதிய கருத்தியல்களுடன் தொடர்புபடுத்தி எழுதுவது தொன்ம உத்தியாகும். எல்லாப் பண்பாடுகளிடையேயும் எல்லா மனிதர்களிடையேயும் தொன்மங்கள் உறைந்து கிடக்கின்றன. 'தொன்மம் தொல் பழங்காலங்களின் இயல்பூக்கம் மற்றும் நனவிலி நிலை ஆகியவற்றின் முழுமைக்கும், நிகழ்காலத்தின் நனவுடைநிலைக்கும் இடையிலே ஒரு பாலமாக விளங்குகின்றது. மேலும் நனவிலி நிலையின் உயிர்ப்புடைய அடித்தளத்திற்கும், நனவுடை மனத்திற்கும் இடையே இது சமரச நிலையை ஏற்படுத்துகிறது' (தி.சு.நடராசன், 2003:107). ஆகையால் வாழ்வியல் நடைமுறைகளோடும் மனதிலெழும் உணர்வுகளோடும் அவ்வப்போது வைத்து எண்ணப்படும் ஆற்றலுடையனவாக அவை உள்ளன. மனித சமூகத்தின் பொதுவான அனுபவங்களையும் அடிப்படை எண்ணங்களையும் அடிப்படையாகக்கொண்ட இத்தகைய தொன்மங்கள் நவீன கருத்தியல்கள் குறித்த விவாதங்களில் மீள்வாசிப்புக்குள்ளாக்கப்படும் தன்மையுடையனவாகவும் உள்ளன. பழங்காலக் கதைகளிலிருந்து கதாபாத்திரங்கள், நிகழ்வுகள் அல்லது பாரம்பரியச் சின்னங்களை எடுத்து அவற்றைப் புதிய கண்ணோட்டத்தில் நோக்குவது முக்கியமானதொரு முறையியலாகும். குறிப்பாக, படைப்பின் உயிர்ப்புக்கும் கலைத்துவத்திற்கும் அர்த்தச்செறிவுக்கும் பழைய அதிகார மையங்களைக் கட்டுடைப்புச் செய்வதற்கும் தொன்ம உத்தி முக்கியமானதாகும். தொன்ம உத்தியை வாசுதேவன் ஓரளவே கையாண்டுள்ளார். குறிப்பாக, படிமம், குறியீடு முதலான ஏனைய படைப்பாக்க நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்ட அளவிற்கு தொன்ம உத்தியை அவர் கையாளவில்லை. எனினும் சில கவிதைகளிலே இவ்வுத்தி வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்:

> வர்ணங்களைப் படைத்து முடித்துவிட்டு
>
> பிரம்மன் / குழைந்த இடத்தை / கழுவ மறந்தான் (2021: 48).

வானவில்லின் அழகுக் கோலத்தை எடுத்துக்கூறமுற்பட்ட கவிஞர், அக்கருத்தியலுடன் பிரமனின் படைப்புத் தொழிலை இணைப்புச் செய்துள்ளார். படைப்புத் தொன்மத்தை நினைவுறுத்துவதாக மேலுள்ள வரிகள் உள்ளனவே தவிர தொன்மம் இங்கு புதிய சிந்தனையை ஏற்படுத்துவதாக அல்லது அத்தகைய நோக்கத்தில் கையாளப்படவில்லை. பின்வரும் வரிகளுக்குள் மனித சமூகத்தின் முதல் மனிதரென ஐதிகப்படும் ஆதாமை பின்வரும் வரிகளினூடாக நிறுத்தியுள்ளார் வாசுதேவன்.

> ஆதாமில் தொடங்கி / இன்று வரையில்
>
> அகப்படுவதாகவே இல்லையே
>
> அந்த / மாபெரும் மீன்! (2021:13)

முதல் மனிதர் தொடங்கி இன்றுள்ள மனிதர்கள் எவராலுமே அடையமுடியாத உச்சமான பொருள் இந்த உலகில் இன்னும் இருக்கவே செய்கிறது என்ற கருத்தைத் தருகின்றன மேலுள்ள வரிகள்.

**உரையாடல் பாங்கும் விவரண முறையும்**

உரையாடலும் விவரண முறையும் புதுக்கவிதையின் எடுத்துரைப்பு முறைகளுள் கவனிப்புப் பெற்றிருக்கின்றன. கவிதையை நீட்டிச் செல்லவும் குறியீட்டுப் பாங்கிலும் இருண்மை நிலையிலும் வெளிப்படுத்தவும் உணர்வோட்டத்தை விவரிக்கவும் இவ்வுத்திகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. வாசுதேவனின் நீளமான கவிதைகள் இத்தகைய உத்திமுறைகள் மூலமே ஆக்கப்பட்டுள்ளன. 'மனிதனின் குரல்' என்ற கவிதை பின்வருமாறு நீள்கிறது:

புல்மேய்ந்து விட்டு / பொழுதுபட / வீடு திரும்பச் சொல்கிறாய் நீ

கேள்: /நான் மனிதன் / அறிவின் பசியில் / அலைபவன் நான்

காலியாய் உள்ள எனது கிண்ணம் / நிறைதல் வேண்டும்

அதுவரை நான் ஓயமாட்டேன்.

உயிர் ஒளி சுடர / வாழ்வின் ரசத்தை / நான் பருகுதல் வேண்டும்.

என் ஆளுமை நிறைவுற / செயல்களில் நான் / துலங்குதல் வேண்டும்

உன் வதைகளுக்கு / பணிந்திடமாட்டேன் / என்னை நொறுக்கி

ஒரு மூலையில் குவித்திடினும் / நான் இறக்கமாட்டேன்

உன் ஒரே எதிரியாய் / மீண்டும் / மீண்டும்

நான் எழுவேன் / நானே எழுவேன்!

அறிக நீ: / நான் மனிதன் (2022:17–18)

அதிகாரத்தின் ஒடுக்குமுறைக் கெதிரான குரலை அதிகாரத் தொனியுடன் எதிர்ப்பதாக அமைந்த இக்கவிதையில் ஒடுக்கப்படும் மனிதர் ஒடுக்குகின்ற மனிதரை நோக்கி உரையாடும் பாங்கில் அமைந்துள்ளது. உரையாடல் பாங்கில் இக்கவிதை எழுதப்பட்டமையினாலேயே பொருள் அழுத்தம் பெற்றிருப்பதோடு உணர்வுச் செறிவும் மேலோங்கியுள்ளது.

கவிஞர் ஒரு கதை சொல்லி போல இருந்து விவரிப்புப் பாங்கில் எடுத்துரைக்கின்ற கவிதைகளும் கவனிப்புமிக்கனவாகும். 'போர் ஓய்ந்த பூமியின் சிப்பாய்' என்ற கவிதை போர் முடிவுறுத்தப்பட்ட சூழ்நிலையை மிகவும் சிறப்பாக விவரிக்கிறது. வாசுதேவனின் நீள் கவிதைகளுள் இதுவும் ஒன்று. விவரிப்பு உத்தி காரணமாகவே இக்கவிதை 57 வரிகளில் நீட்சி பெற்றிருக்கிறது. போர் ஓய்ந்த பூமியின் முகாமுக்கு புதிதாக வருகின்ற இராணுவ வீரனை மையப்படுத்தி கவிதை வரிகள் நீட்டப்பட்டுள்ளன. அன் ஒரு பகுதி எடுத்துக்காட்டப்படுகிறது:

போர் ஓய்ந்த பூமியின் முகாமுக்கு / புதிதாய் வந்திருந்தான் சிப்பாய்

போர் ஓய்ந்த பூமியின் மக்களை / புதினமாய் பார்க்கலானான் அவன்

முகாமின் கடைநிலை ஊழியர் / அதிகாரிகளிடம் நடந்துகொள்வதைப் போல

அவர்கள் நடமாடித்திரிவதையும், / தொட்டாற் சுருங்கிபோல்

வாழப் பழகிவிட்டிருப்பதையும் கண்டான் / விலங்குகள்

தமிழ்ப் பேசித் திரிவது போலவும் / அவனுக்குத் தென்பட்டது

............................................................................................................................... (2022:57)

இவரது விவரிப்புப் பாங்கான கவிதைகளில் போரின் அவலக் காட்சிகள், யாழ்ப்பாண நகரம், மட்டுநகர், அதன் வாவி உள்ளிட்டவை சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

'பௌர்ணமி இரவில் தங்கச் செதில் முளைத்து தகதகக்கும் மட்டுநகர்', 'விளக்குகள் ஒளி சுடரும் தெருக்கள்', 'நாய் குரைப்பின் அச்சத்தில் உறைந்திருக்கும் மனிதனின் நிழல்', 'குன்றும் குழியுமாய் சிதைக்கப்பட்ட மைதானம்' முதலானவை காட்சிப்படுத்தப்படுவதும் சுட்டிக்காட்டத்தக்கது.

**தனித்துவமான உவமைகளின் பயன்பாட்டு உத்தி**

உவமை முதலான அணிகளைக் கையாண்டு கவிதைகளைப் படைப்பது தொன்மரபாகும். இதனால் இது புதுக்கவிதைக்கேயான தனித்துவமான படைப்பாக்க உத்தியென்று வரையறுக்கமுடியாது. எனினும் வழமையாகக் கையாளுகின்ற உவமைகளின் தன்மையிலிருந்து மாறுபட்டு புதுமையானதாகவும் வித்தியாசமானதாகவும் உவமை முதலான அணிகளைப் பயன்படுத்துவது குறித்து கவனம்செலுத்துவது அவசியமானதாகும். அப்போதுதான் ஒவ்வொரு படைப்பினுடைய தனித்துவத்தையும் இனங்கண்டுகொள்ளமுடியும். வாசுதேவன் மிகக் குறைந்தளவிலேயே கருத்துப் புலப்பாட்டுக்கான உத்தியாக உவமையைக் கையாண்டுள்ளார். எனினும் அவ்வுவமைகள் மிகவும் தனித்துவமுடையனவாகவுள்ளன. வெவ்வேறு தன்மையிலான மூன்று உவமைகள் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. ஒன்று 'அழகிய குமரை வைத்துக்கொண்டிருக்கும் ஓர் இயலா தந்தை போல' என்பதாகும்:

விடுமுறை களிக்க / தெற்கின் சோதரர்

எனது ஊருக்கு / வந்து சொரிகிறார்....

அவர்கள் பார்க்கிறார்கள் / எங்கள் கோயில் குளங்களையெல்லாம்

அவர்கள் பார்க்கிறார்கள் / எங்கள் ஆண்களை ஏளனம் மின்ன

அவர்கள் பார்க்கிறார்கள் / எங்கள் பெண்களை ஏற இறங்க

அவர்கள் பார்க்கிறார்கள் / அழகிய ஊரிது என்றே சொல்லி

போகவும் விரும்பாது /புறப்பட்டுப் போகிறார்

எல்லாவற்றையும் / பார்த்துக்கொண்டிருக்கிறேன் நான்

அழகிய குமரை வைத்துக் கொண்டிருக்கும்

ஓர் இயலா தகப்பன் போல (2021:28)

அழகிய குமரைப் பாதுகாப்பதற்குத் தந்தைக்கு இயலுமை வேண்டும். இல்லையேல் அந்த அழகிய குமரை எந்த வாலிபனோ கவர்ந்துசென்றுவிடுவான். தந்தை தைரியமானவராக – திடகாத்திரமானவராக காணப்படுகின்றபோதுதான் ஆடவர்களுக்கும் ஒரு பயமுறுத்தலாக இருக்கும். இங்கு தன்மகளைப் பாதுகாக்கும் இயலுமையற்ற ஒரு தந்தைபோலவே தனது அழகிய நகரைக் காப்பாற்ற முடியாத கையறு நிலையில் தான் இருப்பதை ஏக்கத்தோடு எடுத்துக்கூறியிருக்கிறார் கவிஞர். இது மனித உணர்வோட்டத்தோடும் யதார்த்தத்தோடும் பொருந்துகின்ற தனித்துவமான உவமானமாகும். பிறிதொன்று,

விளம்பரம் / ஒட்டக் கூடாதென்ற / விளம்பரத்தைப் போல

உன்னை / நினைக்கக் கூடாதென்று

நான் நினைத்துக் கொள்கிறேன். (1986:00)

என்கிறார். அத்துமீறும் அதிகாரம் அல்லது எல்லை மீறலை வெளிப்படுத்துவதாக இவ்வரிகள் அமைந்துள்ளன. இவ்வாறு கருத்தூன்றி பொருள் கொள்ளத்தக்கதாக அதேவேளை மீதிறன் கொண்டதாக இக்கவிதை வரிகள் அமைந்துள்ளமையைக் காணலாம். இதேபோன்று மற்றுமொரு உவமை பின்வருமாறு அமைகிறது:

பூப்பறிக்கப் போனவனை / பூ

பறித்துக் / கொண்டதைப்போல்

உன்னைப் / பார்க்க வந்தபோது நான் / பறிபோனேன் (1986:43)

பூக்களுக்கு மனித மனங்களை ஈர்க்கும் அதீத சக்தியுண்டு. அது தன்னைக் கொய்துசெல்ல வருகின்றவர்களின் மனதைப் பறித்துக்கொள்வது இயல்பு. அதனை மையப்படுத்தி கவிஞர் உவமையை அமைத்துள்ளார். பூவைப் பறிக்கச் சென்றவன் பூவால் கட்டுண்டதுபோல பெண்ணைப் பார்க்கச் சென்றவன் குறித்த பெண்ணால் கட்டுண்டான் என்கிறார். வேண்டுமென்றே உவமைகளைக் கையாளாது கவிதையோட்டத்தின் இயல்பைச் சீர் குலைக்காத வகையிலேயே வாசுதேவன் நடைமுறைச் சூழலுடன் தொடர்புடையனவாக – தனித்துவமாக இத்தகைய உவமைகளைக் கையாண்டுள்ளார் எனலாம்.

## தொகுப்பும் முடிவும்

வாசுதேவனின் கவிதைகள் வெவ்வேறு தன்மைகளில் – அமைப்பு முறைகளில் காணப்படுகின்றன. சில கவிதைகள் நீண்டனவாகவும் சில கவிதைகள் சுருங்கிய சொற்களால் சிறியனவாகவும் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக அவரால் ஆரம்ப காலங்களில் எழுதப்பட்ட பெரும்பாலான கவிதைகள் நீண்ட வரிகளைக் கொண்டனவாகவும் சம்பவ விவரணப்பாங்கிலும் அமைந்துள்ளன. பிற்காலக் கவிதைகள் பெரும்பாலும் அளவிற் சிறியனவாக உள்ளன. சிறிய கவிதைகளில் பல தலைப்பின்றியும் எழுதப்பட்டுள்ளன. வாசிப்போர் தமக்கேற்றபடி அர்த்தம் கொள்ளுவதற்கு அத்தகைய தலைப்பற்ற கவிதைகள் இடமளிக்கின்றன. குறிப்பாக இக்கவிதைகள் உணர்வுப் பிரவாகம் குன்றியனவாக உள்ளபோதிலும் அர்த்தச் செறிவுடையனவாகவும் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. நீண்டனவாக எழுதப்பட்டுள்ள கவிதைகள்

உணர்வோட்டம் மிக்கனவாகவும் அழகியல் தன்மை பொருந்தியனவாகவும் உள்ளன. எனினும் வெவ்வேறு தன்மைகளில் அவை தனித்துவம் மிக்கனவாகவே அமைந்துள்ளன.

பன்முகத் தன்மையில் வெவ்வேறு பொருள்களில் வாசுதேவன் கவிதைகளை எழுதியுள்ளார். இலக்கியத்தில் பொருண்மை மற்றும் அது ஆக்கப்படும் முறைமை என்பன முக்கியமானவையாகும். படைப்பின் பொருண்மை காலாவதியாகின்றபோது படைப்பாக்க முறைகளுக்கு (வடிவம் – உத்தி) முக்கியத்துவம் கொடுக்காத படைப்புகளும் காணாமற்போய்விடும். இவ்விதத்திலேயே பல கவிஞர்களும் காலப்போக்கில் மங்கிப்போயினர். வாசுதேவன் பொருண்மைக்கும் படைப்பாக்க உத்திகளுக்கும் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இதனால் குடிகாரன், அதிகாரம் முதலானவை குறித்து அவரெழுதிய சில கவிதைகள் மிகவும் காத்திரமாகச் செதுக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. அவை ஈழத்து நவீன தமிழ்க் கவிதை மரபில் வாசுதேவனின் தனித்துவத்தை நிலைநிறுத்துவனவாக உள்ளன.

அநாவசியமற்ற சொல் விளையாட்டுக்களுக்குள் செல்லாது, எந்தச் சொல் மிகப் பொருத்தமோ அதற்கேற்பவே அவர் கவிதைகளில் சொற்களைத் தேர்ந்து கையாண்டுள்ளார். குறிப்பாக பிற்காலக் கவிதைகளில் இத்தன்மை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. படிமம், குறியீடு, யதார்த்தப் பிரதிபலிப்பு, அனுபவப் புலப்பாடு, குறைந்தபட்ச சொற்பயன்பாடு, முரண் அமைப்பு, தொன்மப் பயன்பாடு முதலான புதுக்கவிதைக்கான உத்தி முறைகளைச் சிறப்பாகக் கையாண்டு இவரது கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இப்பாங்கு ஏனைய கவிஞர்களிலிருந்து அவரைத் தனித்துக் காட்டும் வகையில் உள்ளது. பொருள் வெளிப்பாட்டையே கருத்திற்கொண்டு கவிதையின் உருவம், உத்தி குறித்த பிரக்ஞையின்றி அல்லது அவற்றைக் கருத்திற்கொள்ளாது கவிதை எழுதுவோர் மத்தியில் படைப்பாக்க உத்திகள் குறித்த கரிசனையுடன் கவிதைகளை எழுதிய ஒருவராக வாசுதேவன் காணப்படுகின்றார். இவ்வாய்வு அவரது கவிதைகளின் படைப்பாக்க உத்தி குறித்ததேயாகும். ஆகையால் இங்கு கவிதைகளின் உள்ளடக்கம் குறித்து விரிவாக எடுத்துக்கூறப்படவில்லை.

இறுதியாக, வாசுதேவனின் கவிதைகளை நோக்கியவிடத்து அவர் ஈழத்துக் கவிஞர்களில் தனித்துவமானதொரு ஆளுமையாகக் காணப்படுகிறார். கிழக்கிலங்கையின் முன்னோடிக் கவிஞர்களான நீலாவணன், பிரமிள், எம்.ஏ.நு..ஃமான், சோலைக்கிளி முதலானோரின் கவிதைப் போக்குகளைத் தொடராது தனக்கெனத் தனித்துவமானதொரு போக்கை உருவாக்கிக்கொண்ட கவிஞராகவும், அவ்விதத்தில் கிழக்கிலங்கையின் தனித்துவமானதொரு கவிதை மரபின் முன்னோடியாகவும் வாசுதேவன் திகழ்கிறார் எனலாம்.

**உசாத்துணைகள்**

நடராசன், தி.,சு., (2019). கவிதையெனும் மொழி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

நடராசன், தி.,சு., (2003). திறனாய்வுக் கலை: கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

வாசுதேவன் (1986). என்னில் விழும் நான், மல்லிகைப் பந்தல், யாழ்ப்பாணம்.

வாசுதேவன், (2021). என் புழுதி ரசம், வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு.

வாசுதேவன், (2022). உயிர் சுமந்த நாட்கள், தாயதி வெளியீடு, சென்னை.

# கீரிமலை – கூவில் பிரதேச அண்ணமார் கோயில் வழிபாடு: வரலாறும் பண்பாட்டு மாற்றமும்

# Keerimalai – Koovil Annamar Temple Worship : History and Cultural Change

சி.ரமணராஜா

சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை

இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

sramanaa@univ.jfn.ac.lk.

***Abstract:***

*This research focuses on Annamar Temple in Keerimalai-Koovil Annamar Worship, History and Cultural Change. In Jaffna culture, authentic visions of culture can be found in folk worship. Minor deity worship is seen as a traditional cultural tradition of rural people. It can be observed in the modern environment that such worships remain unchanged or have received minor or major changes due to superficial thoughts. Annamar is one of the deities who have a place in rural worship. The cult of Annamar, which is identified as a particular cast in Jaffna, has undergone various changes in recent times. Kirimalai - Koovil area is also notable among the Annamar worship places in Jaffna. Annamar Temple, which is more than two hundred years old in this region, has been renamed as 'Manonmani Sametha Adhimakeswarar'. This has caused changes in the worships of the temple and the behavior of the people. Such observation method is the background for this research. The research is conducted in field research methods. Based on this, the data collected from the informants regarding Annamar deity's history and cases, as well as the worship methods were collected and gathered together. Annamar temple in Jaffna - Keerimalai - Koovil area is the scope of this research and the history of Annamar worship and worship related traditions are the research area.*

***Keywords:*** *Annamar Worship, Adhimakeswarar Temple, Tradition and Cultural Change, Sanskritization*

**அறிமுகம்:**

நாட்டுப்புறவியலில் பல்வேறு ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. அறிவியலின்வழி புதிய ஒளிகளைப் பாய்ச்சும் நோக்கில் இந்த ஆய்வுமுறைகள் அண்மைக்காலங்களில் இடம்பெற்று வருகின்றமை அவதானிக்கத்தக்கது. இதன்வழி நாட்டாரியல் பண்பாடுகளின் புரிதல்களிலும் அதனை நோக்கிய அணுகு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பண்பாடு நிலவுகின்ற சமூகப்புலத்தில் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சியும் அறிவுப்படிவுகளின் மேலெழுகையும் இவற்றுக்கான காரணங்களாக அமைகின்றன.

பண்பாட்டின் ஒவ்வொரு கூறுகளும் பல்வேறு எதிர்வுகளின் அடிப்படையில் நிகழ்கின்றன. இந்த எதிர்வுகளில் சமூகத்தவரின் நம்பிக்கைகள் முதன்மையிடம் பெறுகின்றன. இந்நம்பிக்கைகளே அப்பண்பாட்டின் மையமுடிச்சாகவும் காணப்படுகின்றது. இது பெரும்பாலும் 'அவிழ்க்கப்படக்கூடாதது தொடர்வழி பின்பற்றப்படுவது' எனும் நோக்கில் அவ்வழிபாடுகள் முன்னோரின் நம்பிக்கைக்கும் பக்திக்கும் உயிரோட்டம் கொடுக்கும் வகையில் (கருத்துப் பண்பாடு) காலந்தோறும் கடத்தப்பட்டு வந்திருக்கின்றது. இதன்வழி கட்டமைக்கப்பட்ட வழிபாடுகளினூடு உண்மைப் பண்பாட்டின் இருப்பு தரிசிக்கப்படுகின்றது. ஆயினும், சிவாகமப் பேணல்கள் குறித்த கருத்துப் பகிர்வுகள் மற்றும் பிரசாரங்களின் வழி நாட்டாரியல் வழிபாடுகளிடையே பல்வேறு மாற்றங்கள் நிகழப்பெற்று வருகின்றன. பெயர், வழிபாடுகள், சமூகத்தாரின் நடத்தை முறைகள் என அத்தகைய மாற்றங்களை இனங்கண்டறிய முடிகின்றது.

நாட்டாரியல் தெய்வங்களை இடம், சூழல், இனம் என்பவற்றினடிப்படையிலும் பாகுபடுத்தி நோக்குவர். அவை பலவாறு பாகுபடுத்தப்பட்டாலும் பொதுவாக ஊர்த்தெய்வங்கள், குலதெய்வங்கள் எனுமிரு வகைப்பாட்டில் நோக்குவதே பெரும்பாலும் வழக்கிலுள்ளது. சில தெய்வங்கள் ஊர்த்தெய்வமாகவும், சில குலதெய்வமாகவும் வழிபடப்படுகின்றன. ஊரின் எல்லைப்பறங்களில் உள்ள தெய்வங்கள் எல்லைப்புறத் தெய்வங்கள், காவற்தெய்வங்கள் என்றும் வீடுகளில், வீட்டு வளவுகளில் காணப்படும் தெய்வங்களை குலதெய்வம், குடித்தெய்வங்கள் என்றும் கொள்வர். ஆயினும் அண்ணமார் தெய்வம் இப்பிரதேச மக்களின் குலதெய்வமாகக் காணப்படுகின்ற அதேவேளை ஊர்த்தெய்வமென்னும் அந்தஸ்தையும் கொண்டிருக்கின்றது.

இறந்துபட்ட நமது முன்னோர்கள், எல்லைக் கற்கள், நீர், தாவரங்கள், விலங்குகள் முதலான இயற்கையின் கூறுகள் முதலான அனைத்தும் நாட்டாரியல் வழிபாட்டில் தெய்வங்களாக வழிபடப்பட்டு வருகின்றன. ஆயினும் தெய்வங்களாக உருவகிக்கப்படுகின்ற நிலையில் அவை மனிதப்பண்பு நலன்களோடு கருத்தேற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. பல்வேறு எதிர்வுகளின் அடிப்படையில் தெய்வங்களின் பண்பு நலன்களுக்கு அமைய அவற்றினைப் பாகுபடுத்தி நோக்குந் தன்மை காணப்படுகின்றது. பொதுவாக ஆண் - பெண் தெய்வங்களௌன அவற்றைப் பிரித்தறிவதன் அடிப்படையில் அண்ணமார் தெய்வம் ஆண்தெய்வங்களுள் ஒருவராக இடம்பெறுகின்றார். யாழ்ப்பாணத்திலுள்ள அண்ணமார் ஆலயங்களுள் தொன்மையானது எனும் இயல்பினைக் கொண்டிருக்கின்ற மேற்படி ஆலயத்தினை மையப்படுத்தியதாக இந்த ஆய்வு இடம்பெறுகின்றது.

**ஆய்வு முறையியல்**

நாட்டார் தெய்வங்கள் பற்றிய ஆய்வுகளானவை தொன்மக் கதையாடல்கள், வழக்காறுகள்,

வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் என்பவற்றிலிருந்து விலகிய நிலையில் அவற்றினை விளங்கிக் கொள்ளமுற்படுகின்றன. அதற்கேற்ப அறிவார்ந்த தளத்தினூடு பல்வேறு வினாக்கள் மூலம் இனவரைவியல், சமூகவியல், மானுடவியல், சமயச்சமூகவியல், சமூக உளவியல், தத்துவவியல் மற்றும் தொல்படிமவியல் முதலான ஆய்வு அணுகுமுறைகள் வழியாக பதில்களைத் தேடவும் முற்படுகின்றனர். இதற்கு மாறாக, கிராமியத் தெய்வ வழிபாட்டு முறையில் ஒரு பங்கேற்பாளனாக இணைந்து அவை சார்ந்த நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், சமூகக் குழுக்கள் செயற்படும் விதம் என்பதனைப் பேசவும் ஆய்வாளர்கள் முற்படுவர்.

இத்தகைய கண்ணோட்டத்திலேயே கூவில் அண்ணமார் வழிபாடு குறித்த தொன்மக் கதையாடல், நம்பிக்கைகள், பக்தி, வழிபாடுகள், வழக்காறுகள் மற்றும் அவ்வூர் சமூகக் குழுக்கள் செயல்படும் விதம் என்பன குறித்த கள ஆய்வாக இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது. வுழிபாட்டுப் பங்கேற்பாளனாக இணைந்து, உற்று நோக்கல், நேர்காணல் வழி தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் அண்ணமார் வழிபாட்டின் தொன்மக் கதையாடல்கள் எவ்வாறுள்ளன?, எவ்வாறான வழிபாடுகள் இடம்பெறுகின்றன?, அண்ணமார் தெய்வம் மனோன்மணி சமேத ஆதி மகேஸ்வரராக மாறியமைக்கான காரணங்கள் யாவை?, இவ்வாலயத்தினை அடிப்படையாகக் கொண்டு கோயில்கள் தோன்றியுள்ளனவா? மாற்றத்துக்குப் பின்னர் சமூகக் குழுக்களின் செயற்பாடுகள் யாவை? போன்ற ஆய்வுசார் வினாக்களை முன்வைத்து அவற்றுக்கான பதில்களைத் தேட இந்த ஆய்வு எத்தனம் செய்கிறது.

### ஆய்வு முன்னோடிகள்

இந்த ஆய்வின் செல்நெறியினை விசாலிப்பதற்குப் பேராசிரியர் நா.சண்முகலிங்கனின் 'யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு' எனும் ஆய்வுக்கட்டுரை பெரிதும் துணையாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்து அண்ணமார் வழிபாட்டு மையங்கள் பற்றிய பூர்வாங்கமான அவதானங்களைத் தொடர்ந்து அடுக்கமைவு மாதிரி எடுத்தலின் வழி குறிப்பான ஆலயங்களும், ஆலய வழிபாட்டு முறைகளும் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில்,

- நீர்வேலி – பன்னாலைக்குறிச்சி அண்ணமார்
- வடமராட்சிப்பகுதி – கிருச்சியால் அண்ணமார்.
- தெல்லிப்பழை – கோவிற்புலம் அண்ணமார்
- கச்சாயில் அண்ணமார்
- பல்கலைக்கழகம் அருகில் உள்ள ஆத்திசூடி அண்ணமார்

ஆகிய ஐந்து அண்ணமார் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்படி ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. ஆனால் கீரிமலை – கூவில் அண்ணமார் வழிபாடு குறித்த எந்தப்பதிவுகளும் மேற்படி ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாலயம் அமைந்துள்ள பிரதேசம் உள்ளிட்ட வலிகாமப்பகுதியின் பிரதேசங்கள் பலவும் சுமார் இருபத்தைந்தாண்டுகளின் பின்னர் மக்களின் மீளிருப்புக்காக மிக அண்மைக்காலத்திலேயே கையளிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக இப்பிரதேசங்களில் ஆய்வுகள் அதிகம் இடம்பெறவில்லை. இதனடிப்படையில் இந்தப் பிரதேசத்திலுள்ள அண்ணமார் வழிபாடு குறித்த ஆய்வின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

**ஆய்வினை நியாயித்தல்**

கிராமப்புற மக்களினுடைய மரபு நிலை சார்ந்த பண்பாடாகச் சிறுதெய்வ வழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன. தற்காலச் செல்நெறியிலும் எந்தவிதமான மாற்றங்களுமின்றி தொன்மையான மரபுகளோடு வழிபாடுகள் இடம்பெறுகின்ற கோயில்களுமுண்டு. ஆயினும், கிராமியந்தழுவிய நிலையில் தோன்றிய திருக்கோயில்கள் சமூகமேனிலையாக்கச் சிந்தனைகளால் மாற்றங்களுக்கு உட்பட்டிருப்பதனையும் இனங்கண்டறியலாம். இவ்வகையில் சம்ஸ்கிருதப்படுகைக்கு உட்பட்டுக் கொண்டிருக்கும் கிராமியத் தெய்வங்களின் வரலாறுகள், வழிபாட்டு மரபுகள், மாற்றங்கள், மாற்றத்துக்கான சூழமைவுகள் தொடர்பான விடயங்கள் தொடல்பில் கவனங்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

1970களின் பின்னர் மனோன்மணி சமேத ஆதிமகேஸ்வரர் எனப் பெயர்மாற்றம் பெற்றிருக்கும் கீரிமலை – கூவில் அண்ணமார் குறித்த தொல்வரலாறுகள், வழிபாடுகள் சார்ந்த இலக்கியங்கள் எவையும் இற்றைக்காலம் வரை (வாய்மொழி வழக்காறுகளைத் தவிர) தோற்றம் பெற்றிருக்க வில்லை. இந்த வகையில் வாய்மொழி வழக்காறுகளாக இருந்து வருகின்ற தொன்ம வரலாறுகள் எழுத்துருச் செய்ய வேண்டியது காலத்தின் அவசியமாகும்.

**ஆலயத்தின் அமைவிடம்**

யாழ்ப்பாண மாவட்டம் – வலிகாமம் வடக்குப் பகுதியில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சந்தியிலிருந்து மேற்குப்புறமாக சுமார் நான்கு கி.மீ தொலைவில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்குத் தென்மேற்குப் பக்கமாக கீரிமலை கூவில் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் மையப்பகுதியில் அண்ணமார் கோவில் (மனோன்மணி சமேத ஆதிமகேஸ்வரர்) அமைந்துள்ளது. இதற்கு அருகாமையில் சுமார் 750m தொலைவில் புதியதாகத் தோன்றிய அண்ணமகேஸ்வரர் ஆலயம் அமைந்திருக்கின்றது.

**அண்ணமார் வழிபாடு: தொன்மங்களும் தொடர்ச்சியும்**

வைதிக மரபில் இடம் பெறாததும் தமக்கென வாய்மொழி வழக்காற்று மரபுகள் கொண்டதுமான வழிபாடுகளூடும் இயற்கை கடந்த ஆற்றல்களோடு மனிதன் தனதுறவை நெருக்கமாக்கிக் கொண்டதன் அடிப்படையிலும் உருவாகி வளர்ந்த வழிபாடுகளை சிறு தெய்வ வழிபாடென்பர். இக்கடவுளர்கள் இந்துசமயம் வகுத்த பெருங்கடவுளர் என்ற வகைப்பாட்டில் உள்ளடக்கப்படவில்லை. 'நாட்டுப்புறச்சமயக்' கடவுளர் என்ற அடையாளத்துடன் அவை செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. இவ்வழிபாட்டில் வழிபடுவோன் – வழிபடப்படும் தெய்வம் ஆகியவற்றுக்கிடையிலான உறவு நிலையின் நெருக்கம் நேரடியானதும் அதிகரித்ததுமாகும்.

நாட்டாரியல் சார்ந்த வழிபாடுகளானவை வாய்மொழி வரலாறுகளூடாகத் தமக்கான சமயச் சடங்குகளையும், வழிபாட்டு முறைகளையும் கட்டமைத்திருந்தன. இவை எழுத்துருப் பெறாதவை. முன்னோர் கருத்துக்களை அவர்களின் செயற்பாடுகளைப் பின்பற்றி வருபவை. ஆயினும் மாற்றத்திற்கு உட்படக்கூடியவை. மாறாக வரையறைக்குட்படக் கூடியனவல்ல. இறந்துபட்ட முன்னோர்கள், தாவரங்கள், விலங்குகள், கல், பொல் முதலான குறியீடுகளையோ கொண்டிருக்கக் கூடியவை. ஆனால் இவை, குறித்த, சாகித்தியத்தாருக்கென அமைந்து காணப்படுமிடத்து அத் தெய்வங்கள் 'இன்ன சாதிக்குழுமத்தினர்க்குரியது'

என்ற அடையாளத்தையும் பெற்றுவிடுகின்றது.

பதினைந்தாம் நூற்றாண்டளவில் தோன்றியதாகப் பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்ற அண்ணமார் வழிபாடு கிராமிய வழிபாடுகளில் பள்ளர் சமூகச் சாகியத்தாரினால் முதன்மைக்குரிய தெய்வம் என்ற அடையாளத்துடன் வழிபடப்படும் சிறப்புக்குரியது. கொங்கு வேளாளரிடையே சிறப்புப் பெற்ற இவ்வழிபாட்டு முறைமை யாழ்ப்பாணத்தவரிடையே குறிப்பாகப் பள்ளர் சாதியினரிடத்து அவர்களின் குலதெய்வமாக எங்ஙனம் மாறியதென்பது குறித்த வரலாறுகள் அறியுமாறில்லை. ஆயினும், இச்சாகியத்தாரிடையே எல்லைப்புறத் தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் அதிகளவில் செல்வாக்குற்ற தெய்வமாக அண்ணமார் தெய்வம் விளங்குவதனை இனங்காணலாம். நாட்டாரியற் தெய்வங்களில் சிவக்குடும்பன், அண்ணமார், தடிக்கிழவன், பொல்லுக்கிழவன் எனும் பெயர்களோடும் தனித்துவமான அடையாளங்களோடும் திகழும் சிறப்பு அண்ணமாருக்கு உண்டு. அண்ணமார் சிவாம்சம் பொருந்தியவராக சித்திரிக்கப்பட்டு வழிபடப்படுவது குறிப்பிடற்பாலது.

வரலாறு காலங்கடந்தது. வரலாற்று நிகழ்வுகளை மீட்டுருச்செய்கின்ற போது பல விடயங்களை அறிகை செய்யமுடிகின்றது. பண்பாட்டு வரலாறு, சமய வரலாறு, அரசியல் வரலாறு, பொருளியல் வரலாறு, நாட்டாரியல் வரலாறு, கலையின் வரலாறு என வரலாற்றின் வடிவங்கள் பலவகையினவாக அமையும். ஒரு நாகரிகத்தின் அனைத்துக் கட்டமைப்பிலும் வரலாறு தங்கியுள்ளது. வரலாறென்பது ஒன்றினை மீட்டுருச் செய்வதற்கானது. அது தத்துவமாகவோ, சமயமாகவோ, பண்பாடாகவோ காணப்படலாம். வரலாறு என்பது அதன் பல்வேறு வடிவங்களில் கர்ண பரம்பரைக் கதைகள், கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள், கதைப்பாடல்கள் மற்றும் இலக்கியங்களின் வழி சேகரித்து வரலாற்று மீட்டுருவாக்கம் செய்யத் தொடங்கலாம். இந்த வரலாற்று மீட்டுருவாக்கம் என்பது இன – ஜாதிய மீட்டுருவாக்கமாகவே அமையும் என்பர்.

வரலாறு காலப்போக்கில் மக்கள் உணர்வோடும் வாழ்வியலோடும் கலந்து காப்பியமாக உருப் பெறுகிறது. வீடுகளில் வாசித்தல், மேடையில் பாடுதல். உடுக்கடித்துப் பாடுதல், வேறு பக்க வாத்தியங்களுடன் பாடுதல், கிராமங்களில் பதினெட்டு நாட்கள் தொடர்ச்சியாகப் பாடி நடிக்கப்படுதல், நாடக வடிவத்தில் நடித்தல் முதலிய பல வடிவங்களில் காப்பியச் சுவை வெளிப்பட அண்ணன்மார் காப்பியம் நிகழ்த்தப்படுகிறது. இந்நிகழ்ச்சிகள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டாலும் இதன் புரவலர்கள் குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஒரு காலகட்டத்தைத் தாண்டிய பிறகு காப்பியத்தின் உணர்வு வீச்சும், மதிப்பீடுகளின் தன்மையும் அந்த இனத்தையும் தாண்டிப் பரவலான ஏற்புடைத் தன்மையைப் பெறத் தொடங்கும். அண்ணன்மார் காப்பியத்திலும் இது நிகழ்ந்திருக்கின்றது (கிருஸ்ணசாமி,ப.,1995:51).

இதனடிப்படையில் அண்ணமார் தெய்வம் பற்றிய வரலாற்றுத் தொன்மங்கள் குறித்துக் கவனம் கொள்ளலாம். போராசிரியர் நா.சண்முகலிங்கன் யாழ்ப்பாணத்தில் அண்ணமார் தொடர்பாகப் பதியப்பட்ட நான்கு வேறுபட்ட ஐதிகங்களைக் குறிப்பிடுகின்றார் (சண்முகலிங்கன்,நா.,2004:24–27).

- இணுவில் இளந்தாரி அண்ணமார் கதை.
- வன்னிச்சிமார் 54 பேருடன் தற்கொலை செய்து கொண்ட வீரகுடும்பனைத் தலைவனாகக் கொண்ட 60 பள்ளர்கள் அண்ணமாரான கதை: வன்னியுடன் தொடர்பானது.

- புராணக்கதைகளுடனான அண்ணமார் கதைகள்
  - தக்கன் யாகம் அழிக்க அண்ணமார் வந்தது.
  - சூரன் கொடுமைக்குப் பயந்து இயன–குட்டானுள் (கமக்காரனாகி) அண்ணமார் ஒளித்த கதை (பத்திரகாளி– தச்சரிடம், பெரிய தம்பிரான்– வண்ணாரிடம்.)
- தமிழகத்தில் கொங்கு நாட்டிலும் இலங்கை மலையகத்திலும் வழக்கிலுள்ள அண்ணமார் சுவாமி கதை – பொன்னர் – சங்கர் கதை.

பேராசிரியரின் அண்ணமார் குறித்த மேற்படி கதையாடல்கள் எவையும் இத்தலத்துடன் பொருத்தமுற அமையவில்லை. பொன்னர் – சங்கர் கதையினை பிரதேச மக்கள் அறிந்திருந்தாலும் இத்தல உருவாக்கத்துடன் அவற்றைப் பொருத்தி நோக்கும் வழக்கம் காணப்படவில்லை. பொதுவாக ஒவ்வொரு ஆலயத்தின் தொடக்ககாலத் தொன்மங்கள் ஒரே விதமாகக் காணப்படுவதில்லை. அவை வெவ்வேறு சூழல்களுடனும் தொன்மங்களுடனும் தொடர்புற்றுக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் அண்ணமார் ஆலயங்கள் பலவுள. அவற்றுள் காலத்தால் மிகவும் முற்பட்ட பழைமை உடையதாக இவ்வாலயம் இனங்காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் உருவாக்க சூழல் குறித்த கருத்தாடல்கள் மேற்கூறிய தொன்மங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டமைகின்றன.

இப்பகுதியில் வாழ்ந்த மக்களது நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாலய உருவாக்கத் தினை அனுகுதல் வேண்டும். கீரிமலை – கூவில் அண்ணமார் ஆலயத்தின் தோற்றம் பற்றிய வரலாற்றினை நோக்குகின்ற போது வாய்மொழி வரலாறே அதன் முக்கிய சான்றாக அமைகிறது. இந்த வாய்மொழி வரலாற்றினூடாகவே அண்ணமார் வழிபாட்டினை மீட்டுருவாக்கம் செய்ய முடிகிறது. பனைமரக் கூடலே இவ்வாலய உருவாக்கச் சூழலாகும். இங்கு இயற்கை வழிபாடே (ஒளி, பனை) முதன்மை பெற்றிருப்பது நோக்கற்பாலது. ஆரம்ப காலத்தில் பனைமர அடியில் பொல்லு வைத்து வழிபடப்பட்ட தெய்வம் (அண்ணமார்) இன்று சம்ஸ்கிருதப் படுகைக்குட்பட்டு பெருந்தெய்வ வழிபாட்டு மரபுடன் கூடிய ஆலயமாகக் காட்சிதருகின்றது.

இதனடிப் படையில் வாய்மொழி மரபாக இப்பிரதேச மக்களிடையே நிலவிவருகின்ற பின்வரும் கருத்து கவனம் பெறுகின்றது.

> "முந்தின ஆக்கள் இக்கோயிலுடன் தொடர்புபட்ட வரலாற்றைச் சொல்லுவினம். ஆனால் அவை எழுதி வைக்கப்படேல்ல. எனக்கு 83 வயது. எங்கட முந்தின ஆக்கள் சொல்லுற கதையைத்தான் நானும் சொல்லுறன். இரண்டு பேர் வந்தவையள். ஒருவர் வைரவர். மற்றவர் எங்கட அண்ணமார். வைரவர் கருகம்பானை வெள்ளாளர் பகுதியில் தென்னை மரத்தில் இருந்திட்டார். அதுதான் இன்று கவுணாவத்தை வைரவராகக் காணப்படுது. எங்கட சாமி, இப்ப ஆலயம் இருக்கிறதுக்குப் பின்னால ஒரே பனங்கூடல். அங்க வந்து இருந்திச்சு. பெரிய வெளிச்சம். அப்பிடியான வெளிச்சத்த நாங்கள் முன்பு கண்டதில்லை என்று அவர்கள் சொல்லுவினம். இதுபற்றி நாலுவிசயம் தெரிஞ்ச ஆக்களிட்டப் போய்க் கேட்டம். அது அண்ணமார் தான். இருவராக வந்து ஒருவர் (வைரவர்) தென்னை மரத்தில் இருந்திட்டார். மற்றவர் அண்ணமார். அது உங்கட ஆள் தான் என்று சொல்லிவிட்டார். அன்று தொடக்கம் அந்தப் பனங்கூடலுக்குள் நின்ற பனை ஒன்றின் அடியில் பொல்லு வைச்சு விளக்கேத்தி வழிபட்டார்கள். இதுதான் இக்கோயிலின்ர ஆரம்பம்" (நேர்காணல்: முருகன் கந்தன்

(வெள்ளையன்:வயது,வயது,83)

என்று இக்கோயிலில் மனேஜராகவும், பூசாரியாகவும் திகழ்ந்த வெள்ளையன் கந்தன் இவ்வாலய உருவாக்கத் தொன்மக்கதையினை குறிப்பிடுகின்றார். மேற்படி கருத்தானது அண்ணமார் வழிபாட்டின் ஆரம்பகால சூழலை இனங்காணத்துணை புரிகின்றது.

**கோயில் அமைப்பும் சம்ஸ்கிருதப் படுகையும்**

நாட்டாரியல் சார்ந்த தெய்வங்களுக்கு கோயில் கட்டி வழிபடுவது வழக்கமாக நிலவிவருகின்றது. இவ்வாலய அமைப்புகள் விதிமுறைகளுக்கு (ஆகமக் கருத்துக்களுக்கமைவாக) உட்படுவதில்லை. ஆயினும் பண்பாட்டு மாற்றங்களினூடு அவை விதிமுறைகளுக்கு உட்பட்டுவிடுகின்றன. அண்ணமார் குறித்த ஆய்வுகளைத் தமிழகத்திலே நிகழ்த்தியிருக்கின்ற பழனிசாமி, 'தமிழ் நாட்டில் அண்ணன்மார் கோயில்கள்' (1990) என்ற நூலில் அண்ணன்மாருக்கான கோயில்களை,

- பொதுக் கோயில்கள் (Public Temples)
- சமுதாயக் கோயில்கள் (Sect Temples)
- தனிப்பட்ட, குடும்ப அல்லது தனிநபர் கோயில்கள் (Private Temples)

எனப் பகுத்திருக்கின்றார் (கிருஸ்ணசாமி,ப.,1995:55). கூவில் அண்ணமார் ஆலயம் இப்பிரதேச மக்களின் காவல்தெய்வமாகக் கருதப்பட்டதனடிப்படையில் அதனைச் சமுதாயக் கோயிலாக இனங்காண முடிகின்றது.

பொதுவாக ஆலய வரலாறுகளை அறிகைக்குட்படுத்துகின்ற போது பின்வரும் இரண்டு விதமான செய்திகளில் ஒன்றினை அறியவருதல் கூடும்.

- 'இன்ன இடத்தில் நான் இருக்கிறேன்' என ஏதோ ஒரு தெய்வம் வேண்டிய அறிகுறிகளுடன் யாரோ ஒருவருக்குணர்த்த அவ்வுணர்தலின் அடிப்படையில் குறிக்கப்பட்ட இடத்தில் குறித்த ஆலயம் உருவாயிற்று.
- யாரேனும் ஒரு ஞானி தம்மிடம் பக்திபூண்டொழுகும் ஒருவருக்கு 'இன்ன இடத்தில் நீ இன்ன இன்னபடி கோயிலமைத்து வழிபடு' என்றுணர்த்த அத்தொடர்பில் குறித்த ஒரு ஆலயம் உருவாயிற்று

என கோயிலுருவாக்கத்தின் அடிப்படைகளைப் பண்டிதர் இருவிதமாகக் குறிப்பிடுகின்றார் (கந்தையா,மு.,1986:29). இவ்வகைப்பாட்டினுள் முன்வரலாறே கூவில் அண்ணமார் ஆலய உருவாக்கத்துடன் பொருந்தி நிற்கிறது. குறிப்பிட்ட ஒரு அறிகுறிகளுடன் சகளீகரித்திருந்த தெய்வம் நாளடைவில் அண்ணமார் என உருவமாகத் தோற்றமளித்திருந்தது எனக் கூறுவதே சாலப்பொருத்தமாக அமையும். இது குறித்த சிந்தனையில் பண்டிதர் மு.கந்தையாவின் பின்வரும் கருத்து கவனம் பெறுகின்றது.

> "ஆலயமொன்று உருப்படுமிடத்து ஏலவே தெய்வம் தான் உருவமாகத் தோற்றமளியா விட்டாலும் அருவ நிலையில் எவ்வாறோ சகளீகரித்திருந்ததென்பதே இதன் தாற்பரியமாகும். கடவுள் எங்கும் 'வியாபகமாயிருத்தல்' என்பது பொது நிலை. 'சகளீகரித்திருத்தல்' என்பது சிறப்புநிலை. இங்கு சகளீகரித்தல் என்பது அருவமாகிய தான் உருவாகத் தயாராயிருத்தல் என்று கருதப்படவேண்டும்" (மேலது ப.30)

எனவே, இவ்வாலயம் குறித்து வழங்கப்படுகின்ற வாய்மொழி வழக்காறுகளின் அடிப்படையில் நோக்குகின்ற போது, 'ஒளிவடிவில் பனங்கூடலில் சகளீகரித்திருந்த அருவவடிவமே பின்னாட்களில் அண்ணமார் என்னும் தெய்வமாக உருவாகிக் குறித்த சாகியத்தாரின் குலதெய்வமாக விளங்கியது' எனக் கொள்ளலாம்.

இவ்வாலயம் ஏறத்தாழ 400 வருடம் பழமையானதாக இருக்க வேண்டும் என்கின்றனர் அப்பிரதேசவாழ் மக்கள். தற்போது இவ்வாலயம் அமைந்துள்ள ஆலமரத்தின் வயதெல்லையினை வைத்து ஆலயத்தின் காலத்தினைக் கணிப்புச் செய்கின்றனர்.

கோயிலானது ஆரம்ப காலத்தில் சிறிய கொட்டிலுடன் கூடிய அமைப்பைக் கொண்டிருந்தது. மக்களின் வழிபாட்டுப் பெருக்கமும், நம்பிக்கையின் மேலெழுகையும் ஆலயத்தினை மடாலய தரத்துக்குயர்த்தியது. சிறிய கர்ப்பக்கிரகம், நான்கு தூண்களுடன் கூடிய திறந்த மண்டபம் என்பனவற்றுடன் கூடியதாக கிழக்கு நோக்கியதாக அமைந்திருந்தது. கருவறையினுள் அண்ணமாரைக் குறிக்கும் வகையில் 'மூன்று பொல்லுகள்' வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாலயத்தில் ஆரம்பநாட்களில் விளக்குவைத்து குறித்த சாகியப்பிரிவினைச் சார்ந்த சார்ந்தவர்களால் வழிபாடுகள் ஆற்றப்பட்டு வந்தன. தொடக்காலத்திலிருந்தே ஆடு, கோழி முதலானவற்றை பலியிடுவது வழக்கமாகக் காணப்பட்டது. பொதுவாக இதனை 'வேள்வி வழிபாடு' என்பர். வேதம் கூறும் வேள்வி வழிபாட்டினை ஒத்திராததும், நாட்டாரியல் சார் நம்பிக்கைகள், மரபுகள், குறியீடுகள் முதலான அம்சங்களோடு கூடியதாகவும் இவ்வேள்வி வழிபாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. 1970களில் பலியிடுதல் நிறுத்தப்பட்டு மெதுவாக சம்ஸ்கிருதப்படுகைக்கு உட்படத் தொடங்கியமையை அவதானிக்க முடிகின்றது.

பலியிடுதல் அவசியம் – அவசியமின்மை பற்றிய விவாதங்கள் 1970களில் மேலெழுந்திருந்தன. அண்ணமார் பக்தர்களிடையே இவ்விவாதங்களூடான விளைவுகள் பெருந்தாக்கத்தினை ஏற்படுத்திய தன்மையினை அவதானிக்க முடிகின்றது. இதன் விளைவாகவே புதிய அண்ணமார் ஆலயத்தின் உருவாக்கம் அமைந்திருந்தது. ஆதியில் இருந்த அண்ணமார் ஆலயத்திற்கருகில் சுமார் 750m தொலைவில் பதிய அண்ணமார் ஆலயம் உருவாகியிருந்தது. இவ்வாலயத்தினையும் பிள்ளையார் ஆலயமாக மாற்றுவதற்கான பிரயத்தனங்கள் இடம்பெற்றிருப்பினும் பெரும்பாலானவர்களின் வேணவாவிற்கமைய 'அண்ணமகேஸ்வரர் ஆலயம்' எனும் பெயரோடு சிவனாலயமாக மேனிலையாக்கம் பெற்றிருக்கின்றமை குறிப்பிடற்குரியது. மேலும் இவ்வாலயத்தினை மூலத்தெய்வ மாகக் கொண்டு, தெல்லிப்பழை சித்தியம்புளியடி அண்ணமார் ஆலயம் (சந்திரமௌளீஸ்வரர் ஆலயமாக மாற்றம் கண்டிருக்கின்றது), மயிலணி அண்ணமார் கோயில் (அண்ணமகேஸ்வர் ஆலயம்), இளவலை மணலடைப்பு அண்ணமார் கோயில் (ஸ்ரீ அண்ணமகேஸ்வரர் ஆலயம்) முதலானவை எழுந்தமையும் கவனத்திற்குரியது. இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், கூவில் அண்ணமார் ஆலயத்தின் பண்பாட்டு மாற்றம், அதனை அடியொற்றியெழுந்த ஏனைய கோயில்களின் மேனிலையாக்கத்திலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையாகும்.

1990களின் பின்னர், உள்ளக இடப்பெயர்வுகளின் காரணமாக எந்தவிதமான வழிபாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. 2011ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர், புனருத்தாரணப் பணிகள் இடம்பெற்றிருந்த சூழலில் வீரசைவக் குலத்தைச் சார்ந்த பூசகர் ஒருவரினால் பூசை வழிபாடுகள் நிகழ்த்துவதற்கான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. 2016ஆம் ஆண்டு பங்குனி உத்தர நாளன்று

மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றிருந்தது. ஏலவே, பகுதியளவில் சம்ஸ்கிருதப்படுகைக்குள் இடம் பெற்றிருந்த இவ்வாலயம் 2016க்குப் பின்னர் முழுதளாவிய நிலையில் சம்ஸ்கிருதமயமாதலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது.

இந்து சமயக் கடவுளர்களை வழிபடுமிடமான கோயில், ஆகம விதிகளின்படி நிறுவப் படுகிறது. பொதுமக்களின் தெய்வங்கள் தனிப்பட்டவர்களாலோ குறிப்பிட்ட சாதியினராலோ, ஊரவராலோ மிக எளிதாக நிறுவப்படுகின்றன. இவற்றுக்கென ஆகம விதிகள் எதுவும் இல்லை. சில நடைமுறை விதிகளே உண்டு. இவையும் இடத்துக்கிடம் மாறுபடும். திட்டமிடப்பட்ட நாள் வழிபாடு இந்துசமயக் கோயில்களில் நிகழ, பெரும்பாலும் நாள் வழிபாடற்ற தெய்வங்களாக, பொதுமக்களின் தெய்வங்கள் உள்ளன. சிவலிங்கம் நீங்கலாக ஏனைய இந்து சமயத் தெய்வங்கள் பெரும்பாலும் மனித உருவில் வடிக்கப்பட்டுள்ளன. அடித்தள மக்களின் தெய்வங்கள் மனித உருவும் விலங்குருவும் கலந்தும், உருவமற்ற கற்கள், பீடங்கள் வடிவிலும், பெரும்பாலும் அமைந்துள்ளன (சிவசுப்பிரமணியன்,ஆ.,200).

யாழ்ப்பாணத்திலுள்ள நாட்டுப்புறத் தெய்வங்களும் மேற்குறித்த குறியீட்டு அடையாளங்களை உடையனவாகவே காணப்படுகின்றன. அண்ணமாரின் குறியீட்டு அடையாளமாக ஒரு கல் அல்லது பொல்லு காணப்படுகிறது. இவ்வாலயத்திலும் 1990 வரை மூலவராக மூன்று பொல்லுகள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. யுத்த இடப்பெயர்வினால் அவை செல்லரித்துப் போயினவாயினும் அதன் எச்சங்களை மீள்நினைப்புச் செய்யும் நோக்கில் கருவறை விமானத்தின் மேற்குப் பகுதில் ‘பொல்லுடன் கூடியதாக அண்ணமார் தெய்வம்’ நிலைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று, அத்தகைய எச்சங்கள் (பொல்லுகள்) அவ்வாலய களஞ்சியசாலையில் பேணப்பட்டு வருகின்றமையும் கவனத்திற்குரியது.

இடப்பெயர்வின் பின்னரான சமூக மாற்றம் – கல்வி மற்றும் பொருளாதாரத்தில் தன்னிறைவு, சுதந்திரமான தொழில் பேணுகை என்பவற்றிடையே ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளால் சாதிக் குழுமக் குறியீடாக அண்ணமார் வழிபாடு அமைதலை விரும்பாததன் அடிப்படையில் அண்ணமார் வழிபாடு சம்ஸ்கிருதப்படுகைக்கு உட்பட்டிருக்கிறது எனக் கருதலாம். யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் பண்பாட்டுப் பேணலில் பெரியதொரு மாற்றத்தை – விஸ்தரிப்பினை ஏற்படுத்தியிருக்கின்ற சம்ஸ்கிருத நெறிப்படுகை குறித்து பேரசிரியர் சிவத்தம்பியின் கருத்து இங்கு கவனத்திற்குரிய தாகின்றது (சிவத்தம்பி,கா.,2000:46–48).

இந்தியச் சூழலில் மேனிலைப்பட்ட அசைவியக்கத்திற்கு ஆளாகும் ஒரு குடும்பம் அன்றேல் குழுமம், தமது நடைமுறைகளைப் படிப்படியாக உயர் இந்துமத நெறியில் கூறப்படுகின்ற அதாவது சம்ஸ்கிருத இலக்கியங்களில் (எழுத்துக்களில்) உள்ளது

என நம்பப்படுகின்ற முறைமையில் அமைத்துக் கொள்கின்றது. இப்படிச் செய்கின்ற பொழுது, தாம் இதுவரை கடைப்பித்து வந்தவற்றைச் சம்ஸ்கிருத மயப்படுத்தி அவற்றையும் உயர் மரபுக்குரியன போன்று போற்றுதல் மரபாகும். இந்தச் சம்ஸ்கிருத நெறிப்படுகை பின்வரும் முறைகளில் தொழிற்படுகின்றது என்றும் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

1. வழிபாட்டிடங்களில் வழிபடப்படும் தெய்வங்கள் மாற்றப்படுகை

   உ–ம்

   அண்ணமார் – பிள்ளையார்

   விறுமர் – பிள்ளையார்

   நாச்சிமார் – காமாட்சி அம்மன்

   கண்ணகியம்மன் – ராஜராஜேஸ்வரி

   முனி – முனீஸ்வரன்

   பைரவர் – ஞானவைரவர்

2. வழிபாட்டு முறைமைகள் மாற்றப்படுகை

   மடை – பொங்கல்

   குளிர்த்தி – பொங்கல்

   பொங்கல் – சங்காபிஷேகம்

3. கோயில்களின் அந்தஸ்து மாற்றப்படுகை.

   i. விளக்கு வைத்தல் நடந்த இடத்தில் மகோற்சவம் நடத்துதல்.

   ii. சங்காபிஷேகம் நடந்த இடத்தில் மகோற்சவம் நடத்துதல்.

   iii. பெயர் மாற்றம்: காரைநகர் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பரம் எனப்பட்டமை.

   iv. தேர்த்திருவிழா அன்று (நல்லூரில் நடப்பது போன்று) பச்சை சார்த்தல்

   v. பெருங்கோயில்களோடு சம்பந்தப்படல் (அக்கோயில்களுக்கான விரதம் பிடித்தல் முதலியன)

   vi. பஞ்சாங்கத்திற் கோயிலின் பெயர் இடம்பெறுதல்.

என ஆயிரத்து தொழாயிரத்து ஐம்பதுகளின் பின்னர் ஏற்பட்ட சம்ஸ்கிருத மயமாக்கலின் விளைவுகள் குறித்துப் பேராசிரியர் கருத்துரைக்கின்றார்.

ஒவ்வொரு சமூகத்திலும் அவை பின்பற்றுகின்ற பண்பாட்டிலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. எந்தவொரு சமூகப் பண்பாட்டுச் சூழலிலும் இந்த மாற்றங்கள் ஒரு சிக்கலான நிகழ்வாகும் எனக் குறிப்பிடும் பக்தவத்சல பாரதி, அதிலும் சாதியமைப்புடைய சமூக, பண்பாட்டுச் சூழலில் மாற்றங்கள் பல வலைப்பின்னல்களாக நிகழ்ந்து கொண்டுள்ளன என்றும் குறிப்பிடுகின்றார் (பக்தவத்சலபாரதி:2008:155). சாதியும் சமூக மாற்றமும் குறித்துப் பலவாறு எழுதியுள்ள எம்.என்.சீனுவாஸ், சாதியமைப்புடைய இந்தியப் பகுதியில் சமூகப் பண்பாட்டு மாற்றம் சம்ஸ்கிருவயமாதல் என்னும் ஒரு முதன்மையான நிகழ்வு மூலம் நடைபெறுவதாக முன்மொழிந்தார் (மேலது:156).

இந்தக்கருத்துக்களினடிப்படையில்நோக்குகின்றபோதுசாதியும்சாதியஅடுக்குகளும்மாற்றமடையாத அமைப்புகளல்ல. மாற்றங்களே மாறாதது என்ற அடிப்படையில் அவை தொடர்ச்சியான நெகிழ்வுத் தன்மைக்கு உட்பட்டே இயங்கி வருகின்றன என்பது புலனாகின்றது. இங்கு குறிப்பிடப்படும் சம்ஸ்கிருதவயமாதல் என்பது ஆகமமயமாதலைக் குறிக்கின்றது. அதேவேளை உயர்குடியாக்கம், மேனிலையாக்கம் என்னும் பொருள் நிலையிலும் இச்சொல் எடுத்தாளப்படுகின்றது. இத்தகைய சம்ஸ்கிருதவயமாதல் எனும் பகுதிக்குள் உள்வாங்கப்பட்டதனடிப்படையில் சமூகத்தின் உண்மைப்பாடு தொலைக்கப்பட்டிருந்தாலும் இச்சமூகத்தின்

மேனிலையாக்கத்தினை ஆதிமகேஸ்வரர் ஆலயத்தினூடாக இனங்கண்டறிய முடிகின்றது.

இந்த அடிப்படையில் இவ்வாலயப் பண்பாட்டு மாற்றத்துக்கான அடிப்படைகளை இனங்காண முற்படுகையில் பின்வரும் காரணிகள் முதன்மைக்குரியனவாகத் தென்படுகின்றன. இது குறித்த சிந்தனையில் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் குறிப்பிடும் கருத்துக்கள் கவனத்திற்குரியனதாகின்றன.

> "தம்மவரான பூசாரியின் கலையாடலை மதிப்புக்குறைந்த நிலையாகக் கருதுவது மட்டுமன்றி, அண்ணமாரையும் கூடத் தங்களின் சாதிநிலையைக் காட்டிக் கொடுப்பவராக இனம்கண்டு மாற்றிவிட வேண்டுமென்றும், ஆகம – சம்ஸ்கிருத மயமாக்க கடவுளாகப் பிராமணர் பூசையைக் காண வேண்டுமென்னும் அழுத்தங்கள் சில இடங்களில் அதிகரித்திருக்கின்றன. அநேகமாகக் கல்வி, தொழில்ரீதியான இட அசைவு, வெளிநாட்டுப் பணவரவு ஆகியன அதிகமாகவுள்ள இடங்களில் இளைஞர் மத்தியிலேயே இவ்வாறான மாற்ற உணர்வின் தீவிரம் உள்ளது"

என்று குறிப்பிடுகின்றார் (சண்முகலிங்கன்,என்.,2004:37). ஆயினும் நாம் இங்கு முக்கியமான ஒன்றினை நோக்குதல் வேண்டும். ஆகமத்துக்குச் சார்பான நாவலரின் பிரசாரத் தீவிரமும் அதனால் மேலெழுந்த சம்ஸ்கிருதமய அலைகளும் பெரும்பாலான ஆலயங்களைப் பண்பாட்டு ரீதியில் மாற்றங்கான வைத்திருக்கின்றது. முக்கியமாக சைவசித்தாந்த வாழ்வியலில் சிறுதெய்வ வழிபாட்டுக்கு முதன்மை கொடுக்கப்படாத நிலையினையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆதி தெய்வங்கள் அல்லது சிறு தெய்வங்கள் நாட்டாரியல் வழிபாட்டில் முக்கியம்பெறுவன. ஆனால் இவ்வழிபாடுகள் ஆன்ம விடுதலைக்குத் தடையாக இருப்பதனால் சைவசித்தாந்தம் அவ்வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்..."

என்றும்,

"சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை

அவரோடொப்பார் இங்கு யாவரும் இல்லை..."

என்றும் வரும் கருத்துக்கள் சிவனை முதன்மைப்படுத்துவன. இக்கருத்துக்களை கூர்ந்து

நோக்குங்கால் அவை, சிறுதெய்வங்களுக்கான முதன்மையினை வழங்காதுள்ளமை புலனாகும். ஒருவகையில் சிறுதெய்வ வழிபாட்டுக்கான கண்டனங்களாகக் கூட இவற்றினைக் கருதலாம். எனவே, இத்தெய்வங்கள் மனிதத்தன்மையுடையவை. இறையியல்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. இவர்களால் எவ்வாறு முத்தியினை அளிக்க முடியும் என்பது சைவசித்தாந்திகளின் வாதிகளின் வாதமாகும். சமயத்தின் நோக்கமே ஆன்ம ஈடேற்றம். எனவே, சைவசித்தாந்த வாழ்வியல் மேலெழுந்திருக்கின்ற சூழலில் இவ்வாறான சிந்தனைகளும் நாட்டாரியல் வழிபாடுகளிடையே ஏற்பட்ட மாற்றங்களில் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம்.

இந்தவகையில் இவ்வாலயத்தில் நிகழ்ந்திருக்கின்ற பண்பாட்டு மாற்றத்தினைப் பின்வருமாறு இனங்கண்டு கொள்ள முடிகின்றது.

1. வழிபடப்பட்ட தெய்வ மாற்றம்

   ஆரம்பகாலம்: அண்ணமார் தெய்வம் (பொல்லுகள் எனும் குறியீடு)

   தற்போது: மூலமூர்த்தி – சந்திரசேகரர், உற்சவ மூர்த்தி – சிவன் மனோன்மணி அம்மன், பரிவார மூர்த்திகள் – பிள்ளையார், முருகன், அம்மன், நாகதம்பிரான், பைரவர் முதலானவை.

2. திருக்கோயில் பெயர் மாற்றம்:

   ஆரம்பகாலம்: கீரிமலை – கூவில் அண்ணமார் கோயில்

   தற்காலம்: மனோன்மணி சமேத ஆதிமகேஸ்வரர் ஆலயம்

3. வழிபாட்டு முறைகள்

   ஆரம்பகாலம்: விளக்கு வைத்தல், பலியிடுதல், குளிர்த்தி, மடை

   தற்காலம்: பொங்கல், குளிர்த்தி, மடை, நாளாந்த பூசை வழிபாடுகள், விசேட நாள் பூசை வழிபாடுகள், ஆனி உத்தரத்தைத் தீர்த்த நாளாகக் கொண்ட அலங்கார உற்சவம் பத்து நாட்கள் நிகழ்கின்றன (தீர்த்த உற்சவத்தன்று 108 சங்காபிஷேகம் இடம்பெறும்)

4. கோயில் அந்தஸ்தில் ஏற்பட்ட மாற்றம்

   - அண்ணமார் கோயில் என வழங்கப்பட்ட ஆலயம் இன்று மனோன்மணி சமேத ஆதிமகேஸ்வரர் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.
   - விளக்கு வைத்தல் நிகழ்வாக இடம்பெற்ற வழிபாடுகள் சங்காபிஷேகம், அலங்கார உற்சவம் என திருவிழாக்களாக இடம் பெறுகின்றன.
   - ஊர்ப்பெரியவர்களாலும் இளைஞர்களாலும் நிகழ்த்தப்பட்ட வழிபாடுகள் இன்று வீரசைவ பூசகர்களால் நிகழ்த்தப்படுகின்றன.
   - விதிமுறைகளற்ற நிலையில் ஆற்றப்பபட்ட வழிபாடுகள் இன்று ஆகம எல்லைக்குள் இடம்பெறுகின்றன.
   - நிர்வாக பொறுப்புடைமையானது மனேஜர் என்ற அமைப்பினின்றும் நீங்கி யாப்பினை அடிப்படையாகக் கொண்ட நிர்வாகக் கட்டமைப்புக் காணப்படுகின்றது (2011இல் முருகன் வைரமுத்து தலைவராக இருந்த காலத்தில் யாப்பு உருவாக்கப்பட்டது)
   - சங்காபிஷேகம் இடம்பெற்ற நிலையில் இன்று மகோற்சவமாக அலங்காரத் திருவிழா பத்து நாட்கள் இடம் பெறுகின்றன.
   - பலியிடுதல் நிறுத்தப்பட்டு பூசை வழிபாடுபாடுகள் இடம்பெறுகின்றன.
   - பெருங்கோயில்களில் இடம்பெறுவதனைப் போல வேட்டைத்திருவிழா, சப்பறம், தேர், தீர்த்தம், திருக்கல்யாணம் என நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.
   - பனங்கூடலின் கீழ் – தெய்வக் குறியீடாக பொல்லுகள் வைத்து விளக்கேற்றி வழிபட்ட நிலையில் மடாலயமாக வளம் பெற்று, இன்று கர்ப்பகிரஹம், அந்தராளம், விமானம், முகமண்டபம், வசந்தமண்டபம், பரிவாரத்தெய்வங்களுக் கான சந்நிதிகள் எனக் கட்டட அமைப்பில் மாற்றங்கண்டிருக்கின்றது.

**வழிபாடுகள்: மரபும் மாற்றங்களும்**

வரலாறு – வழிபாடு என்பன ஒன்றினோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. ஆலயத்தோடு தொடர்புடையதான வரலாறு ஏலவே நோக்கப்பட்டது. இந்த ஆலயம் தொடர்பான வரலாற்றியல் ரீதியான ஆவணங்கள் எவையும் எழுத்துமூலமாக தோற்றம் பெற்றிருக்க வில்லை. இந்த ஆய்வு இவ்வாலயத்தின் ஒரு வரலாற்றாவணமாகத் திகழும் என்பது ஆய்வாளரின் நம்பிக்கை. எனவே இங்கு வழிபாடுகள் குறித்துப் பின்வருமாறு நோக்கலாம்.

ஆனி உத்தர நாளினை நிறைவு நாளாகக் கொண்டு பத்து நாட்கள் திருவிழா நடாத்துகின்றனர். திருவிழாவானது அலங்கார உற்சவமாகக் நாட்களாகக் கொண்டாடப்படுகின்றது. திருவிழா தொடக்க நாளன்று, கமுகு மரம் நாட்டப்பட்டு சுபநேரத்தில் நந்திக்கொடி ஏற்றப்படுகின்றது. அன்றைய நாள் உபயகாரர்களால் வழங்கப்படும் கமுகு மரமே நாட்டப்பட்டு அதில் கொடியேற்றுவது வழக்கமாக உள்ளது. இந்நாட்களில் விசேடமாகக் குருக்கள் வரவழைக்ககப்படுவர். அவர்களால் இந்நாட்களில் விசேட பூசைகள் நிகழ்த்தப்படுகின்றன.

ஏழாம் திருவிழா வேட்டைத்திருவிழாவாகும். எட்டாம் நாள் சப்பரத் திருவிழாவாக முத்துச்சப்பரத்தில் சிவன் அம்மனுடன் எழுந்தருளுவார். ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாப் பாவனையில் சப்பறத்தில் சுவாமி எழுந்தருளும் நிகழ்வு இடம்பெறும். பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் நிகழும். ஆலய வளாகத்தில் உள்ள தீர்த்தக் கிணற்றில் காலையில் தீர்த்தத் திருவிழா விமர்சையாக நடைபெற்றதன் பின்னர் இரவு கொடி இறக்குதல் நிகழும். பதினொராம் நாள் திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும்.

பன்னிரெண்டாம் நாள் வைரவர் மடை இடம்பெறும். நாட்டாரியல் வழிபாட்டில் மரக்கறி மடை, பூமடை, பழமடை, மச்சமடை, பலகார மடை என பல்வேறு மடைகள் வைத்து வழிபாடுகள் நிகழுமாயினும் இவ்வாலயத்தில் பலகார (பல ஆகாரம்) மடை மட்டுமே போடுவது வழக்கமாக உள்ளது. எல்லா உபயகாரர்களும் மடை போடுவர். தனித்தனி மடைகளும் போடப்படும். அதேவேளை பொங்கல் நிகழ்வும் சிறப்பாக இடம்பெறுகின்றது.

திருவிழா உபயமானது மரபுவழிவந்த பரம்பரை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், இரு திருவிழாக்கள் இவ்விதிமுறைக்கப்பால் வழங்கப்பட்டிருக்கின்றது. ஒன்று கிராமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள மக்களாலும், மற்றையது கிழக்குப் பகுதியிலுள்ள மக்களாலும் செய்யப்பட்டு வருகின்றன.

பெண்கள் நலனோன்பும் வகையில் வரலட்சுமி விரதம், கேதார கௌரிவிரதம் முதலான விரத அனுட்டானங்கள் இடம் பெறுகின்றன. திருவிழாநாட்களில் தீச்சட்டி எடுப்பது வழக்கமாக உள்ளது. இதனை வழக்கமாகவும், நிவர்த்திக்கடன் நிறைவேற்றம் நோக்கமாகவும் நிகழ்த்துவர். மற்றும், ஆடிப்பூரம், தைப்பூசம், தைப்பொங்கல், கந்தசஷ்டி முதலான விசேட நாள் வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. பாற்செம்பு எடுத்தல், காவடி முதலானவற்றை எடுத்து தமது நிவர்த்திக்கடனைக் கழிக்கும் வழக்கமும் உண்டு.

வைகாசிமாத விசாகத் திதியினைத் தொடர்ந்துவரும் முதல்வார திங்கட்கிழமை பொங்கல் நிகழ்வு விஷேடமாக இடம்பெறுகின்றது. மாசி மாதத்தில் வருகின்ற கடைசி வியாழக்கிழமை குளிர்த்தி இடம்பெறும். இவ்வாலயத்தில் நிகழும் மிக உணர்வுபூர்வமான நிகழ்வாக இதனைக் கொள்கின்றனர். சமூகபாதுகாப்பு,

ஒற்றுமை, சமூக ஒத்திசைவு என்பவற்றுக்கு இந்நிகழ்வு வலுச்சேர்க்கின்றது.

> “அடியவர்கள் எல்லோரினதும் நிதிப்பங்களிப்புடன் இந்நிகழ்வு இடம்பெறும். ஒவ்வொருவரும் தங்கள் விவசாய நிலங்களில் விழைகின்ற நெல், மரக்கறிகளை வழங்குவர். தமது உழைப்பினால் விளைந்தனவற்றை வழங்குவதாக எண்ணி மகிழ்வர். இந்நாளில் முக்கியமான நிகழ்வாக படிக்கட்டு அபிஷேகம் நிகழும். அன்னதானம் வழங்கும் நிகழ்வில் அனைவரும் பங்கேற்பர். கஞ்சி வார்க்கும் நிகழ்வும் மிகச்சிறப்பாக இடம்பெறும்” (நேர்காணல்:ரமேஸ்,வை., வயது,47)

இந்நிகழ்வு சமூக நல்லிணக்கத்துக்கு வலுச்சேர்ப்பதாகவும், தமது உடலுழைப்பினால் விளைந்தனவற்றை இறைவனுக்கு வழங்கி மகிழும் உளவியலுணர்வையும் வெளிக்காட்டுகின்றது.

இவ்வழிபாடுகள் யாவும் அண்ணமார் ஆலயத்தின் பண்பாட்டு மாற்றமாகவே இனங்காணப் படுகின்றது. அண்ணமாருக்கான குறியீடுகளே தொடக்ககால வழிபாட்டு முறைகளோ தற்போது வழக்கத்தில் இல்லை. ஏலவே, குறிப்பிட்டது போல சிவன் கோயில் என்ற அடையாளத்தை இக்கோயில் பெற்றிருக்கின்றது. சமூக மேனிலையாக்கத்தினால் இம்மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது.

## நிறைவாக:

யாழ்ப்பாணத்திலுள்ள அண்ணமார் ஆலயங்களுள் மிகவும் பழமையானதாக கீரிமலை – கூவில் அண்ணமார் திகழ்கின்றது. பொதுவாக அடையாளப்படுத்தப்படுகின்ற அண்ணமார் தெய்வத்துடன் தொடர்புடைய தொன்மங்களோடு இக்கோயிலுருவாக்கம் அமையப்பெறவில்லை. அகப்புறக்காரணிகளால் மேனிலையாக்கம் கண்டிருக்கின்ற இவ்வாலயம். பெயர் – வழிபாடுகள் – கட்டட அமைப்பு எனும் நிலைகளில் மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. இந்த மாற்றம் தவிர்க்கவியலாதது. ஆயினும், உண்மைப்பண்பாடு, கருத்துப்பண்பாடு என்பன இம்மாற்றங்களால் இழக்கப்பட்டு புதிய பண்பாட்டுப் படிமலர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் பின்னெல்லையில் சம்ஸ்கிருதப்படுகைக்கு உட்படத்தொடங்கிய அண்ணமார் கோயில் மீள் குடியேற்றத்தின் பின்னரான சூழலில் முழுதளாவிய நிலையில் சம்ஸ்கிருதமயமாதலுக்குட்பட்டு மனோன்மணி சமேத ஆதிமகேஸ்வரர் ஆலயமாக மேனிலையாக்கம் பெற்று பண்பாட்டு மாற்றத்தினைக் கண்டிருக்கின்றது எனலாம்.

## உசாத்துணைகள்

பக்தவத்சலபாரதி, 2008, தமிழர் மானிடவியல், அடையாளம், திருச்சி மாவட்டம், இந்தியா.

சண்முகலிங்கன்,என்., பக்தவத்சலபாரதி, 2004, இலங்கை இந்திய மானியவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

சிவத்தம்பி,கா.,2000, யாழ்ப்பாணம், சமூகம்,பண்பாடு, கருத்துநிலை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கந்தையா,மு.,1986, சிவாலய சேவை ஏன்? எப்படி?, ஏழாலை.

கிருஸ்ணசாமி,ப., 1995, “அண்ணன்மார் வரலாறு – காப்பியம் – வழிபாடு”, தன்னனானே, காவ்யா வெளியீடு, பெங்களூர்.

**தகவலாளர்கள்**

முருகன் கந்தன் (வெள்ளையன்), வயது – 83, பற்றிமா கோயிலடி, பண்டத்தரிப்பு.

க.நாகேந்திரம், வயது – 61, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

முருகன் வைரமுத்து, வயது – 72, கீரிமலை.

வல்லி கோபாலகிருஷ்ணன், வயது – 60, கீரிமலை.

வைரமுத்து ரமேஷ், வயது – 47, கீரிமலை.

வே.ரசிகரன், வயது – 42, கீரிமலை.

# பல்லின சமூகச் சூழலில் சமயக் கலந்துரையாடலும் இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் அதன் நடைமுறையும் : ஓர் இஸ்லாமிய நோக்கு

# Interfaith Dialogue in a Multicultural Social Context and Its Practice in Sri Lankan State Universities: An Islamic Perspective

Mujahid, A.L.M[1], Aliyar, A.[2], Mohamed Helfan, M.L[3]

[1]Senior Lecturer in Islamic Studies, Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.

[2] M.Phil Student, Department of Arabic & Islamic Civilization, Faculty of Arts, University of Peradeniya.

[3]Lecturer (Probationary) in Islamic Studies, Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.

1mujahidm@esn.ac.lk, 2aliyarbinasanar@gmail.com, 3helfanmlm@esn.ac.lk

***Abstract***

*In Sri Lanka, Tamil research has been carried out through the activities of traditional scholars in various ways. These can be viewed through the Commentaries of literary works and grammar texts, the Purana padanam, and essays related to literature and grammar. However, research involving modern methodologies began as early as the nineteenth century. Some studies identifying such Tamil research efforts have been published. In this context, the purpose of this study is to highlight the significance of the research conducted on Tamil studies until the 1950s, both by offering a detailed perspective on the research of that period and by methodically approaching the early Tamil research efforts. This study adopts an analytical, comparative, and descriptive approach. It has been observed that the Commentaries of literary works and grammar texts, the Purana padanam, and essay writing undertaken by traditional Tamil scholars in Sri Lanka until the 1950s contain thoughtful streams of research. It has also been identified that the efforts of scholars such as Simon Casi chetti, A. Sadasivam Pillai, V. Kanakasabai Pillai, and Sabapathi Navalar reflected research that, to some extent, incorporated modern methodologies.*

***Keywords:*** *Commentaries, Purana padanam, Traditional scholars.*

**அறிமுகம்**

தமிழ் ஆய்வுச் சூழலில் தமிழியல், தமிழியலாய்வு, தமிழாய்வு, தமிழாராய்ச்சி முதலான பதங்கள் பலராலும் கையாளப்படுதனை அவதானிக்க முடிகிறது. அப்பதங்கள் தமிழ் இலக்கிய, இலக்கண ஆய்வு என்ற எல்லையைக் கடந்து, புலவர் வரலாறு, தமிழ் ஆளுமைகள், தமிழர் சரித்திரம், நாகரிகம், வழக்காறு, தொல்லியல் முதலான தமிழோடு ஒன்றிய துறைசார் ஆராய்ச்சிகளையும் உள்ளடக்கி நிற்கின்றன. 'தமிழாராய்ச்சியின் வளர்ச்சி' என்னும் நூலை எழுதிய ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் தமிழாராய்ச்சியின் ஆய்வுப் பரப்பைக் கீழ்வருமாறு எல்லைப்படுத்தி நிற்பது குறிப்பிடத்தக்கது:

> தமிழ்மொழி, அதிலுள்ள இலக்கியம் இலக்கணம் பற்றிய கொள்கைகள், தமிழ்ப் புலவரின் காலம், வாழ்க்கை, நூல்களின் தன்மை, தரம், அவை எழுதப்பெற்ற சூழ்நிலை, புலவர்க்கும் அவரை ஆதரித்த அரசர், வள்ளல்கள் முதலியோருக்கும் இடையே நிகழ்ந்த உறவு ஆகியவைகளைப் பொருளாகக் கொண்டு, விருப்பும் வெறுப்பும் இன்றி, நம்பத் தகுந்த ஆதாரங்களை வைத்துத் தக்க பரிசீலனை முறைகளைக் கையாண்டு தற்காலப் பண்புடன் ஆராய்ந்து உண்மையை நாடும் முயற்சியே தமிழ் ஆராய்ச்சியாகும். தமிழரின் சரித்திரம், நாகரிகம், தமிழ் நூல்களின் இலக்கிய விமரிசனம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள முயலுவதும் தமிழ் ஆராய்ச்சி என்பதற்குள் பொதுவாக ஒருவாறு அடங்கும் (சுப்பிரமணிய ஐயர், ஏ.வி., 1959: i).

இலக்கிய இலக்கணங்கள் முதலானவற்றை விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சி நெறிமுறைகளின் அடிப்படையில் அணுகும் 'நவீன ஆய்வு' முயற்சிகள் தமிழ்ச் சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தொடங்கின. ஆங்கிலேய அரசின் அதிகாரிகளாக தென்னிந்தியா வந்தவர்களிற் சிலர் மொழி, இலக்கியம், தொல்லியல், வரலாறு, சமூகவியல் முதலான துறைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். அவர்களின் வழித்தடத்தைப் பின்பற்றத் தொடங்கிய சுதேசிகள் பலர் தமிழாராய்ச்சியில் தம்மை ஈடுபடுத்தினர். சுதேசிகள் தமிழாராய்ச்சி முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கியதன் பிற்பாடு தமிழாராய்ச்சி புதிய திசைவெளிகளை நோக்கிப் பரிணமிக்கலாயிற்று. தமிழ் இலக்கியங்கள் பதிப்பிக்கப்பெற்றமையும் ஆங்கிலக் கல்வியால் ஆய்வுவழிப்பட்ட மேனாட்டுச் சிந்தனை சுதேசிகளை வந்தடைந்தமையுமே சுதேசிகள் தமிழாய்வுச் சூழலுக்குள் உள்ளீர்க்கப்பட்டமைக்கு ஏதுவாய் விளங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கல்வி வளர்ச்சியையும் அக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பதிப்பு, நவீன இலக்கிய ஆக்கங்கள், ஆய்வுச் சிந்தனை வழிப்பட்ட செயற்பாடுகள் ஆகியவற்றையும் நோக்கும்போது இத்தகைய முடிவுக்கு வரமுடிகிறது.

மேற்குறித்த கருத்தினை மறுத்துரைப்பாரும் உளர். அத்தகையோர் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் தோன்றிய காலம் தொட்டே இலக்கிய, இலக்கண ஆய்வு முயற்சிகளும் தோன்றிவிட்டன என்பர். முத்தமிழ்ப் பாகுபாடு, நூற்றொகுப்புக்கள் (சங்க இலக்கியத் தொகுப்பு, திருமுறைத் தொகுப்பு, நாலாயிர திவ்விய பிரபந்தத் தொகுப்பு முதலானவை), இலக்கிய, இலக்கண உரைகள் முதலானவற்றின்வழி ஆய்வுச் சிந்தனைகள் வெளிப்பட்டு நிற்பதை அவர்கள் தமது கருத்துக்குச் சான்றாக முன்வைப்பர். இவ்வகுப்பாளரின் கருத்துக்கள் ஏற்புடையனவே. அவர்கள் குறிப்பிடும் மேற்குறித்த சான்றுகளை நோக்குகையில், தமிழ் மரபில் ஆய்வுவழிப்பட்ட சிந்தனைக் கருத்துக்கள் காலத்துக்குக் காலம் முன்வைக்கப்பட்டு வந்துள்ளமையை உணர

முடிகிறது. ஆயினும், ஐரோப்பியரின் வருகையின் பின்னரே நவீன ஆய்வு முறையியல்களுடன்கூடிய ஆய்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடக்கப் புள்ளியாக கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' விளங்குகிறது.

இலங்கையில் நிலவிவந்த உரைப் பாரம்பரியம், புராணபடன மரபு முதலானவற்றின் வழியாக ஆய்வுப்போக்கொன்று தோற்றங்கண்டுள்ளமையை அவதானிக்கலாம். இருப்பினும், நவீன ஆய்வு முயற்சிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே முன்னெடுக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறில் இருந்து, இன்றுவரை பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுத் தமிழாராய்ச்சி வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இலங்கைத் தமிழாராய்ச்சி முயற்சிகளைப் பொதுவாக 1950கள் வரையான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், 1950களுக்குப் பிற்பட்ட காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் என இரு காலகட்டங்களாகப் பகுத்து நோக்க முடியும். இவ்விரு காலகட்டங்களில் முதற் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சி முயற்சிகள் சிலவற்றையும் அவற்றுக்குப் பின்புலமாக அமைந்த காரணிகளையும் அவ்வாராய்ச்சிகளின் தன்மைகளையும் இக்கட்டுரை அடையாளங் காண முனைகிறது.

1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை / ஆய்வுச் சிந்தனைகள் வெளிப்பட்டு நிற்கும் செயற்பாடுகளைக் கீழ்வருமாறு பாகுபடுத்தி நோக்க முடியும் :

1. இலக்கிய, இலக்கண உரைகள் வாயிலாக வெளிப்படும் ஆய்வுச் சிந்தனைகள்
2. பதிப்புக்கள்வழி வெளிப்படும் ஆய்வுச் சிந்தனைகள்
3. கட்டுரைகள், நூலாக்கங்களாக வெளிவந்த ஆய்வுகள்

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கைத் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியில் 1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகளின் முக்கியத்துவம் யாதென்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அமைகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இலங்கைத் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியில் 1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகள் சிலவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அத்தகைய ஆய்வு 1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகளை அடையாளப்படுத்தல், அவற்றின் தன்மைகளை வெளிக்கொணர்தல், அவ்வாய்வுகளுக்குப் பின்புலமாய் அமைந்த காரணிகளை இனங்காணல் ஆகிய உப நோக்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**முன்னைய ஆய்வுகளின் மீளாய்வும் ஆய்வு இடைவெளியும்**

இலங்கைத் தமிழறிஞர்களினால் காத்திரமான தமிழாராய்ச்சிகள் வெளிக்கொணரப்பட்ட சூழலில், இலங்கைத் தமிழாராய்ச்சிகளை அடையாளப்படுத்தும் எழுத்துக்களும் அவற்றின் தராதரத்தை மதிப்பிடும் எழுத்துக்களும் வெளிவரத் தொடங்கின. அத்தகைய செயற்பாடுகள் இரு அடிப்படைகளில் நிகழ்ந்தேறின :

01. ஒவ்வோர் காலகட்டத்திலும் தமிழாராய்ச்சிகள் இடம்பெற்ற விதத்தை எடுத்துரைத்தல், அவ்வாய்வுகள்மீதான மதிப்பீடுகளை முன்வைத்தல்.
02. காத்திரமான ஆய்வுகளை மேற்கொண்ட தனியாளுமையினை அடிப்படையாகக் கொண்டு அவர்களது ஆய்வு முயற்சிகளை எடுத்துரைத்தல், அவ்வாய்வுகள்வழி தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் அவர்களது பங்களிப்பை அடையாளப்படுத்தல், அவர்களது ஆய்வுகள்மீது மதிப்பீட்டுக் கருத்துக்களை முன்வைத்தல்.

இவ்விதமான பல மதிப்பீடுகள் வெளிவந்துள்ளபோதிலும் அவை பெரும்பாலும் 1950களுக்குப் பின்னரான சூழலையே கவனம் கொண்டுள்ளன. 1950களுக்கு முன்னரான தமிழாராய்ச்சிகள் குறித்து வெளிவந்த மதிப்பீடுகளுள் க.அருணாசலம், நா. சுப்பிரமணியன் ஆகியோரது ஆய்வுகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியன. இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் (1997) எனும் தமது நூலில் க.அருணாசலம், இலங்கைத் தமிழியல் ஆய்வுகளை தமிழ் நாவலும் சிறுகதையும், நவீன தமிழ்க் கவிதையும் புதுக்கவிதையும், பண்டைத் தமிழ் இலக்கியங்களும் இடைக்காலத் தமிழ் இலக்கியங்களும் முதலான வகைமைகளை உள்வாங்கி, அவ்வவ் வகைமைகள் சார்ந்து வெளிவந்த ஆய்வுகள் குறித்துக் கருத்துரைப்பார். அவ்வாறு கருத்துரைக்கையில் 1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாய்வுகள் பல அடையாளம் காட்டப்பட்டுள்ளன. சிற்சில இடங்களில் அவ்வாய்வுகள்மீதான தமது மதிப்பீட்டினையும் முன்வைத்துள்ளார்.

ஈழத்தில் தமிழிலக்கியத் திறனாய்வில் கோட்பாடுகளை மையப்படுத்திய ஒரு வரலாற்றுக் குறிப்பு (2008) என்ற கட்டுரையை எழுதிய நா. சுப்பிரமணியன், கட்டுரையின் முதற் பகுதியில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட திறனாய்வுசார் செயற்பாட்டின் தொடக்க முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறார். அப்பகுதியில் இலக்கியத் திறனாய்வுச் செயற்பாடுகள் பலவற்றைக் (உரை, புராணபடனம்) குறிப்பிட்டபோதும் விபுலாநந்த அடிகளாரின் எழுத்துக்களில் இருந்தே முறையான திறனாய்வுப் போக்கு தொடங்குகிறது என வரையறுக்கிறார். இவ்வாய்வுகள் தவிர்த்து, சைமன் காசிச்செட்டி, ஆ.சதாசிவம்பிள்ளை குறித்த நுண்ணாய்வினை தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர் பெரு முயற்சிகள் என்ற நூலில் பொ.பூலோகசிங்கம் மேற்கொண்டுள்ளார். இருப்பினும், 1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகளை முறையாக அடையாளப்படுத்தி, அவற்றின் தன்மைகள், அவை எழுந்த பின்புலம், இலங்கைத் தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் அவை பெறும் முக்கியத்துவம் ஆகியனவற்றை அணுகும் ஆய்வுகள் எவையும் வெளிவரவில்லை. அந்த இடைவெளியை இவ்வாய்வு நிரப்புகிறது.

### ஆய்வு முறையியல்

1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகளின் தன்மைகளை எடுத்துரைப்பதற்கு விபரண ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பனவும் அவை மேற்கொள்ளப்பட்ட பின்புலத்தை ஆராய வரலாற்று அணுகுமுறையும் வெவ்வேறு ஆய்வுகளுடன் ஒப்புநோக்கி ஆராய, ஒப்பீட்டு அணுகுமுறையும் கைக்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடலும்**

**இலக்கிய, இலக்கண உரைகள் வாயிலாக வெளிப்படும் ஆய்வுச் சிந்தனைகள்**

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு ஈழத்துப் பூதந்தேவனாருடன் தொடங்குவதாகக் கருதுவது மரபு. அவ்வாறு தொடங்குவதற்கேற்ற வலுவான சான்றுகளை ஆ.வேலுப்பிள்ளை எடுத்துக்காட்டியுள்ளார் (வேலுப்பிள்ளை, ஆ., 2007: 13–19). ஆயினும், பூதந்தேவனாரை ஈழத்தவரென ஏற்பதில் பூலோகசிங்கம் தயக்கம் காட்டியமையும் குறிப்பிடத்தக்கது (பூலோகசிங்கம்,பொ., 2016: 63). பதின்மூன்றாம் நூற்றாண்டில் உதயம் பெற்ற யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கள் காலம் தொட்டே (ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் முதல்) தொடர்ச்சியான இலக்கியப் பாரம்பரியத்தை அடையாளம் காண முடிகிறது. இக்காலத்தில் தமிழ் இலக்கிய, இலக்கண, அறிவியல் கல்வி செழித்தோங்கியுள்ளமையை உணரமுடிகிறது. ஆயினும், இலக்கிய உரைகள் எழுந்தமைக்கான சான்றுகளை அடையாளம் காண முடியவில்லை.

ஈழத்து உரை மரபின் முதலாவது தடயத்தினை போர்த்துக்கேயர் காலத்தில் இனங்காண முடிகிறது. போர்த்துக்கேயரின் கொடுமைக்கு அஞ்சி, தமிழ்நாடு சென்று வாழத்தலைப்பட்ட யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாசர் எழுதிய ‘சிவஞானசித்தியார் உரை’யையே ஈழத்தின் முதல் உரைநூலாகச் சுட்டுவர். ஆயினும், கூழங்கைத் தம்பிரானின் நன்னூற் காண்டிகையுரையுடனேயே ஈழத்து உரை மரபைத் தெளிவாக அடையாளம் காண முடிகிறது என்பர் (சிவலிங்கராஜா, எஸ்., 2004:11).

இவர் காலத்திலிருந்து உரை மரபு விருத்தியடைந்தமைக்குப் புராண படனம், கல்வித் தேவைகள், சமய உந்துதல்கள், அச்சியந்திரத்தின் வருகையேற்படுத்திய மறுமலர்ச்சி மனப்பாங்கு, புலமைப் போட்டி மனப்பான்மை, புலமைச் செருக்கு முதலானவற்றைக் காரணங்களாக முன்மொழிவார், சிவலிங்கராஜா (சிவலிங்கராஜா, எஸ்., 2004:12).

ஞானப்பிரகாசரில் தலையெடுக்கும் ஈழத்து உரையாசிரியர் மரபு கூழங்கைத் தம்பிரான், அருளம்பலவனார், சிவசம்புப் புலவர், ஆறுமுகநாவலர், ச.பொன்னம்பலபிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார், அ.குமாரசுவாமிப் புலவர் எனத் தொடர்ந்தது. இவர்களால் முன்னெடுக்கப்பட்ட உரை முயற்சிகள் ஆய்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. உரைகளில் மேற்கோள் காட்டுதல், சமய தத்துவக் கருத்துரைத்தல், இலக்கணக் குறிப்புரைத்தல், விளக்கவுரைக் குறிப்புகள் தருதல் முதலானவை அவரவர் ஆய்வுச் சிந்தனையை ஆங்காங்கே புலப்படுத்தி நிற்கின்றன. ஆராய்ச்சியுரைகளாக அமையும் உரைகள் இவ்விதத்தில் ஈண்டு குறிப்பிடத்தக்கன.

ஈழத்தில் நிலவிய புராணபடன மரபினூடாக இரசனை உணர்வு மக்களுக்கு ஊட்டப்பட்ட செயற்பாட்டையும் புராணத்தைப் படித்துப் பயன் சொல்பவர் தமது இலக்கியச் சுவைத்திறனுக்கு ஏற்ப மக்கள் மனங்கொள்ளும் வகையில் பல கருத்துக்களை எடுத்துரைத்த செயற்பாட்டையும் இலக்கிய ஆய்வு வழிப்பட்ட செயற்பாடுகளின் முதற்கட்டமாகக் கருதுபவர்களும் உளர். கந்த புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலான புராணங்கள் புராணபடனஞ் செய்யும் சிறப்பான புராணங்களாக விளங்கின. புராணம் வாசித்துப் பயன்சொல்லுதல் என்பது வித்துவப்பாங்குக்குரிய செயற்பாடாகும். இதற்கு

இசைஞானம், இலக்கிய இலக்கணப் புலமை, சைவசித்தாந்த அறிவு, வைதிக மதங்களின் கோட்பாடு பற்றிய அறிவு முதலானவை இன்றியமையாதனவாகும். நாவலரவர்கள் இம்முறையை வளர்த்துச் செல்வதற்கு முன்பாக இது சில ஆலயங்களிலும் பிரபுக்கள் இல்லங்களிலுமே நடைபெற்று வந்தது. மேற்கூறிய புராணங்கள் காவிய ரசனைக்குரிய இலக்கியங்களாக அமையவில்லை. அவை புறத்தோற்றத்தில் இலக்கியமாகவும் அகத்தோற்றத்தில் சித்தாந்தச் செழும் புதையல்களாகவும் அமைவன (கனகரத்தினம், இரா.வை., 2017: 15).

ஈழத்தில் நிகழ்ந்த புராணபடன உரைகள் எழுத்தாவணங்களாகப் பதிவுசெய்யப்படவில்லை. ஆதலால், அவை குறித்து விரிவாகக் கூறுதற்கில்லை. இருப்பினும், புராண படனம் குறித்த பதிவுகள் சிலவற்றை அறியமுடிகிறது. நல்லூர் கந்தசுவாமி கோவிலிலே நாவலரின் மருமகர் வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பலபிள்ளை "வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த" எனத் தொடங்கும் கந்தபுராண பாடலை வாசிக்க, நாவலரவர்கள் உரை சொல்லியவாற்றைப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை கீழ்வருமாறு பதிவுசெய்துள்ளார்:

> பதப்பொருள் கூறிப் பொழிப்புரையுஞ் சொல்லி அதன்மேல், "வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த, போதக் காட்சிக்குங் காணலன்" என்ற பகுதிக்கு விசேஷ வியாக்கியானம் நடக்கின்றது. வேதக் காட்சி சாஸ்திர அறிவு. அது பாசஞானம். போதம் – ஆத்ம போதம். போதக் காட்சி – பசுஞானம். பாசஞானம், பசு ஞானம் என்கின்ற இருவகை ஞானங்களாலும் பதிப்பொருளை அறியமுடியாது. அந்த ஞானங்களால் அறிய முடியாமையால் பதிப்பொருள் சூனியம் அன்று. பதிப்பொருளை அறிதற்கு இரண்டிலும் வேறான மற்றொரு ஞானம் வேண்டும். அந்த ஞானத்துக்குப் பதிஞானம் என்று பெயர். இது சுத்தாத்துவித சைவசித்தாந்த உண்மை. இந்தப் பேருண்மை நாவலர் வாயிலிருந்து கங்கைபோல் எல்லையின்றிப் பிரவாகிக்கின்றது. கண்ணீர் ததும்ப உரோமஞ் சிலிர்ப்பக் கரங்கள் குவிய நாவலர் அவர்கள் சுப்பிரமணியப் பிரபாவத்தில் லயித்து, ஒரு கச்சியப்பரசிவாசாரியார் போலாய்த், தம்மையிழந்து வியாக்கியானவயப்பட்டு வியாக்கியானம் செய்கின்றார்கள் (பிரசாந்தன்,ஸ்ரீ., அனுசாந்தன், ஏ., 2018: 34, 35).

நாவலரின் புராணபடனத்தில் சித்தாந்த நோக்கு புலப்பட்டு நிற்க, வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் புராணபடனங்களில் இரசனை நோக்கு அதிகம் புலப்பட்டு நிற்கும் என்பர். "பொன்னம்பலபிள்ளை அழகுகள், நவரசங்கள் சொட்டச் சொட்டப் பாட்டுக்களுக்கு உரை விரித்தற்கென்றே பிறந்தவர் என்று சொல்லுவார்கள். அவரை மாணவர்களாகிய மதுகரங்கள் எப்பொழுதும் சூழ்ந்துகொண்டேயிருப்பார்கள். உச்சியிலிருந்து உள்ளங்கால் பரியந்தம் உள்ளங்காலிலிருந்து உச்சி பரியந்தம் பொன்னம்பலபிள்ளையின் உருவமே இலக்கிய ரசனையால் ஆனது. தனிக் கற்கண்டிற் செய்த பலகாரம்போலே இலக்கிய ரசனைமயமாயிருந்தார் பொன்னம்பலபிள்ளை. எந்த நேரத்திலோ புதிது புதிதாகத் தமக்குத் தோன்றுகின்ற இலக்கிய ரசனையை யாருக்காவது வெளிப்படுத்தாமல் இருக்கமாட்டாமை பொன்னம்பலபிள்ளையின் நித்திய கல்யாண குணம். பொன்னம்பலபிள்ளை இந்த மாட்டாமையாகிய முட்டுத் தீர்வதற்கு உபகாரஸ்தலங்களாய் புராணபடனம் நடைபெறுகின்ற முக்கிய சைவாலயங்கள் அமைந்திருந்தன" (பிரசாந்தன்,ஸ்ரீ., அனுசாந்தன், ஏ., 2018: 25) என்ற பண்டிதமணியின் கூற்றுக்களும் குறிப்பிடத்தக்கன.

இவ்விதமான பதிவுகள் வாயிலாக புராணபடன மரபு இலக்கிய ஆய்வுவழிப்பட்ட செயன்முறையாகவும் விளங்கியது என்பது புலனாகிறது. ஆகவேதான், இலங்கைத் தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் ஈழத்துப் புராணபடன மரபு குறித்தும் கவனம்கொள்ள வேண்டியுள்ளது.

**பதிப்புக்கள்வழி வெளிப்படும் ஆய்வுச் சிந்தனைகள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தவர்களால் தமிழ் இலக்கிய, இலக்கண, சமய நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குக் கால்கோள் இட்டவர் ஆறுமுகநாவலர். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பணியாற்றியவர் சி.வை.தாமோதரம்பிள்ளை. இவர்கள் வெளிப்படுத்திய பதிப்புகள் மூலபாடத் திறனாய்வின் வழிப்பட்டனவாகத் திகழ்கின்றன. அப்பதிப்புக்களில் தமது கருத்தினை விளக்க அடிக்குறிப்புக்களைப் பயன்படுத்தினர். அவ்வடிக்குறிப்புகளில் அருஞ்சொற் பொருள் தருதல், உரையில் பயின்று வரும் சொற்களுக்கு விளக்கம் அளித்தல், மேற்கோள் காட்டல், இலக்கணக் குறிப்புத் தரல், வடமொழிக் கருத்துரைத்தல், பாடவேறுபாடு காட்டல் என்பனவற்றைச் செய்தனர். நாவலரவர்களின் பதிப்புப் பணி குறித்துக் கூறவந்த இரா.வை.கனகரத்தினம், நாவலரின் பதிப்புக்களைத் தொகுப்புப் பதிப்பு, சுருக்கப் பதிப்பு, தெளிவுப் பதிப்பு, குறிப்பெதிர் பதிப்பு, ஆராய்ச்சிப் பதிப்பு, மூலப்பதிப்பு அல்லது உண்மைப் பதிப்பு (கனகரத்தினம், இரா.வை., 2017:92) என வகைசுட்டுவதும் நோக்கத்தக்கது. பிறிதோரிடத்தில் அவரது பதிப்புக் குறித்துக் கீழ்வருமாறு குறிப்பிடுவார் :

> உண்மையிலேயே நாவலர் அவர்களைத் தமிழ் மூலபாடத் திறனாய்வின் முதற் பேராசிரியர் என்று குறிப்பிடுவதில் தவறில்லை. மூலபாடத் திறனாய்வு பற்றிய நுட்பங்களை அறிந்திருப்பவர்களுக்கு இக்கூற்றின் உண்மைத் தன்மை நன்கு புலப்படும். அது மாத்திரம் அன்றி ஒரு பதிப்பு நல்ல பதிப்பாயும் உண்மைப் பதிப்பாயும் அமையவேண்டுமென வலியுறுத்தி, அது பற்றிய மூலபாடத் திறனாய்வுக் கோட்பாடுகளைத் தமிழில் முன்வைத்து, பின்வந்த மூலபாடத் திறனாய்வாளர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தவரும் நாவலரவர்களே ஆவார் (கனகரத்தினம், இரா.வை., 2008: 57).

இக்கூற்று பதிப்புச் செயற்பாடு ஆய்வுவழிப்பட்டதே என்பதனை வலியுறுத்தி நிற்கும். தாமோதரம்பிள்ளை முதலானோரின் பதிப்புச் செயற்பாடுகளுக்கும் இக்கூற்றுப் பொருந்தும். பதிப்பு முயற்சிகளுக்கு அப்பால் தமது பதிப்புரைகள் வாயிலாக தாமோதரம்பிள்ளை ஆய்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்தியிருந்தார். தாமோதரம்பிள்ளையின் பதிப்புரைகளில் வெளிப்பட்டு நிற்கும் 'தமிழின் தொன்மை' பற்றிய கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன. அவ்வாறே, வீரசோழியப் பதிப்புரை மூலம் தமிழ் இலக்கிய வரலாற்றெழுதுகைக்கான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. வீரசோழியப் பதிப்புரையிலே தமிழ் இலக்கியங்களை அபோத காலம், அட்சர காலம், இலக்கண காலம், சமுதாய காலம், அநாதர காலம், இதிகாச காலம், ஆதின காலம் (பதிப்பாசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை, 1971: 22–51) எனப் பாகுபடுத்தி நோக்க விழைகிறார்.

ஆய்வு முறைமை, ஆய்வறிவுச் சிந்தனை என்பன வளர்ச்சி பெற்ற தற்காலத்தில் அவரது பாகுபாடு பொருத்தமற்றதாகிவிடுகின்றது. ஆயினும், தமிழ் இலக்கிய வரலாற்றைப் பாகுபடுத்தி, சமூகவியல்

அடிப்படையில் பின்நாட்களில் ஆய்வுகளையும் வரலாற்றெழுதியல் முயற்சிகளையும் மேற்கொண்ட இன்றைய அறிஞர்களுக்கு அவர் முன்னோடியாய்த் திகழ்ந்தார். இவ்வாறாக பதிப்பு முயற்சிகள் மூலமாகவும் பதிப்புரைகளின் வழியாகவும் ஆய்வுச் சிந்தனைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

**கட்டுரைகள், நூலாக்கம் வாயிலாக வெளிப்படும் ஆய்வுச் சிந்தனைகள்**

தமிழகச் சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வி ஏற்படுத்திய தாக்கத்தினால் தமிழாராய்ச்சி புதிய திசைவெளிகளை நோக்கி நகரத் தொடங்கியது. மேனாட்டு ஆய்வு அனுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள், ஆங்கிலக் கல்வியின் பின்புலத்திலேயே வெளிவந்தன. அக்காலத்தில் ஆய்வுகளை மேற்கொண்டோரின் கல்விப் பின்புலத்தை நோக்கும்போது இக்கருத்துத் தெற்றெனப் புலனாகும். இலங்கையிலும் புதிய திசைவெளிகளை நோக்கித் தமிழாராய்ச்சி நகர்வதற்கு ஆங்கிலக் கல்வியே துணைநின்றது. தமிழிலக்கிய வரலாற்றுப் பாகுபாடு தொடர்பில் மேலே விதந்து போற்றப்பட்ட சி.வை.தாமோதரம்பிள்ளைகூட, காலநிர்ணயம், காலவாராய்ச்சி பற்றிய சிந்தனையை மேலைத்தேயத்தவரின் கல்விப் பின்னணியிலேயே பெற்றுக்கொண்டார் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இலக்கியப் போக்கை மேலோட்டமாக நோக்கும் ஒருவர்கூட பத்தொன்பதாம் நூ ற்றாண்டில் இலங்கைத் தமிழ் இலக்கியம் பெற்ற வளத்தையும் அதற்கான காரணத்தையும் நன்குணர்வர். பத்திரிகை, மொழிபெயர்ப்பு, அகராதியாக்கம், பாடநூல், வசன நூல், இலக்கிய வரலாற்று எழுதுகை, புனைகதை, கலைக்களஞ்சியம் முதலான புதிய துறைகளின் தோற்றுவாய் ஆங்கிலக் கல்வி வழியாகச் சாத்தியப்பட்டவையே. இந்தப் பின்புலத்திலேயே ஆங்கிலக் கல்வி கற்றுக்கொண்ட ஒரு குழுவினர், தமிழ் இலக்கியம், இலக்கணம், தமிழர் வரலாறு, சமூக அமைப்பு, வழக்காறு, பண்பாடு முதலானவை குறித்து எழுத விழைந்தனர். மேற்குறித்த புலங்கள் சார்ந்த எழுத்துக்களைக் காலனித்துவ ஆட்சியாளர்கள் சிலர் வெளிக்கொணர்ந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இத்தகு ஆராய்ச்சிகளில் சைமன் காசிச்செட்டி, ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, வி.கனகசபைப்பிள்ளை, சபாபதி நாவலர் ஆகியோரின் ஆய்வுகளே இங்கு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இக்காலத்தில் கணேசையர் முதலான மரபுவழித் தமிழறிஞர்களும் இலக்கிய, இலக்கணங்கள் குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**சைமன் காசிச்செட்டியின் ஆய்வுகள்**

Extract from Kasi Kandam, Translation of the Sixth Chapter of Tiruvatavur Purana முதலான மொழிபெயர்ப்புகள் வழியாக தமிழ் நூல்களை மேலைத்தேயத்தவருக்கு அறிமுகப்படுத்த முனைந்த காசிச்செட்டியவர்கள் இலங்கைச் சூழல், பண்பாட்டு மரபுகள், சமூக நிலைமைகள், மொழி வழக்குகள், தமிழ் இலக்கியங்கள் ஆகியன குறித்தும் ஆங்கிலத்தில் எழுதிவந்துள்ளார். அவை Madras Government Gazette, Ceylon Government Gazette, Colombo Journal, Journal of the Royal Asiatic Society, Colombo Observer, Ceylon Magazine முதலான இதழ்களில் அவ்வப்போது வெளிவந்தன. நூல் வடிவிலும் அவரது எழுத்துக்கள் சில வெளிவந்தன. அவ்வெழுத்துக்கள் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் மேனாட்டாருக்கு அறியப்படுத்துவதனைப் பிரதான நோக்கமாகக்

கொண்டிருந்த போதிலும், அவை ஆய்வுவழிப்பட்ட சிந்தனையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அவரது ஆக்கங்களில் தமிழ் புளூட்டாக் மிகுந்த கவனிப்புக்குரியது. ஆங்கில நெடுங்கணக்கின்படி 197 தமிழ்ப் புலவர்களின் சரிதங்களை எடுத்துரைக்கும் இந்நூலாக்கம், தமிழ் இலக்கிய வரலாற்றெழுதுகையின் முதன் முயற்சியாகவும் அமைகிறது. தமது காலத்தில் புலவர்கள் தொடர்பில் தெரிய வந்த செய்திகளை ஆதாரமாகக் கொண்டும் கர்ண பரம்பரைக் கதைகளைத் துணைக்கொண்டு தன் நுண்ணறிவால் பெற்றுக்கொண்ட புலவர்கள் பற்றிய செய்திகளை இணைத்தும் தமிழ் புளூட்டாக்கை எழுதியுள்ளார்.

இலக்கிய வரலாற்று எழுதுநெறி ஆய்வில் முன்னோடி அறிஞர்களுள் ஒருவரான றெனே வெலெக், இலக்கிய வரலாற்று ஆய்வு தோன்றிய முறையினைப் பின்வருமாறு விளக்குவார் :

> இலக்கிய வரலாற்றின் எழுச்சி வேகமற்ற, ஆறுதலான ஒரு நடைமுறையாகவே இருந்தது. அதனை நவீன விமர்சனம், வாழ்க்கை வரலாற்றியல், வரலாறெழுது முறையியல் ஆகியவற்றுடன் மிக்க நெருக்கமாகத் தொடர்புபடுத்திப் பார்க்காவிடின் விளங்கிக்கொள்ளவே முடியாது. இது மனித இனத்தின் ஆய்வறிவு வரலாற்றின் மிகப் பெரிய புரட்சிகளிலொன்றினதும் வரலாற்றுணர்வினதும் நவீன சுயபிரக்ஞையினதும் ஓர் அம்சமாகும் (பார்க்க: சிவத்தம்பி, கா., 2000: 57).

அவர் கருதுவதுபோலவே வரலாற்றுணர்வினதும் சுயபிரக்ஞையினதும் விளைவாகவே ஈழத்திலும் தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுகை உதயம் பெற்றது. அத்தகைய எழுதுகையானது வாழ்க்கை வரலாற்றெழுதுகையில் – புலவர் வரலாற்றெழுதுகையில் இருந்தே தொடக்கம் பெறுவதனையும் ஈழத்தில் அவதானிக்கலாம். வாழ்க்கை வரலாறு என்பது தனிமனித வாழ்க்கை வரலாற்றையோ பல தனிமனித வாழ்க்கை வரலாற்றின் தொகுப்பையோ கொண்டதாய் அமையலாம். அந்தவகையில், தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுகைக்கான முதன் முயற்சியாகிய 'தமிழ் புளூட்டாக்' (The Tamil Plutarch - 1859) பல தமிழ்ப் புலவர்களின் வரலாற்றுத் தொகுப்பாகவே அமைந்திருந்தது.

அந்நூலின் வாயிலாக புலவர்களின் காலத்தையும் இலக்கியப் படைப்பாளிகளின் காலத்தையும் சைமன் காசிச்செட்டி கணித்தாய முற்பட்டுள்ளமையையும் (காலவாராய்ச்சி) காணமுடிகிறது. நூலின் காலம் இன்றி, இலக்கியத்தை முழுவதும் புரிதல் கடினம், இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பது கடினம், இலக்கியத்தால் அறியப்படும் சமூக, அரசியல் வரலாற்றைப் புரிதல் கடினம் என்பதைக் காசிச்செட்டி உணர்ந்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றுக்குக் கால நிர்ணயம் இன்றியமையாதது என்பதைப் பிற்சந்ததியினருக்கு உணர்த்தியுமுள்ளார். தமக்குக் கிடைத்த துணைச் சான்றுகள் வழியும், நூலின் அகச் சான்றுகள் வழியும் கால நிர்ணயம் செய்ய முனைந்துள்ளார். எடுத்துக்காட்டாகச் சில சான்றுகளைக் குறிப்பிட முடியும் :

அ) துணைச் சான்றுகளின் வழி காலத்தை நிறுவுதல் : கந்தபுராண ஆசிரியர் காலத்தைப் பரசிராம முதலியார் எழுதிய கந்தபுராண வாசகம் என்னும் நூலிலே எடுத்தாளப்பட்டுள்ள செய்யுளை ஆதாரமாகக் கொண்டு நிறுவ முயன்றுள்ளார். அச்செய்யுளிலே கந்தபுராணம் சகாப்தம் 700இல் பாடப்பட்டது என்னும் செய்தி

காணப்படுகிறது. எனவே, கி.பி. 778இல் கந்தபுராணம் பாடப்பட்டதாகக் காசிச்செட்டியவர்கள் கருதினார்.

ஆ) அகச் சான்றுகளின் வழி காலத்தை நிறுவுதல் : சிவவாக்கியர் காலத்தை இன்று சிலர் பட்டணத்துப் பிள்ளையாருக்கு முற்பட்டது என வரையறுப்பர். ஆனால், காசிச்செட்டியவர்கள் சிவவாக்கியார் பாடலில் காணப்படும் செய்தியைப் பயன்படுத்தினார். "இவர் வாழ்ந்த காலத்தைப் பலவாறு கூறுவர். ஆனால், அதனைத் தக்காணத்திற்குள்ளே முகமதியர் ஊடறுப்பதற்கு முற்பட்டது என்று கூற முடியாது. ஏனெனில் அவர் முகமதியரை தம் நூலில் சுட்டியுள்ளார்" என்று குறிப்பிடுவார், காசிச்செட்டி.

இவை மட்டுமல்லாமல் நூலாசிரியர் யாரென்பதைத் துணிவதிலும் முயன்றுள்ளார். "அகத்தியரின் பெயரால் வழங்கப்படும் 'இருநூற்றஞ்சு' என்னும் நூலையும் 'பூரண சூத்திரம்' என்னும் நூலையும் அகத்தியர் இயற்றவில்லை என்று கூறவந்த காசிச்செட்டியவர்கள், முன்கூறப்பட்ட நூலிலே பறங்கி வியாதியும் பின்கூறப்பட்ட நூலிலே பறங்கி பாஷணமும் கூறப்படுவதனால் இவை போர்த்துக்கேயர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு இயற்றப்படவில்லை என்றுரைக்கிறார்" (பூலோகசிங்கம், பொ., 2002: 14).

இவ்வாறு பல்வேறு தளங்களில் புளூட்டாக்கின் வழியாக தமிழாராய்ச்சியின் வளர்ச்சிக்குக் கணிசமான பங்களிப்பை காசிச்செட்டியவர்கள் வழங்கியிருப்பினும், அவரது கருத்துக்கள், முடிபுகளில் பல, குறைபாடுடையனவாகவும் தவறானவையாகவும் விளங்குகின்றன. உதாரணமாக திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றைச் செய்த மாணிக்கவாசகர் 'குவலயானந்தம்' எனும் இலக்கண நூலையும் எழுதியதாகக் குறிப்பிடுவதனைச் சுட்டிக்காட்டலாம். உண்மையில் சந்திராலோகம் என்னும் வடமொழி அணி இலக்கண நூலுக்கு எழுந்த வடமொழி நூலுரையே குவலயானந்தம். இதனை அப்பைய தீட்சிதர் எழுதினார். அப்பைய தீட்சிதரின் உரையை மாணிக்கவாசகர் மொழிபெயர்த்தார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெயரொற்றுமையை மாத்திரம் கருத்திற்கொண்டு காசிச்செட்டியவர்கள் இவ்வாறு கருத்துரைத்தார்.

இத்தகைய தவறுகளும் குறைபாடுகளும் நூலிற் பலவிடங்களில் காணப்படுகின்றன என்பது ஏற்புடையதே. மறுவார்த்தையில் கூறின், காசிச்செட்டியின் தமிழ்ப் புலவர் வரலாறு குறைபாடுடையதே. ஆயினும், அந்நூல் தோன்றிய காலச் சூழலில் நின்று நோக்குகையில் இந்நூலாக்கத்தின் வரலாற்று முக்கியத்துவமும் மகத்துவமும் புரியும். தமிழர்தம் பாரம்பரியத்தையும் அவர்தம் கலாசாரத்தையும் துல்லியமாக எடுத்துக்காட்டும் நூல்களில் பல பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறிலேகூட பதிப்பிக்கப்படவில்லை. தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுகைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகள்கூடப் பூர்த்திசெய்யப்படாத சூழலே நிலவியது. மேனாட்டு அனுகுமுறைகளைக் கொண்டு சிறப்பான ஆய்வுகளை அக்காலத்தில் வெளிப்படுத்தியவர் எனக் கருதப்படும் கால்ட்வெல்கூட தமிழ் இலக்கிய வரலாறு கி.பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டிலே தொடங்குவதாகக் கருதினார். கால்ட்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வெளிவந்து இரு வருடங்களின் பின்னர் தமிழ் புளூட்டாக் வெளிவருகிறது. அக்குறிப்பிட்ட கால இடைவெளியில் குறிப்பிடத்தக்கதாகத் தமிழாராய்ச்சிகள் இடம்பெறவில்லை. இச்சூழலில் தமிழ்ப் புளூட்டாக் ஆசிரியர் தமிழ் இலக்கிய சரிதத்தை வெளிப்படுத்தியமை அரிய முயற்சியே. சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் இலக்கிய வரலாற்றை – புலவர் வரலாற்றை – எழுத முனைந்தவருக்கு இருந்திருக்கக்கூடிய இடர்பாடுகளை

மனதிலிருத்தி நோக்கும்போது காசிச்செட்டியின் முயற்சி பாராட்டுக்குரியதே.

புலவர் வரலாற்றெழுதுகைக்கு அப்பால் இலங்கையின் புவியியல் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு மக்களின் பழக்கவழக்கங்கள், நிறுவன அமைப்புகள், விவசாயம், வர்த்தகம், தொழில் உற்பத்திப் பொருட்கள், சனத்தொகை, சாதி, சமயம், வரலாறு என்பன குறித்து எழுதிய 'சிலோன் கசற்றியர்' எனும் நூலும் குறிப்பிடத்தக்கது. தமிழ் புளூட்டாக், சிலோன் கசற்றியர் ஆகிய நூல்கள் தவிர்த்து, சமூகவியல், தொல்லியல், மொழியியல் சார்ந்தும் தமது ஆய்வுச் சிந்தனைகளைக் கட்டுரையாக்கங்களாக வெளிப்படுத்தியுள்ளார். A correct outline of the classification of the Tamil castes, An essay on the ceremonies by the Tamil castes, Essay on the manners and customs of the moors of Ceylon, Creation and fall of Adam according to Mohamedan Legends, Remarks on the origin and history of the Parawas, A Summary Account of the Origin and History of the Mukwas in the District of Puttalam முதலானவை சமூகவியல் ஆய்வுப் புலம்சார்ந்தும் Remarks on the site and ruins of Tammanna Nuwara with a survey (1841), An account of some ancient coins found at Colpentyn (1839), Rock Inscription of Piramanankandal, Translation of a Royal Grant engraved on a copper Plate ஆகியன தொல்லியல் ஆய்வுப் புலம்சார்ந்தும் On the affinity between the Maldivian and Sinhalese Languages (1830), On the affinity between the Javanese and Sanskrit Languages (1831), On the Rodiyas with specimen of their language ஆகியன மொழியியல் ஆய்வுப் புலம்சார்ந்தும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் ஆய்வு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பத்திரிகையாசிரியர், கிறிஸ்தவ இலக்கிய கர்த்தா, அற இலக்கிய கர்த்தா, அறிவியல் நூலாசிரியர் எனப் பல தளங்களிலும் செயற்பட்ட ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் 'பாவலர் சரித்திர தீபகம்' எனும் நூல் தமிழ்ப் புலவர் வரலாற்று எழுதுகையாக அமைந்துவிடுகின்றது. தமிழ் புளூட்டாக்கில் (1859) தொடங்கப்பட்ட தமிழ்ப் புலவர் வரலாற்றெழுதுகை பாவலர் சரித்திர தீபகத்தில் (1886) இன்னொரு தளத்தை எட்டிவிடுகிறது. 410 பாவலர்களின் சரிதமாக இந்நூல் வெளிவந்தது (இவர்களில் 82 புலவர்கள் ஈழத்தைச் சேர்ந்தவர்கள்).

ஈழத்தில் வெளிவந்த இரண்டாவது தமிழ்ப் புலவர் சரிதமாகவும் தமிழ்மொழியில் வெளிவந்த முதலாவது தமிழ்ப் புலவர் சரிதமுமாக பாவலர் சரித்திர தீபகம் (1886) விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்நூலின் தோற்றத்திற்கு சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளூட்டாக் (1859) காரணமாயிருந்தது என்பதனை – தமிழ் புளூட்டாக்கை விரித்தெழுதும் முயற்சியாகவே பாவலர் சரித்திர தீபகம் எழுந்தது என்பதனை – சதாசிவம்பிள்ளையின் நூலில் இடம்பெறும் பாயிரப் பகுதியும் ஆங்கில முன்னுரையும் குறிப்பிடுகின்றன. நண்பரொருவர் தமிழ் புளூட்டாக்கின் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிடுமாறு தூண்டியதன் பேரில் மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட சதாசிவம்பிள்ளை, அந்நூலை விரித்தெழுத வாய்ப்புண்டு என்பதனை உணர்ந்து பாவலர் சரித்திர தீபகம் எனும் நூலை 410 புலவர்களின் வரலாறாக எழுதியுள்ளார்.

தமிழ் புளூட்டாக் தரும் புலவர்கள் தொடர்பான கருத்துக்களை விரித்தெழுதுதல், புதிதாகப் பல புலவர்களின் சரிதத்தை எழுதுதல், காசிச்செட்டி தவறிய இடங்களைத் திருத்துதல் என்ற அடிப்படையில்

இந்நூலாக்கம் விரிவுபெற்றுள்ளது. தமிழ் புளூட்டாக்கில் இஸ்லாமியப் புலவர்களின் சரிதங்கள் எவையும் இடம்பெறாமையைக் கண்ணுற்ற சதாசிவம்பிள்ளை உமறுப் புலவர், அலியார் புலவர், சவாதுப் புலவர், சர்க்கரைப் புலவர், ஐயன்பேட்டை மதாறுசாகிப் புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு புலவர், வண்ணக் களஞ்சியப் புலவர், பாசிப் பட்டணம் நயினாமுகமதுப் புலவர், அதிவீர ராபட்டணம் முகமதுசைன் புலவர் ஆகியோரைத் தமது நூலிலே இணைத்துக்கொண்டார். அவ்வாறே தமிழ் புளூட்டாக் வெளிவருவதற்கு முன்னர் தேகவியோகமடைந்திருந்தும் தமிழ் புளூராக்கில் இடம்பெறாது போன முப்பதுக்கும் மேற்பட்ட ஈழத்துப் புலவர்களின் சரிதங்களையும் தமிழ் புளூராக் தோன்றியதன் பிற்பாடு மறைந்த புலவர்கள் சரிதங்களையும் இணைத்துக் கொண்டார்.

சைமன் காசிச்செட்டியின் நூல் தரவுகளை பல இடங்களில் விரித்தெழுதியுமுள்ளார். சரவணமுத்துப் புலவர், கணபதி ஐயர், கவிராச பண்டிதர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். சேக்கிழார், சேரமான் பெருமான், ஞானப்பிரகாச தேசிகர், தாண்டவமூர்த்தி, தாயுமானசுவாமி, திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருமூல நாயனார், திருவள்ளுவநாயனார், திருவேங்கடசுவாமி முதலானோரின் சரிதங்கள் அவ்வகைத்தன. அதுபோலவே தமிழ் புளூராக் ஆசிரியர் விட்ட தவறுகளைச் சில இடங்களில் திருத்திச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. கண்ணுடைய வள்ளலின் ஒழிவிலொடுக்கத்தை சாந்தலிங்க தேசிகர் இயற்றினார் என காசிச்செட்டியவர்கள் கூறிய தவறினைத் திருத்தியுள்ளார் (சதாசிவம்பிள்ளை, அ., 1979: 197). ஒழிவிலொடுக்கம் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் உரையோடும் கருங்குழி இராமலிங்கசுவாமிகளின் பாயிரவிருத்தியுரையோடும் பாவலர் சரித்திர தீபகம் எழுதப்படுவதற்கு முன்னமே (1851 ஆம் ஆண்டு) பதிப்பிக்கப்பட்டிருந்தமை இதற்குக் காரணமாகும். சேந்தன் திவாகரத்தின் ஆசிரியர் சேந்தனார் எனக் காசிச்செட்டி கூறியதை மறுத்து, அந்நூலின் ஆசிரியர் திவாகரர் என்பார், சதாசிவம்பிள்ளை.

பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் இத்தன்மையதாக தனது நூலை ஆக்குவதற்குப் பக்கபலமாய்ச் சில விடயங்கள் அமைந்திருந்தன. சைமன் காசிச்செட்டி கற்பிட்டியில் பிறந்து வளர்ந்தவர். சிலாபம் பகுதியில் பணியில் அமர்த்தப்பட்டவர். அவர் வாழ்ந்த பிரதேசமும் தொழிற்றுறையும் தமிழோடு பெரிதும் தொடர்பற்றவை. அத்தகு நிலையில், புலவர்கள் தொடர்பில் தாம் அறிந்த செய்திகளை நூலாக வெளிக்கொணர முனைந்துள்ளார். இந்தளவில் அவரது முயற்சி பாராட்டத்தக்கதே. சதாசிவம்பிள்ளையோ தமிழ் சிறப்பாய் வழங்கும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர், தமிழாசிரியராகப் பணியாற்றியவர், பத்திராதிபராகப் பணி புரிந்து அறிஞர்களோடும் புலவர்களோடும் நெருங்கிப் பழகியவர். இந்நிலையில் புலவர்கள் தொடர்பில் அதிகளவான தகவல்களை அறியக்கூடியவராக சதாசிவம்பிள்ளை விளங்கினார். சதாசிவம்பிள்ளையின் காலத்தில் தமிழ் நூல்கள் பல பதிப்பிக்கப்பெற்று வெளிவந்தாயிற்று. இந்நிலையில் புலவர்கள் தொடர்பில் விரிந்த கருத்துரைக்கக்கூடிய வாய்ப்பு சதாசிவம்பிள்ளைக்குக் கிடைத்தது.

மேற்குறித்தவாறான வாய்ப்புக்கள் கிடைத்தபோதிலும் சில தமிழ்ப் புலவர்களின் சரிதத்தை சதாசிவம்பிள்ளை அறிந்திருக்கவில்லை என்பதை அவரது நூல் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. அத்தகைய புலவர்கள் தொடர்பில் கருத்துரைக்கையில் தமிழ் புளூட்டாக்கில் உள்ள தகவலை அவ்வாறே மொழிபெயர்த்துள்ளமையினைக் காணலாம். சாத்தனார், கீரந்தையார், கோதமனார், கொடிஞாழன் மாணி பூதனார், களத்தூர்க்கிழார், காரிக்கண்ணனார், கோவூர்க்கிழார், செங்குன்றூர்க்கிழார், செயலூர்க் கொடுஞ்

செங்கண்ணனார், அரிசிற்கிழார், இழிகட் பெருங்கண்ணனார் முதலானோர் பற்றிய (திருவள்ளுவமாலையில் இடம்பெறும் பாடல்களின் ஆசிரியர்) குறிப்புக்களை தமிழ் புளூராக்கைப் பின்பற்றி அவ்வாறே வழங்கியுள்ளார். குலசேகரப்பெருமாள், சிவவாக்கியர், சீத்தலைச் சாத்தனார், தாண்டவராய முதலியார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் முதலான பல புலவர்களின் சரிதங்களும் தமிழ் புளூட்டாக்கின் மொழிபெயர்ப்பாகவே அமைந்துவிடுகின்றன.

பாவலர் சரித்திர தீபக ஆசிரியர், காசிச்செட்டியவர்கள் தவறிய சில இடங்களைத் திருத்திக்கொண்டபோதிலும், சில இடங்களில் தாமும் தவறியுள்ளமையை அவதானிக்க முடிகிறது. மாணிக்கவாசகரை குவலயானந்தம் என்னும் நூலின் ஆசிரியராகவும் ஓட்டக்கூத்தரைக் கலிங்கத்துப் பரணியின் ஆசிரியராகவும் காசிச்செட்டியைப் பின்பற்றி சதாசிவம்பிள்ளை பிழைபட உரைத்துள்ளமை தக்க எடுத்துக்காட்டுகளாகும். பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் புதிதாகக் கூறவிழைந்த புலவர்கள் குறித்து தவறிய இடங்களும் இருக்கத்தான் செய்கின்றன. பாகவத புராணத்தின் ஆசிரியராக ஆரியப்ப புலவரைக் கொண்டது அவற்றிற் குறிப்பிடத்தக்கது. பாவலர் சரித்திர தீபகத்திற் சதாசிவம்பிள்ளை பாகவத புராணத்தின் ஆசிரியர் பெயரை மாறுபட உரைத்துள்ளார். கோமளபுரம் இராசகோபாலப்பிள்ளை பதிப்பித்து வெளிப்படுத்திய பாகவத புராணத்தில் அதன் ஆசிரியர் ஆரியப்ப புலவர் என்றும் அக்கூற்றுக்கு ஆதாரமாக அபியுக்தர் ஒருவர் பாடிய வெண்பாவையும் வழங்கியிருந்தார். அதனைக் கண்ணுற்ற சதாசிவம்பிள்ளை பாவலர் சரித்திர தீபகத்தின் பட்டியலில் ஆரியப்ப புலவர் என்றொருவரையும் இணைத்துக்கொண்டார். உண்மையில் பாகவதத்தைப் பாடியவர் ஆரியப்ப புலவரல்லர். பாண்டிய நாட்டிலுள்ள வேம்பத்தூரினைச் சேர்ந்த செவ்வைச்சூடுவார் என்னும் பிராமணரேயாவார். செவ்வைச் சூடுவாரின் காலம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு ஆகும்.

பாவலர் சரித்திர தீபகத்தின் வருகைக்குப் பின்னர் தமிழாராய்ச்சி மேலும் விரிவடையத் தொடங்கியது. அத்தகைய ஆராய்சிகள் புலவர்களின் கால நிர்ணயம் தொடர்பிலும் படைப்பின் கால நிர்ணயம் தொடர்பிலும் நிகழ்ந்தன. ஒரு சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவனுடைய (புலவனுடைய) அனுபவமே இலக்கியமாகிறது என்ற அடிப்படையில் அவன் வாழ்ந்த சமுதாய அமைப்பு அவனது இலக்கியத்தைப் பாதித்த விதம், புலவனுடைய வாழ்க்கைச் சரித நிகழ்வுகள் என்பதெல்லாம் ஆராயப்பட்டன. அத்தோடு இலக்கிய வரலாற்றை நேர்கோட்டு ஒழுங்கில் ஒழுங்கமைக்கவும் அத்தகைய ஆராய்ச்சிகள் வேண்டப்பட்டன. அத்தகைய ஆராய்ச்சிகள் புலவர்கள் வாழ்ந்த காலம், இயற்றிய நூல்கள் பற்றிய உண்மைத் தரவுகள் பலவற்றை வெளிப்படுத்தின. நூற்பதிப்புத் துறையின் வளர்ச்சி புலவர்கள் பற்றிய தகவல்கள் விரிவுபடவும் ஏற்கனவே வெளிவந்த சரிதங்களின் கருத்துக்கள் மாறுபடவும் (திருத்திக் கொள்ளப்படவும்) காரணமாயின. சில புலவர்களின் வரலாறுகள் மீட்டெடுக்க முடியாமலும் போயின. இந்நிலையில், பாவலர் சரித்திர தீபகம் தோன்றி சுமார் தொண்ணூறு ஆண்டுகளின் பின்னர் பாவலர் சரித்திர தீபகம் தரும் செய்திகள் ஆராய்ச்சிக்குட்படுத்தி பூலோகசிங்கத்தால் பதிப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பாவலர் சரித்திர தீபகத்திற்கு ஆராய்ச்சிக் குறிப்பு வரைய விழைந்த பூலோகசிங்கம் அக்குறிப்புகளின் உண்மைத் தன்மையில் அதிகம் கவனம் கொண்டார். புலவர்கள், இலக்கியங்களின் காலம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தினார். இவற்றுக்கு அப்பால், பாவலர் சரித ஆசிரியரால் கூறாது ஒழிந்த சரிதச் சம்பவங்களையும் சரித ஆசிரியர் கூறாது ஒழிந்த படைப்புக்களையும் குறித்து விரிவாகப் பேசுவார். அத்தோடு சரித ஆசிரியர்

தந்த படைப்புக்களும் தாம் புதியதாகக் கூறிய படைப்புக்களும் அச்சேறிய வரலாற்றையும் படைப்புக்களுக்கு உரைவகுத்தோர் பற்றிய குறிப்புக்களையும் தந்து புலவர் வரலாற்றை மேலும் விரித்துச் சென்றுள்ளமையைப் பல இடங்களில் காணமுடிகிறது. தமிழ்நாட்டுப் புலவர்கள் தொடர்பில் வரைந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களிலும் பார்க்க அதிகளவான குறிப்புகள் ஈழத்துப் புலவர்கள் தொடர்பில் அமைந்துள்ளமையும் நோக்கத்தக்கது.

**வி.கனகசபைப்பிள்ளையின் ஆய்வுகள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேனாட்டவரும் இந்தியரும் எழுதிய வரலாற்று நூல்கள் தமிழகத்தின் பண்டைய வரலாற்றுக்குப் போதிய இடமளிக்காமையை உணர்ந்த வி.கனகசபைப்பிள்ளை (1855 – 1906), பண்டைத் தமிழர் வரலாறு குறித்து மதராஸ் றிவியூ (Madras Review) எனும் சஞ்சிகையில் 1895 ஆம் ஆண்டு கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். பின்பு அவை 1904 ஆம் ஆண்டு 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' (Tamils Eighteen Hundred Years Ago) என்ற நூலாக வெளிவந்தது (இந்நூலின் தமிழ் மொழியெர்ப்பு 1956 ஆம் ஆண்டு வெளிவந்தது). பண்டைய தமிழ் நூல்கள் தரும் செய்திகளையும் சாசனங்கள் தரும் செய்திகளையும் கொண்டு பண்டைத் தமிழரின் வரலாற்றைப் பல்வேறு கோணங்களிலும் நின்று விளக்க இந்நூலின் வாயிலாக முற்பட்டார். தமிழகத்தின் புவியியலமைப்பு, சமூக வாழ்க்கை, தமிழரின் இனங்களும் அவற்றின் கிளைகளும் என்று தொடரும் அந்நூலின் அதிகாரங்களே இதனை எடுத்து விளக்கும். தக்க ஆய்வறிவுப் புலமையோடு எழுதப்பட்ட நூலென்று இதனை அறிஞர் பலரும் சுட்டுவது தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் இந்நூலின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும். தமிழாராய்ச்சியின் வளர்ச்சி எனும் நூலை எழுதிய ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தற்காலத் தமிழ் ஆராய்ச்சியின் போக்கை (1850 களுக்குப் பின்னரான ஆராய்ச்சிகளை தற்காலத் தமிழாராய்ச்சி என வரையறுக்கிறார்) நான்கு காலப்பகுதிகளாக வகுக்கிறார். முதற் காலப்பகுதியின் சிறந்த ஆராய்ச்சி நூலாக கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தையும் இரண்டாம் காலப்பகுதியின் சிறந்த ஆராய்ச்சி நூலாக கனகசபைப்பிள்ளையின் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் எனும் நூலையும் குறிப்பிடுகின்றமை, பிள்ளையின் ஆராய்ச்சித்திறனை தெற்றென வெளிப்படுத்தி நிற்கின்றது (சுப்பிரமணிய ஐயர், ஏ.வி., 1959: xii).

பிள்ளையவர்கள் தமது ஆய்வுச் செயற்பாட்டை இந்நூலோடு மாத்திரம் நிறுத்திவிடவில்லை. சோழர் வரலாறு பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். இந்தியன் அன்ரிகுவரி (Indian Antiquary) என்னும் சஞ்சிகையிலே தமிழ் வரலாற்று மூலங்கள் என்ற தலைப்பில் (Tamil Hostorical Texts) சோழர் வரலாற்றுக்குரிய மூன்று நூல்களையும் கல்வெட்டொன்றையும் மொழிபெயர்த்தளித்தார். 'செந்தமிழ்' என்னும் சஞ்சிகையிலே சோழச் சக்கரவர்த்திகள் என்ற தொடரை (1902 – 1903) எழுதினார். இராஜராஜசோழன் பற்றியும் சோழர் வெற்றி பற்றியும் இரு சிறு நூல்களையும் எழுதினார் (பூலோகசிங்கம், பொ., 2002:165). இவை பிள்ளையவர்கள் சோழர் வரலாறு பற்றி விரிவாக எழுதும் நோக்கத்தைக் கொண்டிருந்தார் என்பதைப் புலப்படுத்துகின்றன. ஆயினும், அம்முயற்சி நிறைவேறவில்லை.

**சபாபதி நாவலரின் ஆய்வு**

மாவையந்தாதி, வடகோவைச் செல்வவிநாயகர் இரட்டைமணிமாலை, சிதம்பர சபாநாத புராணம் முதலான இலக்கியங்களைச் செய்த சபாபதி நாவலர் (1843 – 1903), திராவிடப் பிரகாசிகை (1899) என்னும்

இலக்கிய வரலாற்று நூலொன்றையும் ஆக்கியளித்துள்ளார். "திராவிடப் பிரகாசிகை என்னும் உரைநடை நூல் இவருக்கு அழியாப் பெருமை நாட்டியுள்ளது" (சதாசிவம், ஆ., 1966 : 235) என்பார், ஆ.சதாசிவம். இந்நூல் தமிழ் மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் ஆகிய ஐந்தியல்களில் தமிழ் இலக்கிய வரலாற்றை எடுத்துரைக்கிறது. நூலின் வகை, ஆசிரியர், காலம், பெயர்க்காரணம், அமைப்பு, உள்ளடக்கம் முதலான பல்வேறு விடயங்களை எடுத்துரைப்பதாக அமைகிறது. புலவர் வரலாறு – இலக்கிய வரலாறு – தொடர்பான சிந்தனை ஆங்கிலக் கல்வியைப் பயின்ற தமிழறிஞர்களிடம் மாத்திரம் குடிகொண்டிருக்கவில்லை என்பதற்கு திராவிடப் பிரகாசிகை சான்றாகிறது. இவ்விடயம் குறித்தும் இவ்விலக்கிய வரலாற்று நூலின் தன்மை குறித்தும் பின்வருமாறு கருத்துரைப்பார், சிவத்தம்பி :

> இலக்கியப் பாரம்பரிய நிதியம் பற்றிய பிரக்ஞையும் அதனை அதற்குரிய பின்னணியில் வைத்து நோக்குவதற்கான ஆசையும் ஆங்கிலம் தெரிந்த அறிஞர்களிடத்தே மாத்திரம், நாம் முன்னர் எடுத்துக்கூறியது போன்று காணப்படவில்லை. தமிழ் – சைவசித்தாந்த அறிவினை இணைத்து நோக்கும் புலவரும் இந்நோக்கினைக் கொண்டிருந்தனர் என்பது சபாபதி நாவலரால் 1899இல் எழுதப்பெற்ற திராவிடப் பிரகாசிகை மூலம் தெரியவருகின்றது. தமிழிலக்கியத்தைச் சைவஞ் சாராத நோக்கிலே விளக்குவதற்குத் தன் எதிர்ப்புக் குறிப்பினைத் தெரிவிக்கும் வகையில் சபாபதி நாவலர் தமிழின் இலக்கண, இலக்கிய மெய்யியற் பாரம்பரியங்களைச் சைவசித்தாந்தியாக நின்று எடுத்து விளக்கினார் (சிவத்தம்பி, கா., 2000:110).

**சி.கணேசையரின் ஆய்வுகள்**

1950கள் வரை மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகளில் வித்துவ சிரோமணி சி.கணேசையரின் ஆய்வுகளும் கவனத்திற்குரியன. புலவர் வரலாற்றாசிரியர், இலக்கிய உரையாசிரியர், இலக்கண ஆராய்ச்சியாளர் எனப் பல தளங்களில் நின்று செயற்பட்டவர், கணேசையர். அத்தகைய செயற்பாடுகள் யாவற்றிலும் அவரது ஆய்வறிவுத்திறனைக் கண்டுகொள்ளலாம். இரகுவமிச உரை, மகாபாரதம் சூதுபோர்ச்சருக்க உரை, ஒருதுறைக்கோவை உரை, அகநானூறு களிற்றுயானைநிரை உரை முதலியவை அவரது உரை முயற்சிகளாக விளங்குகின்றன. ஈழத்துப் புலவர் வரலாற்றாக்கமாக அமைந்த 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' (1939) எனும் நூலும் குறிப்பிடத்தக்கது. பொதுவான  தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுநெறிக்கு சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளூட்டாக்கும் ஆ.சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகமும் அடிப்படையாகின என்பது மேலே விளக்கப்பட்டது. அவ்வகையில் நோக்கின், ஈழத்து இலக்கிய வரலாற்றாக்கத்தின் முதன் முயற்சி கணேசையரின் 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' (1939) என்ற நூலாக்கத்தில் தொடங்குகிறது எனலாம் (இந்நூலாக்கத்திற்கு முன்னோடியாய் அமைந்த 'ஈழநாட்டுப் புலவர்' என்ற கட்டுரையை ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை 1914 இல் செந்தமிழ் பத்திரிகையில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது). இந்நூலில் புலவர்களின் வரலாற்றை அவர்களது இறந்த ஆண்டை முறையாகக் கொண்டு அமைத்துள்ளார். கம்பனும் உவமலங்காரமும், கவியின்பம், கந்தபுராண அருஞ்செய்யுள் விளக்கம், சீவகசிந்தாமணி உரைநயம், திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கம் முதலான கட்டுரைகள் இலக்கிய ஆய்வுச் சிந்தனையை வெளிப்படுத்தி நிற்பன.

கணேசையரின் மேற்படி முயற்சிகளில் ஆய்வறிவுச் சிந்தனை வெளிப்பட்டு நிற்பினும், தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் கணேசையரின் பங்களிப்பு இலக்கண ஆராய்ச்சிகளில் வாயிலாகவே முதன்மை பெறுகிறது என்று கூறுவது பொருத்தமுடையது. தொல்காப்பியம், நன்னூல் என்பனவற்றுக்குப் பல்வேறு ஆசிரியர்கள் கண்ட உரைகளையெல்லாம் ஒப்புநோக்கி ஆராய்ந்ததன் பயனாக எத்தனையோ புதிய விளக்கங்கள், திருத்தங்கள் என்பவற்றைக் கண்டுகொள்ளக் கூடியவராயினார். அவருடைய இலக்கண ஆராய்ச்சி முடிவுகள் கட்டுரைகளாக வெளிவந்தன. போலி எழுத்து, அளபெடை, பிறிதுபிறிதேற்றல், ஆறனுருபு பிறிதேற்றல், இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும், தொகைநிலை முதலான கட்டுரைகள் இவ்வகையில் சுட்டிக்காட்டத்தக்கன. ஐயர் கற்கும்பொழுதும் கற்பிக்கும்பொழுதும் ஏற்படுகின்ற சந்தேகங்களை வைத்துக்கொண்டு அவற்றைக் குறித்துப் பின் ஆராய்ந்து தனித்தனிக் கட்டுரைகளாக எழுதியுள்ளார் சிக்கலான விஷயங்களை விடுவிப்பனவாகவே ஐயரின் பல இலக்கணக் கட்டுரைகள் அமைகின்றன (சிவலிங்கராஜா, எஸ்., 2007: 17). தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், இலக்கண விளக்கம் முதலிய நூல்களை ஒப்பீட்டு அடிப்படையில் அணுகி மொழியின் வளர்ச்சிக்கட்டங்களைக் கோடிட்டுக்காட்டும் வகையிலும் இவரின் கட்டுரைகள் அமைந்துள்ளன (சிவலிங்கராஜா, எஸ்., 2007: 17). கணேசையர் இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளிலே காட்டிய திறமை, தொல்காப்பியம் முழுவதையும் தம்முடைய உரைவிளக்கக் குறிப்புகளோடு வெளியிடும் சந்தர்ப்பத்தை அவருக்குப் பெற்றுக்கொடுத்தமையும் நினைவுகூரத்தக்கது. மரபுவழித் தமிழறிஞர்களின் ஆராய்ச்சிசார் செயற்பாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே கணேசையரின் முயற்சிகள் இங்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவ் அடையாளப்படுத்தல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த மரபுவழித் தமிழறிஞர்களின் ஆய்வுமுயற்சிகள் விரிவாக ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்திநிற்கின்றன.

1950வரை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகளாக இதுவரை அடையாளப்படுத்தியவற்றைத் தமிழகத்து ஆய்வுச் சூழலோடு பொருத்திப்பார்க்கையில் தமிழகத்துக்கும் முன்னோடியாக விளங்கும் தமிழாராய்ச்சிகள் பல, இலங்கையராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளமை புலனாகிறது. சைமன் காசிச்செட்டி, ஆ.சதாசிவம்பிள்ளை ஆகியோர் புலவர் வரலாற்று எழுதுகையின் முன்னோடிகளாகின்றனர். தமிழ் இலக்கியங்களைக் காலப் பாகுபாட்டிற்குள் நின்று நோக்கியும் தமிழின் தொன்மை பற்றி எடுத்துரைத்தும் தமிழாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார், தாமோதரம்பிள்ளை. பண்டைத் தமிழர் குறித்த ஆய்வுகளுக்கு தமது ஆய்வு வாயிலாக வழிகாட்டி நிற்கிறார் வி.கனகசபைப்பிள்ளை. இலக்கண ஆராய்ச்சிகளுக்கு மூலவராக கணேசையர் விளங்கினார். இத்தகைய வரலாற்றியல் உண்மையை இதுவரையான நோக்கு புலப்படுத்தி நிற்கிறது. சுவாமி ஞானப்பிரகாசர், தனிநாயகம் அடிகளார், சுவாமி விபுலாநந்தர் முதலானோரது ஆய்வுகளையும் கவனம்கொள்ளும்போதே மேற்குறித்த கால எல்லைக்குள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சிகள் குறித்த பார்வை முழுமைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

அருணாசலம், க. (1997). இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

கனகரத்தினம், இரா.வை. (2008). ஆறுமுகநாவலர் வரலாறு – ஒரு சுருக்கம், அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு.

கனகரத்தினம், இரா.வை. (2017). நாவலர் : சிந்தையும் செயலும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சதாசிவம், ஆ. (1966). ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், சாகித்திய மண்டல வெளியீடு, கொழும்பு.

சதாசிவம்பிள்ளை, அ. (1979). பாவலர் சரித்திர தீபகம், பகுதி – 01 (இரண்டாம் பதிப்பு), பூலோகசிங்கம், பொ., (ப.ஆ.), கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

சிவத்தம்பி, கா. (2000). தமிழில் இலக்கிய வரலாறு (மூன்றாம் பதிப்பு), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

சிவலிங்கராஜா, எஸ். (2007). வித்துவ சிரோமணி சி.கணேசையர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சிவலிங்கராஜா, எஸ். (2004). ஈழத்து உரை மரபு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சுப்பிரமணிய ஐயர், ஏ.வி. (1959). தமிழாராய்ச்சியின் வளர்ச்சி, அமுத நிலையம், சென்னை.

பிரசாந்தன்,ஸ்ரீ., அனுசாந்தன், ஏ. (ப.ஆ.). (2018). கந்தபுராண கலாசாரம் – பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை கட்டுரைகள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

பூலோகசிங்கம், பொ. (2016). தமிழ் ஆய்வுச் சிந்தனை, கௌரிகாந்தன் (ப.ஆ), குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

பூலோகசிங்கம், பொ. (2002). தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர்கள் பெரு முயற்சிகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

வேலுப்பிள்ளை, ஆ. (2009). ஈழத்துப் பழைய இலக்கியங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.... (1971).

..............................., தாமோதரம் – பதிப்புரைகளின் தொகுப்பு, கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.

## Name of Reviewers

| | |
|---|---|
| Prof. (Dr.) MAM. Rameez | South Eastern University of Sri Lanka |
| Prof. V. Inpamohan | Eastern University, Sri Lanka |
| Prof. (Mrs.) Vigneswary Pavanesan | University of Jaffna, Sri Lanka |
| Prof. (Mrs.) S. Kesavan | Eastern University, Sri Lanka |
| Prof.S. Muhunthan | University of Jaffna, Sri Lanka |
| Dr. M. Nadira | Eastern University, Sri Lanka |
| Dr.S. Sivaretnam | Eastern University, Sri Lanka |
| Dr.R. Premkumar | Eastern University, Sri Lanka |
| Dr.S. Jeganathan | Eastern University, Sri Lanka |
| Dr.T. Selvamanoharan | University of Jaffna, Sri Lanka |
| Dr.R. Sarveswara | University of Jaffna, Sri Lanka |
| Dr.P. Sarawanakumar | University of Peradeniya |
| Mrs. Ruby Valentina Francis | Eastern University, Sri Lanka |
| Mr. P. Sachithananatham | Eastern Universty, Sri Lanka |
| Mr.V.Alagaratnam | Eastern University, Sri Lanka |
| Mr.M.T.M.Rizvi | Eastern University, Sri Lanka |
| Mr. S.K.Shivahaneshan | Eastern University, Sri Lanka |
| Mr.R.Rajeshkannan | University of Jaffna, Sri Lanka |